
கல்கி
KALKI
17.6.1962
30 காசு
விஜயா



வீட்டுச் சலவையின்
பெருமை
ஸர்ப் சலவையின்
அருமை
Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!

க்ரைமிக்ஸ் போட்டி



ரொக்கப் பரிசுகளாக ரூ. 8,000 பெறுங்கள்

உங்கள் குழந்தையை ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வைப்பதோடு இந்த மதிப்புள்ள ரொக்க பரிசுகளையும் பெறுங்கள்.

எல்லாவற்றிலும் சிறந்த க்ரைப் மிக்சர்தான் உங்கள் குழந்தைக்கு மிக உகந்தது. அதனாலேயே விவேகமுள்ள தாய்மார்கள் க்ரைமிக்ஸையே கேட்டு வாங்குகிறார்கள். குடல்வலி, வாயு மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளிலிருந்து க்ரைமிக்ஸ் நிவாரணமளிக்கிறது. பல் முளைக்கும் பருவத்திலும் தாய்ப்பாலூட்டலை மறக்கடிக்கும் சமயத்திலும்கூட குழந்தையை சந்தோசத்துடனிருக்க வைக்கிறது. பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பான க்ரைமிக்ஸை உங்கள் குழந்தைக்குக் கோருங்கள்.

விதிகளும் முறைகளும்:

1) குழந்தை பராமரிப்பு பற்றிய கீழ்க்கண்ட ஆறு குறிப்புகளை நீங்கள் கருதும் முக்கியத்துவப்படி வரிசைப்படுத்தி வையுங்கள். உதாரணமாக, நீங்கள் 4-வது குறிப்பு எல்லாவற்றிலும் அதிக முக்கியமானதென்று நினைத்தால், 4-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "1" என்று போடவும். 2-வது குறிப்பு அதற்கடுத்தபடியாக அதிக முக்கியமானதாகத் தோன்றினால், அப்பொழுது 2-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "2" என்று போடவும். இதேபோல மற்றவைகளையும் வரிசைப்படுத்துங்கள்.

2) பூர்த்தி செய்த போட்டிக் கூப்பனையும் க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் இணைத்து, "க்ரைமிக்ஸ் போட்டி", தபால்பெட்டி 680, பம்பாய்-1 என்ற **விலாசத்திற்கு 1962, ஜூன் 30ம் தேதிக்கு முன் அனுப்பவும்.**

3) போட்டி[illegible] கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு போட்டிக் கூப்பனுடனும் க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேல் பாகத்தைச் சேர்த்து அனுப்பவேண்டும்.

4) போட்டியில் சேர்ந்த எந்த ஒரு நபருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட மாட்டாது.

5) இந்தியாவில் வசிப்பவர்கள் மட்டுந்தான் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். பூட்ஸ் ப்யூர் ட்ரக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மற்றும் நேஷனல் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் பிரைவேட் லிமிடெட் கம்பெனிகளின் ஊழியர்களின் வேலை செய்வோரும் அவர்களது குடும்பத்தினரும் இப் போட்டியில் கலந்துகொள்ள அருகதையற்றவர்கள்.

6) ஜட்ஜுகளின் தீர்ப்பே முடிவானது. எவ்விதமான சந்தர்ப்பங்களிலும் இதைப்பற்றிய கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளக்கூடாது.

7) முதல் மூன்று பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இதர பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள்.

முதல் பரிசு
ரூ. 3,500

2-வது பரிசு
ரூ. 1,000

3-வது பரிசு
ரூ. 500

மற்றும்
30 பரிசுகள்
ரூ. 100 வீதம்

ஒவ்வொரு கூப்பனும் ஒரு க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் சேர்த்தே அனுப்பப்பட வேண்டும். க்ரைமிக்ஸ் Boots பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பு



முடிவு தேதி 30-6-62
வரை நீடிக்கப் பட்டுள்ளது



— போட்டிக் கூப்பன் —

"க்ரைமிக்ஸ் போட்டி"

தபால் பெட்டி நெ. 680, பம்பாய்-1

ஒரு குழந்தை ஆரோக்கியமாயும் மகிழ்ச்சியாயும் இருப்பது...

1. சிறந்த வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்திலும்
2. க்ரைமிக்ஸ் ஒழுங்காகச் சாப்பிடுவதால்
3. உணவில் சிறந்தமான பால் சேருவதால்
4. அதைக் குழந்தைகளின் குழுவில் வளர்ப்பதால்
5. பெற்றோர்கள் அன்புடன் கொஞ்சுவதாலும் சீராட்டுவதாலும்
6. தவறாமல் குளிப்பாட்டுவதால்

நான் விரும்பும் வரிசைக்கிரமம்		

பெயரும் விலாசமும் (கொட்டை எழுத்துக்களில்) ______________________

____


____

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதால், நான் போட்டியின் விதிகள் மற்றும் முறைகளுக்கு கட்டுப்படுவதுடன் ஜட்ஜுகளின் தீர்மானத்தை முடிவானதென்று சட்டப்படி சம்மதிக்கிறேன்.

______________________ கையொப்பம்

NATIONAL BG 8762





சுபகிருது, ஆனி மீ 3உ

கல்கி

ஜூன், 17, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

மிகப் பழங்கால முதலாகவே அமெரிக்கப் பூர்வீகக் குடிகள் புகையிலையைப் பரம் பொருளிடமிருந்து பெற்ற வரப்பிரசாதமாகப் போற்றித் தொழுததுண்டு. விசேஷச் சடங்குகளின்போது புகையிலையை யாகத் தீயிலிடுவதும், மழையற்ற வரட்சியின் போது பொடித்த புகையிலையைக் காற்றில் தூவிவிடுவதும், மீன்கள் கிடைக்காத போது கடலில் புகையிலைத் தூள்களை இறைப்பதும் அவர்களிடமிருந்த சம்பிரதாயம்.



புகையிலையின் வரலாறு... 2



பம்பாய்—57.


பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GT.702 TM

Greens' Advtg.



மலர் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

இதழ் 48

கல்லூரி போதனைமொழி

மனத்தெளிவை அளிப்பதே கல்வி என்பார்கள். ஆனால் தேசிய ஒருமைப் பாட்டுக் குழுவினரோ இந்தக் கல்வி விஷயத்தைத் தங்களால் முடிந்த அளவுக்குக் குட்டைக் குழப்பி யிருக்கிறார்கள்.

பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் போதனைமொழியாக இருக்க வேண்டுமெனச் சிலரும், ஹிந்திதான் அந்த அந்தஸ்தைப் பெற வேண்டுமென்று சிலரும், பிரதேச மொழிகளிலேயே போதனை நடைபெற வேண்டுமென்று சிலரும் கருதுகின்றனர். இந்த மூன்று கருத்துக்களிலும் சிறிது சிறிது எடுத்துச் சேர்த்து ஓர் அசட்டு அவியலை உருவாக்கி யிருக்கிறது தேசிய ஒருமைப்பாட்டுக் குழு.

> 'எல்லாப் பாடங்களுக்கும் ஆங்கிலம் போதனை மொழியாக இருக்கலாகாது; எனினும் மாணவர்களின் ஆங்கில ஞானத்தை வளப்படுத்த வேண்டும். தாய் மொழிகளே காலக்கிரமத்தில் அந்தந்தப் பிராந்தியங்களில் போதனை மொழியாக வேண்டும்; எனினும் சிற்சில கல்லூரிகளில் ஹிந்தியிலோ, ஆங்கிலத்திலோ போதனை நடப்பதில் தவறில்லை. எப்படியாயினும் கல்லூரிக் கட்டத்தில் ஹிந்தியும் கற்றுக் கொடுக்க வேண்டும். இறுதியில் ராஜ்யங்களிடையேயும், பல்கலைக் கழகங்களுக்கிடையேயும் ஹிந்திதான் இணைப்பு மொழியாக இருக்கும்'

என்றெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற கொள்கைகளைக் கொண்டு வலை பின்னி யிருக்கிறது அக்குழு. குழுவினர் ஒவ்வொருவருடைய விருப்பு வெறுப்பையும் ஒட்டி உருவான இந்த வெற்றுக் கொள்கையில் விவேகம் என்பதைச் சிறிதளவும் காணோம்.

ஒருமைப்பாட்டுக் குழுவில் ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டமே நிறைவேற வேண்டும் என்று விரும்பியபோதிலும், மாற்றாரையும் பகைத்துக்கொள்ளத் துணிவின்றித் தட்டிக் கொடுத்துக் கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாது போனால் ஹிந்தியே அகில இந்திய போதனை மொழியாக வேண்டும் என்று கருதுகிற பிடிவாதப் பித்தர்கள் பிராந்திய மொழிகளில் போதனை நடைபெற ஒப்புதல் அளித்திருப்பார்களா? பிரதேச மொழி மோகம் பிடித்தவர்கள்தாம் ஹிந்தியை ஒரு கட்டாய பாடமாக்க இணங்கி யிருப்பார்களா? அல்லது இருவித 'தேசபக்தர்'களும் பெரிய மனசு பண்ணி ஆங்கிலத்துக்கும் ஓர் இடம் அளிக்கத்தான் சம்மதித்திருப்பார்களா?

ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதைவிடக் கல்லூரிப் போதனை ஆங்கிலத்தில் நடக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும். தினந்தோறும் விஞ்ஞானமும் கலைகளும் விருத்தியடைந்து வருகின்றன. நம் நாட்டுச் சாதனைகளை உலகுக்கு அறிவிக்கவும், உலகில் மற்ற நாடுகளெல்லாம் காணும் சாதனைகளை நாம் அறியவும் உலக மொழியாகிய ஆங்கிலம் பெரிதும் அவசியமாகும்.

உலக அரங்கில் ஆங்கிலம் பெற்றுள்ள முக்கியத்துவத்தை யாருமே மறுக்க முடியவில்லை. எனவேதான் ஆங்கிலமும் ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டும் என்பதை யாவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனினும் ஆங்கிலத்தில் இதர பாடங்களைப் போதிப்பதற்கு மட்டும் அவர்கள் ஏனோ தயங்குகிறார்கள். எத்துறையில் ஆங்கிலம் நமது அன்றாட வாழ்க்கைக்கு அவசியமோ, எவ்விதத்தில் அது உலக நாடுகளுக்குச் சமதையாக நம்மை உயர்த்துமோ அந்த இனங்களில் அம் மொழியைப்

புறக்கணித்து விட்டு ஆங்கில இலக்கியமும், இலக்கணமும் படிக்க வேண்டும் என்று விதி வகுப்பதின் அசட்டுத்தனத்தை என்னென்பது? விஞ்ஞானத்தையும், கலைகளையும் பிரதேச மொழியிலோ ஹிந்தியிலோ படித்து விட்டு ஒப்புக்கு ஆங்கிலத்தையும் கட்டி அழுவதால் ஒரு பயனும் விளையாது.

நிற்க, இன்று கண்ணுக்கு மெய்யாக இந்நாட்டின் பல்வேறு பகுதிப் படிப்பாளிகளையும் ஒரு குடும்பமாக்கிக் காத்து வரும் ஆங்கில மொழிக்கு 'விதேச லேபிள்' ஒட்டுவது அநீதியாகும். 'ஆங்கிலத்தில் நாம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியை நலிவுறச் செய்வோம்; துர்ப்பலமான ஹிந்தியை எப்பாடு பட்டாவது வளர்த்து நாடு முழுவதற்கும் சுதேசச் சிமெண்டு பூசி ஒற்றுமை காண்போம்' என்று முழங்குகிறார்கள் சில அரசியல் வாதிகள்.

இந்தப் பிடிவாதத்தை அவர்கள் விட்டுவிடுவதற்கு வழி காண வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம்.

தேர்தல் துறைகளில் வல்லமை வாய்ந்த அரசியல்வாதிகள் போதனு மொழிப் பிரச்னையில் புகுந்து குழப்பாமல் கல்வித் துறையினரிடமே விட்டு விட வேண்டுமென வற்புறுத்துகிறோம். பல்கலைக் கழக ஆசிரியர்களும், வைஸ் சான்ஸலர்களும் தேச விரோதிகள் அல்ல. அறிவும் அநுபவமும் வாய்ந்த அவர்கள் இந்தப் போதனு மொழிப் பிரச்னையால் பாமர உணர்ச்சியைத் தூண்டி விட்டு, எவ்வித வெற்றியையும் பெற விரும்ப மாட்டார்கள்; அதற்கு அவசியமும் இல்லை. நாளைக்குப் பாடங்களைப் போதிக்க வேண்டியது அவர்களே. பரீட்சைகளை நடத்துவதும், மதிப்பீடு செய்வதும் அவர்கள் பொறுப்புத்தான்; எனவே அவர்கள்தாம் நம் நாட்டில் கல்வி முன்னேறுவதற்கு உபயோகமான யோசனைகளைக் கூறமுடியும். படிப்பைப் பற்றிக்கூட முடிவுகள் செய்யப் பேராசிரியர்களுக்குத் தெரியாது; அரசியல் வாதிகள்தாம் சர்வக்ஞர்கள் என்று நம் ஜனநாயக சர்க்கார் இறுமாந்து போகாதபடி கடவுள் காப்பாராக!

லஞ்சம் எப்படி ஒழியும்?

நிர்வாகத் துறையில் லஞ்சத்தின் கொடுமையும் ஊழலும் மலிந்து விட்டன என்பதை உணர்ந்து சர்க்கார் இவற்றைத் தடுக்க இந்திய குற்றச் சட்டத்தைத் திருத்தலாமா, அரசாங்க ஊழியர்கள் மீதுள்ள கண்காணிப்பு விதிகளைக் கடுமையாக்கலாமா, அல்லது அரசியல் நிர்ணயச் சட்ட ஷரத்துக்களில் கூட அவசியமான இடங்களில் திருத்தங்களைச் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கின்றனராம். இந்த விவரங்களை உள்நாட்டு அமைச்சர் திரு லால்பஹதூர் சாஸ்திரி சமீபத்தில் தெரிவித்தார்.

இந்தியக் குற்றச் சட்டம் மிகவும் விரிவானது. லஞ்ச ஊழல்களை இப்போதுள்ள சட்டங்களின் உதவியைக் கொண்டே சமாளித்துத் தவிர்ப்பது கஷ்டமல்ல. ஆனால் லஞ்ச ஊழல்களுக்கு முக்கியமாக உள்ள காரணங்களையும் சூழ்நிலைகளையும் நன்கு உணர்ந்து கொண்டு அவற்றைச் சீர்திருத்த வகை உண்டா என்பதை ஆலோசித்தால் அதிக பலன் விளையக்கூடும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் லஞ்சப் பேயும் ஊழலும் இப்போது காணப்படுவது போல் மலிந்து விடவில்லை. காந்திஜி அதையே கண்டு கலங்கினர். ஆனால் சென்ற பதினைந்து ஆண்டுகளில் நிலைமை எல்லா வகையிலும் வெறுப்பூட்டும் வண்ணம் மோசமாகி விட்டது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை கணக்கின்றிப் பெருகிவிட்டது. உத்தியோகங்களில் எத்தனை விதங்கள் உள்ளன என்று சொல்லி முடியாது. பெர்மிட்டுகளும், லைசென்சுகளும், கண்ட்ரோல்களும், ஒவ்வொரு அதிகாரியிடத்திலும், ஒவ்வொரு அந்தஸ்திலும் அதிகாரத்தைக் குவித்து விட்டன. கட்டுப்பாடுகளும் தடைகளும் மலிந்து கிடக்கும் நிர்வாக அமைப்பில், சர்க்காரை நம்பியே பிழைப்பை நடத்த வேண்டிய நிலைமையிலுள்ள வர்த்தகர்களும், வியாபாரிகளும், தொழிலதிபர்களும், சாதாரணக் குடும்பஸ்தர்களும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதிகாரிகளின் தயவை நாடவும், அவர்களுக்குத் தகுந்த சிபாரிசு செய்யவும், சிரமமின்றிக் காரியசித்தி செய்து கொடுக்கவும் ஒரு தனி வர்க்கமே இப்போது வளர்ந்து விட்டது. இந்தப் பயங்கரச் சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் அமைச்சர் கட்டத்திலிருந்து பிரதேச, பிராந்திய மண்டல கமிட்டி வரையில், நிர்வாகத்தில் தலையிடுவதும், அதிகாரிகளிடம் தங்கள் செல்வாக்கைத் தகாத முறையில் உப

யோகிப்பதும், இப்போதெல்லாம் சகஜமாகப் போய் விட்டது. இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸின் சோஷலிஸக் கொள்கையும் அதனின்று பிறக்கும் கண்ட்ரோல் லைசென்சு ஆட்சி முறையுமே. சட்டங்களுக்கு அப்பாற்பட்டவை இக் கொள்கைகள். காங்கிரஸ் கட்சியினரின் தலையீடுகளைத் தவிர்க்க எந்தச் சட்டத் திருத்தத்தினாலும் முடியாது. தடை விதிக்க வேண்டுவது அவசியம் என்றால் அவர்களுக்குத்தான் தடை விதிக்க வேண்டும். கண்காணிப்புத் தேவை என்றால், அவர்கள் நடவடிக்கைகளைத்தான் கண்காணிக்க வேண்டும்.

அணுஆயுத எதிர்ப்பு மகாநாடு

புதுதில்லியில் எத்தனையோ மகாநாடுகள் நடைபெறுகின்றன. அவற்றில் ஜூன் 16, 17, 18 தேதிகளில் காந்தி சமாதான ஸ்தாபனத்தின்சார்பில் நடைபெறவிருக்கும் அணு ஆயுத எதிர்ப்பு மகாநாடும் ஒன்று.

ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும், முன்னாள் ஜனாதிபதி ராஜன்பாபுவும் கலந்துகொள்ளுவதுடன் உலகத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் பல அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் மேதைகள், சமூகத் தொண்டர்கள் ஆகியோர் அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

மகாநாட்டின் இலட்சியம், உலக மக்களின் ஒருமித்த எதிர்ப்பை அணு ஆயுத அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள உலக வல்லரசுகளுக்குச் சந்தேகமற உணர்த்தி வைப்பது. இந்த இலட்சியம் எந்த அளவுக்கு நிறைவேறக்கூடும், வல்லரசுகள் எவ்வளவு தூரம் நெளிந்து கொடுக்கும் என்பதைப் பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாது. தனி மனிதர்கள் எவ்வளவுதான் தலைசிறந்த அறிவாளிகள் என்றாலும், அவர்கள் அபிப்பிராயம் அமெரிக்க, ருஷ்ய அரசாங்கங்கள் தமது கொள்கைகளைப் புனராலோசனை செய்யத் தக்க தூண்டுதலாகுமா என்பது சிந்திக்க வேண்டிய விஷயமாகும். இதனால்தான் ஒவ்வொரு நடுநிலைமை நாட்டு அரசாங்கமும் ஒரு சமாதானக் கப்பலைச் சோதனை நடைபெறும் ஸ்தலத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பெர்ராண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறினார்; அதை ராஜாஜியும் வலியுறுத்தினார்.

நமது அரசாங்கம் அவர்களது கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அரசாங்கம் நேரடியாக எந்த அணு ஆயுத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள இயலாது என்று நமது பிரதமர் தீர்மானித்து விட்டார். இந்தப் பின்னணியில் தான் தில்லி மகாநாடு நடைபெறுகிறது.

மகாநாட்டினால் உருப்படியான பலன் கிடைக்குமா என்று ஐயம் இருந்தாலும் அழைப்புக்களைத் தள்ள முடியாமல் ராஜாஜியும் இதில் பங்கு கொள்கிறார். அவரது அறிவும் ஆலோசனையும் உலகத்துக்கு இந்த நெருக்கடியானநிலைமையில் வழி காட்ட வேண்டும் என்று அவருக்கு நல் வாழ்த்துக்கூறி வழி அனுப்புகிறோம்.


என்ன சேதி?

பூசலுக்குப் புதுப் பதவி


உள்ளூர்ப் பூசல்களால் ராஜ்ய மந்திரி சபையில் இடம் பிடிக்கத் தவறிய சில காங்கிரஸ் தலைவர்கள் அகில இந்தியத் தலைவர்களாகப் பரிணமித்து விடுகிறார்கள். இதோ ஒரு புது உதாரணம்: ஸ்ரீ சஞ்சீவய்யா ஆந்திர ராஜ்யக் காங்கிரஸுக்குள் பல்கிப் பெருகிவிட்ட கட்சிப் பிரதி கட்சிகள் காரணமாக அங்கிருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டியவர் ஆகிவிட்டார். இப்போது அவர் காங்கிரஸ் மகாசபையின்அக்கிராஸனராக உயர்ந்துவிட்டார். குப்பைக்கு உதவாததை பிராமணனுக்குக்கொடுத்து விடு என்று சொன்ன கதையாயிற்று. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்குத் தலைமை தந்து விட்டோம் என்று காங்கிரஸ் மார்தட்டிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்து விட்டது.

இதே போல் சொந்த ராஜ்யமான உத்தரப் பிரதேசத்தில் செல்வாக்கு இழந்த ஸ்ரீ ஏ. பி. ஜெயின் மைசூர் தொகுதி யொன்றின் மக்கட்சபை உப தேர்தலில் வெற்றி கண்டுள்ளதையும் தேசிய ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டு என்று பெரிது படுத்துகிறது காங்கிரஸ்.


நகைப்புக்கிடமான விஷயங்களைப் பெருமிதமான சம்பவங்களாகத் திரித்துக் கூறி மேலும் பரிகாசத்துக்கு இடமாகியுள்ளது காங்கிரஸ்.




இவர்களை என்ன செய்வது ?



நந்தாவுக்கு ஒரு மேனகை



தாவரங்களின் வளர்ச்சிக்கு இசை உதவுகிறது



செய்து காட்டுவார்களா ?


காங்கிரஸ் கட்சியானது பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சி அடிப்படையில் போட்டியிடுவதில்லை என்று இப்பொழுது முடிவு செய்துள்ளதை மனமார வரவேற்கிறோம்.

ஆனால் காங்கிரஸின் இயல்பை உணர்ந்தவர்கள், இந்த முடிவைக் காங்கிரஸ் ஏமாற்று வித்தை செய்யாமல் உண்மையாகக் கடைப்பிடிக்குமா என்று ஐயுறத்தான் செய்வார்கள். காங்கிரஸ் மந்திரிகளும், காங்கிரஸ் ஆட்சியாளர்களிடம் செல்வாக்குப் பெற்றவர்களும் நகரசபைத் தேர்தல்களில் தலையிடாமல் இருப்பார்களா, தங்களுக்குத் துணையாக நிற்கக்கூடிய அபேட்சகர்களுக்கு உதவாமல் இருப்பார்களா என்று சந்தேகம் எழத்தான் செய்யும். காங்கிரஸின் தீர்மானம் அந்தரங்க சுத்தத்தோடு செய்யப்பட்டதா என மக்கள் விழிப்புடன் கவனித்து வரவேண்டும்.

கூட்டுறவின் இலட்சணம்

ராஜஸ்தானத்தில் வெகு வேகமாகக் கூட்டுறவுச் சங்கங்களும், பஞ்சாயத்துக்களும் ஏற்பட்டு வந்ததைக் கண்டு, சமூதாய நலத்திட்ட மந்திரி திரு எஸ். கே. தேவ் புளகாங்கிதம் அடைந்து வந்தார். இப்பொழுது அதன் சாயம் வெளுக்க ஆரம்பித்திருக்கிறது!

ராஜஸ்தானத்தில் 15,000 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று சொல்லிக் கொண்டார்கள். இவற்றில் பெரும்பான்மையான சங்கங்கள் காகிதத்தில் எழுத்தளவில்தான் இருக்கின்றனவே தவிர உண்மையில் தொடங்கப்படவே இல்லையாம். இருக்கும் ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களும் கழுதை தேய்ந்து கட்டெறும்பாவது போல் தேய்ந்து வருகின்றனவாம். கணக்கு வழக்குகளெல்லாம் மோசடி மயமாக இருக்கின்றனவாம். பரிசீலனைக்கு யாராவது சென்றால் அவர்கள் பயமுறுத்தப் படுகிறார்களாம். மந்திரிகளோ, ஊழலை ஒழிக்க ஒன்றும் செய்ய முடியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்களாம். ராஜஸ்தானத்தில் மட்டும் சுமார் மூன்று கோடி ரூபாய் வரை சர்க்கார் இந்தக் கூட்டுறவுச்சங்கங்களுக்காகச் செலவழித்திருக்கிறதாம்! அதாவது நடைமுறைக்கு ஒவ்வாத பைத்தியக்காரத் திட்டத்துக்காகப் பொது மக்கள் மீது வரிகள் விதித்துக் கசக்கிப் பிழிந்து வசூலித்த வரிப்பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது!



காணாமற் போன கடிதங்கள்

கொக்கி

இந்திய உணவு விவசாய மந்திரி திரு எஸ். கே. பாட்டீல் அவர்களுக்கு,

"மரங்களையும், மிருகங்களையும் நேசிக்கத் தெரிந்தால் தான் வீட்டில் மனைவியுடன் நேசமாக வாழ முடியும்" என்று தாங்கள் லோக சபையில் கூறி ஒரே நகைப்பையும் ஆரவாரத்தையும் உண்டாக்கி விட்டீர்கள். ஓர் அங்கத்தினர் உங்களை இடைமறித்து, "கல்யாணமாகாதவர்களுக்கு இந்த அறிவுரை பொருந்துமா?" என்று கேட்கவும் தவறவில்லை. வெறும் தமாஷாகவே, மனைவியை மரத்துடனும் மிருகத்துடனும் தாங்கள் ஒப்பிட்ட போதிலும் இதை லோக சபையில் போய் வெளியிட்டிருக்க வேண்டாம். இவையெல்லாம் வீட்டிலேயே பேசித் தீர்க்க வேண்டிய குடும்ப சமாசாரங்கள். 'லோக சபையில் மனைவியைப் பற்றிப் பயமில்லாமல் பேசலாம். 'அங்கு அவள் சுலபமாக வர முடியாது' என்ற தைரியத்தில் கணவர்கள் சார்பில் தாங்கள் இப்படிக் கூறி விட்டதாகத் தெரிகிறது. இதன் பிறகு, லோக சபையிலிருந்து வீடு திரும்பியதும் தங்கள் உரையைக் கேட்ட பல கணவர்களுடைய பரிதாபகரமான நிலைமையைப் பற்றித் தாங்கள் சிறிதும் சிந்தித்திருக்க மாட்டீர்கள். அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத் தங்களுக்கு அவகாசமும் இருந்திராது. மரங்களையும், மிருகங்களையும் பற்றி அன்பும், அநுதாபமும் கொண்டு பேச நினைத்த தாங்கள், மனத்தில் தோன்றியதைப் பட்டென்று சொல்லி விட்டீர்களென்று நினைக்கிறேன். இந்தப் பிரசங்கத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும், வீடுகளில் மனைவியர்கள் தாங்கள் வருணித்த வண்ணம் வெறும் அசைவற்ற மரங்களாகவோ, பசுவைப் போன்ற அப்பாவி மிருகங்களாகவோ ஆகியிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். லோக சபையிலிருந்து வீடு திரும்பியதும் தங்களுக்கு ஏதாவது அநுபவம் நேர்ந்திருந்தால் அதையும் தாங்கள் லோக சபையில் கட்டாயம் வெளியிட வேண்டும்!

— ஓர் அப்பாவிக் கணவன்





தெளிவு குருவின் திருமேனி காண்டல்; தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்; தெளிவு குரு உரு சிந்தித்தல்தானே

—திருமூலர் திருமந்திரம்

6. குருவைக் கண்டார்!

காலடியிலிருந்து சங்கரர் புறப்பட்டுத்தான் எத்தனை நாட்களாகி விட்டன? இன்னமும் அவர் அயராது, தளராது எங்கே சென்று கொண்டேயிருக்கிறார்? எத்தனை நாடுகள், எத்தனை காடுகள், எத்தனை மலைகள், எத்தனையெத்தனை ஆறுகளெல்லாம் கடந்தாகி விட்டது? எவ்வளவு விதமான மக்களை—வேறுபட்ட பழக்க வழக்கங்களும், மாறுபட்ட மொழிகளும் கொண்ட எத்தனை ராஜ்ய மாந்தர்களை—யெல்லாம் பார்த்தாகி விட்டது? இன்னமும் கால் சோர எங்கே இந்தக் குழந்தைத் துறவிசென்று கொண்டேயிருக்கிறார்? நடந்து நடந்து ரத்தம் கட்டிப் போய் அந்தக் கால்கள் அப்படிச் செவ்வாழைத் தண்டாகச் சிவந்து விட்டனவா? அல்லது அந்தி வானத்தின் சாயல்பட்டுத்தான் அவ்வண்ணத்தில் திகழ்கின்றனவா? எப்படியானாலும், முன்பு தூய பளிங்காக இருந்து





இப்போதுபவழமாக மாறிவிட்ட அந்தத் திருப்பாதங்களும் நின்றுவிட்டன. நிற்காமல்..? கரைபுரண்டோடும் இந்த நர்மதா நதியைக்கடக்க ஏதேனும் மார்க்கம் இருந்தால் தானே பயணத்தைத் தொடர முடியும்? ஆனால் சங்கரர் அந்த வெள்ளத்துக்காகத் தன் பிரயாணத்தை நிறுத்தியதாகத் தோன்றவில்லை. 'அப்பாடா, சேரவேண்டிய இடத்துக்கு வந்தாச்சு' என்ற ஒரு நிம்மதி தான் அவரிடம் காண்கிறதே ஒழியப் பிரவாகத்தைக் கண்டதில் திகைப்பேதும் தோன்றவில்லையே! அவரது சந்திர வதனத்திலுள்ள சுந்தர நயனங்கள் நாற்புறமும் சுழன்று எதைத் தேடுகின்றன? அக் குன்றிலுள்ள குகையில் அப்பார்வை ஏன் நிலைத்துப் படிகிறது? சங்கரரின் இளம் பாதங்கள் மெல்ல நடுங்குவது இத்துணைக் காலம் கால் சோர நடந்து விட்டு நின்றதன் எதிர்விளைவுதானா? அளவில் கையடக்கமானதும் அருளில் உலகை அடக்கியதுமான அவரது இதயம் இப்படித் துடிப்பது களைப்பினால் மட்டும் தானா? சந்திரனிலிருந்து அமுத பிந்துக்கள் பெருகுவது போல அவரது இன் முகத்தில் அரும்பிடும் வியர்வைத் துளிகள் ஆயாசத்துக்கு மட்டிலுமே தான் அறிகுறியா? இல்லை இல்லை...தான் பிறவி எடுத்ததன் பணியைத் தொடங்க யார் அநுமதிக்க வேண்டுமோ அவரைக் காணப் போகிறோம் என்பதில் சங்கரர் கொண்ட படபடப்புத்தான் இதற்கெல்லாம் காரணம். ஆம்! ஆதிகுருவும், துறவுத் தெய்வமுமான சங்கரர், குருமுகமாக சந்நியாச தீட்சை பெற வேண்டும்; பணிவின் பிறப்பிடமாக இருந்து அவருக்கு சுசுரூஷை செய்ய வேண்டும்; அதன் பின்பே தமது அவதார காரியத்தைத் தொடங்க வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு நாள் இடையறாமல் நடந்து வந்தது. இதயக் குகையிலுள்ள ஏக வஸ்துவை அநுபவிக்கும் அந்தக் குருநாதன் இங்கே இந்தக் குகையிலேதான் தியானத்தில் இருக்கிறார் என்று உள்ளுணர்வு கூறியதாலேயே நின்றார் சங்கரர்.

பகவத் பாதர் தமது ஆசாரியரைக் கண்டது நர்மதை யாற்றங் கரையிலென்றும், பதரி குகையில் என்றும் சங்கர விஜய நூல்களில் இருவிதமாகச் சொல்லப்படுகின்றன. எல்லா நூல்களுக்கும் முந்தையது என்று நம்பத் தகுந்த ஆனந்த கிரீயத்தின் பிராசீனப் பிரதிகளிலோ சங்கர பகவத் பாதர்கள் தமது குருவை சிதம்பர க்ஷேத்திரத்தில் சந்தித்ததாக உள்ளது. உலக அமைப்பில் ஆத்ம ஞானியர் எங்கிருக்கிறார்கள் என்பது முக்கியமில்லை. உள்ளத்தால் அவர்கள் எப்போதும் ஞான வெளியாகிய சிதம்பரத்திலேயே இருப்பவர்கள் (சிதம்பரஸ்த:) என்பது விவேக சூடாமணியில் காணும் ஸ்ரீ சங்கரருடைய மணி வாக்கே அல்லவா?

நின்ற சங்கரர் உள்ளத்தை நிதானம் செய்து கொண்டு குகையை மும்முறை வலம் வந்தார்; உள்ளே வீற்றிருக்கும் மகானைத் தோத்திரம் செய்தார். அந்த மகாநுபாவரின் இதயத்தில் ஊறும் ஆனந்தவாரியை ஊடுருவிக் கொண்டு சங்கரரின் தேன் வாக்குப் பாய்ந்தது. தவ முனிவரின் உள்ளம் விம்மியது. கண்கள் திறந்தன. ஞானக் கண்ணும் திறந்தது. தான் யாருக்காகக் காத்திருந்தோமோ அந்த சிஷ்யன் — சிஷ்யன் தானா? — வந்தாயிற்று என்று புரிந்து கொண்டார் அவர். அதை நேரடியாகத் தெரிந்து கொள்ள வேணுமென்று, குகையிலிருந்தபடியே ''யார் அங்கே?'' என்றார்.

குகைச் சுவர்களில் மோதிய அந்தக் கம்பீரமான குரல் ஒலி, ஆற்று வெள்ளத்தின் ஒலிக்கும் மேலாக சங்கரரின் செவியில் பாய்ந்தது.

விடை சொன்னார் சங்கரர்:

''இங்கே வந்திருப்பது நிலையற்ற நிலமும் இதர பூதங்களும் புலனும் சேர்ந்த தொகுப்பில்லை. அறிவு ஆழ்ந்து நிற்கும் போது ஒளிரும் இரண்டறியாத ஒரே பொருள் — சுத்த சிவம் இங்கே வந்திருக்கிறது.''

இப்படிப் பத்து ரமணீயமான சுலோகங்களில் தம்மைத் தெரிவித்துக் கொண்டார் சங்கரர்.* வந்திருப்பது யார் என்று குகைவாசிக்கு சர்வ நிச்சயமாகி விட்டது.

அந்த ஞானப் பிழம்புக்குப் போதிக்க வேண்டிய பாடம் எதுவும் கிடையாது என்பதும் அவருக்குத் தெரியும். எனினும் உலக வழக்குக்கு இசைய அதற்கும் ஞான தீட்சை யளிப்பதற்காகவே இந்த யோகியை அவரது குருமார்கள் இங்கே அனுப்பி வைத்திருந்தார்கள். அந்த ஞான சிம்மம் சலனமற்ற தனது உள்ளமும் துள்ளிக் குதிக்கக் குகையை விட்டு வெளியே வந்தது.

குகையை விட்டு வெளியே வந்த சிம்மமாகவே அவருக்குக் கேஸர வண்ண மூட்டியிருந்தது செக்கர் வானம். நதியோரத்தில் கப்பும், கிளையுமாகப் படர்ந்திருந்த ஓர் ஆல மரத்தடியில் அந்த நெடிதுயர்ந்த ஞானத்தரு — துறவரசர்—வந்து நின்றார். நயமும் வினயமும் கொழிக்க அவரை நோக்கினார் பால சங்கரர். தவத்தின் வலிமைக்கு முன் தியாகத்தின் எளிமை அடக்க ஒடுக்கமாக நின்றது.

மகனைப் பார்ப்பது போன்ற கனிவுடன் சங்கரரை நோக்கினார் மகான். மீண்டும் அவரது உள்ளம் துள்ளியது. வான மண்டலத்தையும், குன்று முகடுகளையும் செம்மைக் கோலம் பூணவைத்திருந்த சாயங்காலம் சங்கரரது திருநீற்று வண்ணத் திருமேனியையும் குங்குமமாக்கிக் காட்டியது. மெய்ப் பொருள் ஒரு வடிவம் தாங்கும் போது அதன் இதயமுள்ள இடப் பாகத்தில் உறையும் லலிதையைக் காண்பதுபோலச் சொக்கிப் போனார் வயோதிகத் துறவி. 'இதயத்தால் என்றோ துறவு பூண்டு விட்ட இந்தக் குழந்தைக்கு இயற்கை அணி செய்யும் இந்தக் காஷாய அங்கி போதாதா? தாம் வேறு காவி உடை தந்து தீட்சை அளிக்க வேண்டுமா என்ன? இதோ செக்கச் செவேலென்று பெருக்கெடுத்தோடும் நர்மதை வெள்ளம் போல, இந்த இளம் இதயத்தின் செம்மையும் கருணையாக, கவிதையாகப் பெருக்கெடுத்தோடத் தான் ஒரு தூண்டு கோலாக அமைய வேண்டுமா என்ன?'

* தச ச்லோகி

நர்மதை வெள்ளத்தை எண்ணியவுடன் முனிவரின் நெஞ்சில் பழைய நினைவொன்று கிளர்ந்தது. ஆர்வத்தோடு சங்கரரைப் பார்த்தார்.

சங்கரரும் அதைப் புரிந்து கொண்டது போல ஆற்றோட்டத்தை அணுகினார். கையிலுள்ள கமண்டலத்தை அதற்குள் முக்கினார். விந்தை! நுங்கும் நுரையுமாகச் சுழித்துக் கொண்டு வந்த பேரலைகள் சுருண்டு சுருண்டு அந்தப் பாத்திரத்துக்குள் விழுந்து மடங்கின; சுருங்கின. அவ்வளவு வெள்ளமும் இருந்த இடம் தெரியாமல் அதற்குள் ஓடி ஒளிந்தது. ஜடா மண்டலத்தில் கங்கா நதியை அடைத்து வைத்த பரமனின் கமண்டலத்தில் நர்மதை ஏன் அடங்காது?

மூன்றும் முறையாக விருத்த சந்நியாசியின் உள்ளம் துள்ளியது. கண்களிலும் ஆனந்த பாஷ்பம் துளித்தது. அதனைக் கீழே சிந்த விடாமல் தேக்கி மேலே நோக்கினார் அவர். நீர் நிறைந்த நயனங்களில் ஆல மரத்தின் நீண்ட கிளைகள் அலைகள் போல் ஆடின. அவரது நினைவு அலைகளும் நீண்ட நெடுங் கதையாகப் பின்நோக்கிப் பாய்ந்தன.

நீலக் கடலில் அலைகள் வெண்நுரை தாங்கி நெளிவதைப் பார்க்கிறோமல்



லவா? பாற்கடலில் உள்ள தெளியாத ஓர் அலையிலோ நீலமான ஒரு நுரைக் குவியல் சயனித்திருப்பது உண்டு. அரவின்மேல் அறி துயில் கொள்ளும் அரி என்னும் அந்தப் பொருள் அநுபூதிமான்களின் அகத்தில் எல்லாம் ஆரவாரம் செய்யும். வானமும் கடலும் போல எல்லையற்றிருப்பதைக் காட்டவே அந்த நீலவண்ணம். ஒளியில் வேறு வேறாகக் காணும் பொருட்களெல்லாம் இருளில் ஒன்றாகி விடுகின்றன அல்லவா? அதே போல் உலகம் யாவற்றையும் ஒன்றாகக் கண்டு ஒரேபோல் அருள் செய்யும் இருள் அது. ஒன்றாகக் காண்பதா? கண்



மூடி உறங்கும் இந்தப் பொருள் எதனைக் காண முடியும்? அதுதான் மாயம். மாயத்தை மாய்க்கும் இந்த மாயவனைப் போல மாயம் வல்லவர் வேறு யாரும் கிடையாது. விஷப் பாம்பாகிய ஆதிசேஷனுக்கு வெண்மை நிறமளித்து, அமுதமாகிய தான் முகில் வண்ணம் கொண்டிருப்பதே மாயம்தான். அவன் துயிலும் மாயம்தான். உலகையெல்லாம் ரட்சிப்பவன் உறங்குவதாவது? தியான யோகத்தையே துயிலாக நடிக்கிறான் அவன். எப்பேர்ப்பட்ட அழகு சொட்டும் துயில் அது? அந்த அழகைத் தாங்கும் தொட்டிலாக, அலைகள் அடிக்கும் போது அசைந்தாடும் ஆதிசேஷன் தன் ஈராயிரம் கண்களாலும் அந்த லாவண்யத்தைப் பருகுவதற்காக முடிகளைத் தாழ்த்தினான். அப்போது அவனது சிரங்களிலுள்ள ஆயிரம் இரத்தினங்களின் காந்தியும் ஒரு செம் போர்வையாக—இதோ இப்போது நர்மதை தீரத்து மலை உச்சிகளில் மாலைப் போது பூகம் செம்முலாம் போல—பெருமானின் திருமேனியில் படிந்தது. பூரித்துப் போனான் நாகராஜன். அதே சமயத்தில் பிரானின் அகன்ற மார்பும் விரிந்து பூரித்தது. ஆழ்ந்து சுவாசித்தான் அவன். அவ்வளவுதான்! அனந்தனால் அவனைத் தாங்கவே முடியாமல் அப்படி ஒரு பாரமாகி விட்டான்.

''பிரபோ! என்னால் தங்களைத் தாங்க முடியவில்லை. இதோ பாற்கடலில் அமிழ்ந்து விட்டேன்'' என்று கூவினான் சேஷன்.

உடனேயே மலர்க் குவியலாக இலேசானான் ஐயன்.

''இதென்ன புது மாயம், ஆண்டவனே!'' என்று கேட்டான் ஆதிசேஷன்.

புருஷோத்தமனின் கண்ணும் கனிவாயும் திறந்தன. அரவரசனை நோக்கிக் கேட்டான்: ''கையில் தாங்கிச் செல்லும் போது கனக்கும் கனிகளை உட்கொண்டு விட்டால் அந்தப் பளு மறைந்து விடுகிறதல்லவா? அதற்கு மாறாக, நான் அனவரதமும் உள்ளத்தில் கொண்டு ருசிக்கும் ஆனந்தக் கனியை இன்று எனக்குப் புறத்தே வைத்துப் பார்த்தேன். அது கனத்தது. அந்தப் பாரமே உன்னையும் அழுத்தி விட்டது.... புரியவில்லையா? நான் என்னிலேயே எப்போதும் அநுபவித்து வரும் பிரம்மானந்தத்தை இன்று நடராஜ மூர்த்தியாகப் பிரித்துக் கண்டு அன்பு செலுத்தினேன். அந்த உவகையில் கண்ட பூரிப்பைத் தான் உன்னால் தாங்க முடியவில்லை'' என்றான்.

ஆதிசேஷன் உள்ளத்தில் ஓர் ஆசை துவண்டது. அதைத் தெரிந்து கொண்டு அருள் பாலித்தான் பதுமநாபன்.

''சிதம்பர க்ஷேத்திரத்துக்குச் சென்றாயானால், ஆனந்தத் தாண்டவமாடும் அந்த ஆண்டவனைக் கண்டு நீ பக்தி செய்யலாம்'' என்று பணித்தான்.

அரவரசனும் பெருமகிழ்ச்சியுடன் தில்லையம்பலத்தை அடைந்தான். கூத்தப்பிரானின் பாத கமலத்தில் சிலம்பாகச் சுற்றிக் கொண்டான். அந்த ஸ்பரிச இன்பம் மட்டும் அவனுக்குப் போதவில்லை. எனவே அத்திரி புத்திரராகப் பிறந்து பதஞ்சலி மகரிஷியாகி நடராஜனின் நடனத்தைக் கண்ணாரக் கண்டான்; அவனது உடுக்கிலிருந்து வெளிப்படும் இன்ப நாதத்தைக் காதா

ரக் கேட்டான். கண்ணும் செவியும் ஒன்றேயான கட்செவியல்லவா சேஷன்? எனவே ஒலியையும் ஒளியையும் ஒருமித்து மாந்தி இன்புற்றார் பதஞ்சலி.

பதஞ்சலி மகரிஷியிடம் ஒரு காரியத்தை ஒப்புவித்தான் சபாபதி:

''மக்களுடைய மனம், மொழி, மெய் மூன்றையும் துலக்கும் பணியை உன்னிடம் தரப் போகிறேன். மனத்தைச் செம்மை செய்வதற்காக நீ யோக சூத்திரம் இயற்ற வேண்டும். உடலை இறைவன் கோயிலாக எண்ணிப் பேணுவதற்காக ஒரு சாஸ்திரம் செய்ய வேண்டும். அத்திரி புத்திரனான உன் பெயரைக் கொண்டு அது ஆத்திரேய சம்ஹிதை என்று புகழ் பெறும். வாக்கைத் தூய்மைப் படுத்துவதற்காக நீ வட மொழி வியாகரணத்துக்கு விரிவுரை யாத்துத் தர வேண்டும். உன்னைப் பொறுத்த மட்டில் மற்றப் பணிகளைவிட இதுவே முக்கியமானது. கர்ம மார்க்கத்தை அநுசரித்து யாகாதிகளை ஒழுங்காகச் செய்ய வேண்டுமானால் மந்திர உச்சாரணத்தில் ஸ்பஷ்டம் வேண்டும்; அவற்றின் சரியான பொருளும் தெரிய வேண்டும். ஞானமார்க்கத்துக்குக் கருவூலமான உபநிஷதங்களையும் உள்ளபடி உணர பாஷா ஞானம் வேண்டும். தேவ வாணியாகிய சம்ஸ்கிருதத்தின் இலக்கணத்தை இவ்வாறு விளக்க ஆயிரம் நாவு படைத்த உன்னால் தான் முடியும் என்று கருதி இந்தக் காரியத்தை உனக்கு அளிக்கிறேன். எத்தனையோ நூல்களுக்கு எத்தனையோ பாஷ்யங்கள் இருந்தாலும் வியாகரணத்துக்கு நீ இயற்றும் பாஷ்யமே மஹா பாஷ்யம் என்று வழங்கும் என வரமும் தருகிறேன்'' என்றான் ஆடவல்லான் பதஞ்சலி முனிவரிடம்.

பதஞ்சலிக்குச் சொல்லொணாத சந்தோஷம் ஏற்பட்டது. நடராஜனின் பாணியிலுள்ள டமருகத்திலிருந்து எழுந்த நாதத்தைக் கொண்டுதான் பாணினி மகரிஷி வியாகரண சூத்திரங்களைச் செய்தார். எனவே அதற்கு உரை செய்யும் பாக்கியம் தமக்குக் கிட்டியதில் பெருமிதம் அடைந்தார் பதஞ்சலி.

இன்று சிதம்பர ஸ்தலத்திலுள்ள திருக்கோயிலில் ஆயிரக்கால் மண்டப முள்ள இடத்தில் ஆயிர முகம் படைத்த ஆதிசேஷன் வியாகரண மகாபாஷ்யத்தை ஆயிரம் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். போக்குவரவு வசதி ஏதுமற்ற அந்நாளில் பாரதத்தின் நாலு திசைகளிலிருந்தும் அவ்வளவு மாணவர்கள் வந்து அங்கு குழுமி விட்டனர்

விரைவில் எல்லோருக்கும் பாடம் கற்பிக்க விரும்பினார் பதஞ்சலி. எனவே ஏக காலத்தில் ஆயிரம் மாணவர்களும் கேட்கும் சந்தேகங்களுக்கு விடை சொல்ல எண்ணினார். ஒரு யுக்தி செய்தார். ஆதிசேஷ உருவை எடுத்துக் கொண்டார். எனினும் அவ்வுருவை மாணவர்கள் பார்ப்பதற்கில்லை. ஏனெனில் நாகராஜனின் மூச்சுக் காற்றுப் பட்டதுமே அவர்கள் வெந்து சாம்பராகி விடுவார்கள். எனவே ஒரு திரை போட்டுக் கொண்டு அதன் பின்னிருந்தே ஆதிசேஷ உருவில் போதிப்பது என்று முடிவு பண்ணினார். தாம் இன்னார் என்பதை மாணவர்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை. ''திரையை விலக்கி நான் யார் என்று பார்க்க முயன்றால் எரிந்து போவீர்கள்'' என்று மட்டும் சொன்னார்.


தாம் திரை மறைவுக்குப் போன பின் மாணவர்கள் பாட்டில் வகுப்பிலிருந்து கிளம்பி வெளியேறி விட்டால் என்ன செய்வது? அதற்காக இன்னொன்றும் சொன்னார்: ''யாராவது அநுமதியின்றி வெளியேறியதாகத் தெரிந்தால் அவர்களைப் பிரம்ம ரக்ஷஸ் ஆகுமாறு சபித்து விடுவேன்'' என்று.

பிரம்ம ராட்சஸம் என்பது பிசாசைப் போல ஒன்று. வேத அத்தியயனம் செய்து துர் மரண முற்றவர்கள் பிரம்ம ராட்சஸமாக அலைவார்கள். அத்தியயனம் செய்தவர்களைக் கேள்விகள் கேட்டு, விடை சொல்லத் தெரியாவிட்டால் அடித்துக் கொன்று சாப்பிடுவது பிரம்ம ரட்சஸின் இயற்கை.

இந்த நிபந்தனைகளுக்கு மாணவர்களும் ஒப்புக்கொண்டனர். பாடம் ஆரம்பமாயிற்று.

ஐயங்கள் எழுந்தால் சீடர்கள் திரையருகே சென்று அவற்றைத் தெரிவிப்பார்கள்.





ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக, ஆனால் ஒரே சமயத்தில், தன்னுடைய ஒவ்வொரு முகத்தாலும் மெல்ல விளக்கம் சொல்வார் பதஞ்சலி.

பாஷ்ய பாடம் தொடங்கி நாட்களாயின. 'பிரம்மசாரி சேஷ்டை' என்பார்களே! அது எந்தக் காலத்திலும் உண்டு போலும். ஒருநாள் மாணவர் ஒருவருக்கு ஒரு விசித்திர ஆசை எழுந்தது. பதஞ்சலி எப்படி ஒரே காலத்தில் பலரிடம் பேசுகிறார் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதே அது. 'பார்த்தால் எரிந்து போவீர்கள்' என்ற குரு வாக்குக்குப் பயந்து இத்தனை நாட்கள் அந்தச் சீடர் அணை போட்டு வைத்திருந்த ஆர்வம் அன்று பிய்த்துக்கொண்டு விட்டது. எனவே அந்த மாணாக்கர் குருவின் முன்பு போட்டிருந்த திரையை விலக்கியே விட்டார்.

அவ்வளவுதான்! 'புஸ்'ஸென்று ஒரு சீறல்! மாணவர்கள் இருந்த இடத்தில் மூட்டு மூட்டாகச் சாம்பல்தான் நிற்கிறது!

பதஞ்சலிக்குத் துக்கம் மேலிட்டது. சேஷனாக இருந்த போது அவரால் நேரிட்ட கொடுமையை இப்போது அவராலேயே மாற்ற முடியவில்லை. அநியாயமாக இப்படி ஆயிரம் மாணவர்களும் மாண்டு போனார்களே என்று விசனப்பட்டார். அதோடு இறைவன் இட்ட ஆக்ஞையை நிறைவேற்ற முடியவில்லையே; மஹா பாஷ்யம் பிரசாரம் அடைவதற்கில்லையே என்றும் வருத்தப் பட்டார்.

வருந்திப் பயனில்லை என்று கண்களைத் துடைத்துக் கொண்டு அவர் பார்த்தபோது தூரத்தில் ஒரு மாணவர் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டார். அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. பாதி வகுப்பில் வெளியேறக் கூடாது என்ற தமது உத்தரவையும் ஒரு சீடன் மீறிவிட்டானே என்றே ஆச்சரியம். ஆனால் அந்த ஆச்சரியம், தம்மையும் ஒரு சீடன் ஏமாற்றுவதா என்று ஆத்திரமாக மாறவில்லை. ஆறுதலாகவே மாறியது. மிஞ்சிய இந்தச் சீடனைக் கொண்டாவது தம் நூலை பிரசாரப் படுத்தலாம் என எண்ணினார். அந்தச் சீடருடைய பெயர் என்ன என்பதுகூட அவருக்குத் தெரியாது. யாருடனும் கலவாது தனித்திருக்கும் அந்த சாது மாணவர் கௌட தேசத்திலிருந்து வந்தவர் என்று மட்டுமே அறிவார்.

கௌடர் மிகுந்த அச்சத்துடனே ஆசானை அணுகினார். இயற்கையின் அழைப்பை மீற முடியாமல் தான் பாதி வகுப்பில் வெளியே ஏகியதாகக் கூறி மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். பதஞ்சலி முனிவர் அவருக்கு ஆகவாசமூட்டி நடந்த விபரீதத்தைக் கூறினார். தமது மாபெரும் மகாபாஷ்யச் செல்வத்தைக் கௌடரிடமே ஒப்புவிக்க வேண்டுமெனவும் முடிவு செய்தார்.

இந்தப் பையனுக்கு வாயால் சொல்லிக் கொடுத்துச் சீக்கிரத்தில் புரிய வைப்பது சாத்தியமில்லை; பரிபூர்ணமாக அநுக்கிரகத்தைச் செய்து அதனாலேயே நூலைக் கிரகிக்கச் செய்வது என்று தீர்மானித்தார். "எனக்குத் தெரிந்ததெல்லாம் உனக்கும் தெரிவதாக" என்று மனத்தை ஒருமுகப்படுத்தி ஆசீர்வதித்தார் பதஞ்சலி. விறகை மூட்டி, ஊதி, விசிறிப் படாதபாடு பட்டுத் தீ வளர்க்கிறோம்; மின் விசையைப் போட்டு ஒரே நொடியிலும் பெரு வெப்பத்தைப் பெறுகிறோமல்லவா? மகான்கள் அதேபோல் தங்கள் ஆன்ம சக்தியைப் பல விதத்தில் வெளிப்படுத்துவார்கள். மின்னல் வேகத்தில் கௌடருக்குச் சகல சாஸ்திர ஞானமும் ஏற்பட்டது. எனினும் அதே கணத்தில் அவர் பிரம்ம ரட்சஸாக மாறிவிட்டார்.


"நீ வகுப்பை விட்டுப் போனதாக நான் இப்போது தானே அறிந்தேன்? எனவே, என் சாபம் உடனே செயலாகிறது. இப்போதே அதை நிவர்த்தி செய்வதென்பது என்னாலும் முடியாத காரியம். எனினும் விமோசனமாக ஒன்று கூறுகிறேன். நீ கேட்கும் வினாவுக்குத் தக்க விடை அளிக்கும் மனிதன் கிடைத்தவுடன் அவனுக்கு மஹா பாஷ்யத்தை உபதேசம் செய். சுய உருவம் பெறுவாய்" என்றார் பதஞ்சலி. கௌடர் கேட்க வேண்டிய வினா என்ன என்பதையும் கூறினார். பிரம்ம ரட்சஸமான கௌடர் ககன மார்க்கமாகப் பறந்து வந்து மத்திய பாரதத்தில் நர்மதைக் கரையில் இப்போது சங்கரர் வந்தடைந்த அதே ஆல மரத்தில் உட்கார்ந்து கொண்டார். **(தொடரும்)**

டி ஆர் -74

டிரான்ஸிஸ்டர்களில் முன்னணியில் நிற்பது

இப் புகழ்பெற்ற டி-ஆர்-74 ஒவ்வொரு குடும்பத்திலும் மிகவும் அவசியம் இருக்கவேண்டியது! அதிக சக்தியுடன் எல்லா அலை வரிசைகளிலும் நன்கு இயங்கும் டிரான்ஸிஸ்டர் டி-ஆர்-74, பல ஆண்டுகள் உற்ற நண்பனுயிருந்து உதவும். பார்வைக்கு மிக அழகிய இந்த டி-ஆர்-74, யாவரும் விரும்பி, ஒரு பொக்கிஷமாகக் கருதிப் பெருமையுடன் வைத்திருக்க ஆசைப்படுவார்கள்

விலை
ரூ. 375
எக்ஸைஸ் உளபட
(வரிகள் தனி)



JHANKAR

ஜங்கார்

ஆல் - டிரான்ஸிஸ்டர்

எங்கும் எடுத்துச் செல்லலாம்— எளிதில் எடுத்துச் செல்லலாம்

இந்தியன் பிளாஸ்டிக்ஸ் லிமிடெட், பம்பாய் - 67

பிராந்திய விநியோகஸ்தர்கள் :

ஜே - ஒ - போன் கம்பெனி, 18, தங்கசாலை தெரு, சென்னை

JR 51


பவுன் சூரியன் மார்க்
புகையிலை
குணமும்
மணமும்
கொண்டது!
M/S N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS


''என்ன அத்தே!
எங்கே அவசரமாகப்
போகிறீர்கள்?''
ராபின் ப்ளூ
இயற்கையில்
கவர்ச்சிகரமான
வெண்மையளிப்பது
Robin Ultramarine
STANDARD
QUALITY
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

சிந்தனை மேடை

அரவிந்தன்

2. காட்சிக்கு எளிமை

மனிதனுடைய நிகழ்கால வாழ்க்கையில் மிகக் குறைந்த காலம்தான் பணத்தினாலும் செல்வாக்கினாலும் அவனுடைய புகழ் கணிக்கப்படுகிறது. நிரந்தரமாகக் கணிக்கப்படுகிற புகழ் என்னவோ, குணங்களாலும், பண்பாடுகளாலும், ஒழுக்கத்தினாலும் கணிக்கப்படுகிறது.



செல்வமும், செல்வாக்கும் குணங்கள் அல்ல. குணங்கள்தாம் செல்வம் என்று நம்பி ஒப்புக் கொள்கிற புதிய சமுதாயம் உருவாக வேண்டும் என இலட்சியவாதிகள் எண்ணாத நேரமில்லை. பொது வாழ்விலும், சமூகத் தொண்டிலும் எளிமையும் சுமுகமான உறவுகளும் பயன்படுவதற்குப் பதிலாகப் பதவியும், போலி கௌரவமும் பயன்படுவதைக் கண்டு பல வேளைகளில் நாம் மனம் நோகிறோம். சமூகத்துக்கு மெய்யாகவே தொண்டு செய்ய விரும்புகிற உண்மை மனிதர்கள் 'பெனிசிலின்' மருந்து போல அருமையாகவும், கிடைக்க முடியாத உயரமும் கொண்டு பயன்பட வேண்டியவர்களுக்கு எட்டி நிற்காமல் சுக்குப் போல எல்லா இடத்திலும், எல்லார்க்கும் எப்போதும் எளிமையாகக் கிடைத்துப் பயன்படுகிற மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இப்படிக் காட்சிக்கும், பழக்கத்துக்கும், எளிமையான மனிதர்களை இன்றுள்ள பொது வாழ்வில் நாம் மிக மிகக் குறைவாகவே சந்திக்க முடிகிறது.



அண்மையில் சில ஆண்டுகளுக்கு முன் மதுரை (இந்தியன் ஏர்லைன்ஸ்) விமானத் துறை அலுவலக வாயிலில் கண்டவர்கள் வியக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று மாலை விமானம் ஏதோ யந்திரக் கோளாறு காரணமாக மதுரையோடு நின்று போனதால் பிரயாணிகளை விமான நிலையத்திலிருந்து அழைத்து வந்து நகரில் உள்ள விமானத் துறை அலுவலகத்தில் விட்டு விட்டார்கள்.

அப்படி விடப்பட்டவர்களில் ஒரு மாநிலத்தின் பிரதம மந்திரியும் இருந்தார். தம்முடைய பெட்டி படுக்கைகளைத் தாமே சுமந்துகொண்டு, சிறிது தொலைவு இறங்கி நடந்த அந்தப் பிரதம மந்திரி அந்தச் சில விநாடிகளில் தாம் ஒரு மெய்யானதொண்டர் என்பதை நிரூபித்தார். அன்று அந்தக் கோலத்தில் அவரைப் பார்த்தவர்கள் 'காட்சிக்கு எளிமை' என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள். தாங்கள் நடந்து போகாமல் இருப்பதுதான் தங்களைக் கௌரவமும் செல்வாக்கும் உள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளுவதற்குச் சரியான அடையாளம் என்று நம்புகிற பெரிய மனிதர்களுக்குநடுவே நிஜமான கௌரவமும், நிஜமான செல்வாக்கும், கால்கள் மண்ணில் நடப்பதால் மட்டும் குறைந்து விடாது. மனம் மண்ணில் நடக்காமல் பார்த்துக் கொண்டால் போதும் என்று நம்பும் துணிவை எங்கே பார்த்தாலும் அந்தத் துணிவுக்கு வணக்கம் செலுத்தலாம். அன்று மதுரை இந்திய விமானத் துறை அலுவலக வாயிலில் இப்படி வணக்கத்துக் குரியவராகத் தென்பட்ட மனிதர் திரு இ. எம். எஸ். நம்பூதிரிபாட் ஆவார்.

சுமுகமான உறவு

காட்சிக்கு எளிமை, கடுஞ்சொற்களைப் பேசாமை, என்ற இந்தக் குணங்களால்தான் ஒரு மனிதனுடைய பெருந்தன்மை கணிக்கப்படுகிறது. நம்முடைய நாவிலிருந்து பிறக்கும் சொற்கள் பிறருடைய செவிகளில் பூக்கள் உதிர்வதைப் போல அதிர்ச்சி உண்டாகாத வண்ணம் மெல்லச் சென்று நிறைந்து மணக்க வேண்டும். இனிமையும் பண்பும் உள்ள பேச்சு அப்படித்தான் இருக்க முடியும்.

அருளும் அன்பும் நிறைந்த காமகோடிப் பெரியவர்களுடைய திருமுன்னர் அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்கிறவர்களும், தமிழ் முனிவர் திரு வி. க. அவர்களோடு முன்பு அவர் வாழ்ந்த காலத்தில் அமர்ந்து உரையாடும் பேறு பெற்றவர்களும், பூக்கள் உதிர்வது போல் மணக்க மணக்க அவர்கள் பேசும் மென்மையையும், இனிமையையும் நன்றாக உணர்ந்திருக்க முடியும்.

'காட்சிக்கு எளிமை' என்பது தோற்றத்தைமட்டும் பொறுத்ததில்லை. மலர்ந்த முகம், மலர்ந்த பேச்சு, மலர்ச்சியோடு பழகுதல், — இவை யெல்லாம் ஒன்று சேர்ந்துதான் காட்சிக்குஎளிமை:

பெரிய பெரிய அலுவலகங்களிலும், அரசினர் பணிமனைகளிலும் இன்று தேடித் தேடித் தவித்தாலும் கிடைக்காத பண்பாக இருப்பதும் இதுதான்: தங்களுடைய நிலைக்குக் குறைந்தவர்கள் என்கிற காரணத்தால் சிலரைச் சந்திப்பதற்கே பொறுமையின்றி வெறுத்து ஒதுக்குகிறவர்களையும் அப்படியே தப்பித் தவறிச் சந்தித்தாலும் சிரித்துப் பேசாமல் எரிந்து

விழுகிறவர்களையுமே இன்று நம்மைச் சுற்றிலும் அதிகமாகப் பார்க்கிறோம். ஒரு நாட்டின் பொது வாழ்க்கையில் சுமுகமான உறவுகள் இல்லை என்பதைத்தான் இந்தக் கடுமையான சூழ்நிலையிலிருந்து நாம் புரிந்து கொள்ள இயலும்.

மென்மையும் பண்புமுள்ள பேச்சுக்கள் எந்த நாவிலிருந்து ஒலிக்கின்றனவோ, அந்த நாவிலிருந்து பிறருடைய செவிகளுக்கு நம்பிக்கையும், மலர்ச்சியும் கிடைக்கின்றன. அந்த நாவிலிருந்து பிறக்கும் சொற்கள் விலைமதிப்பற்றவை.



பிறரிடம் சொற்களை விட்டெறிவது போல் பேசுவதுகூட ஒரு வகைக் கொலைத் தொழில் என்றுதான் சொல்ல வேண்டும். பிறருடன் எளிமையாகவும், அழகாகவும், அளவாகவும் பழகுவதற்கு ஒரு நல்ல உதாரணம் சொல்லலாம். பழைய நாட்களில் பெண்களுக்கு வளையல் விற்பவர்கள் தெருத் தெருவாக விதம்விதமான வளையல்களோடு வருவார்கள். வாங்குகிறவர்களுக்கு அவர்களே வளையல்களை அணிவிப்பதுதான் பழைய காலத்து வழக்கம். வளைகளும் உடைந்து விடாமல் அணியப்படுகிற கைகளும் நொந்து விடாமல் அவர்கள் வளை அணிவிக்கும் திறமையைப் பிறருடன் பழகும் பக்குவமான நிலைக்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

போலி மதிப்பு


பிறர் நம்முன் நியாயமாகச் சிரிப்பதற்கும் அஞ்சுகிறபடி நாம் வளர்த்துக் கொள்ளுகிற கௌரவங்கள் என்றும் நம்மிடம் நிலைக்கும் என நம்ப முடியாது. பிறர் வாயைப் பேச வேண்டிய இடங்களில் கூடப் பேச விடாமல் கட்டுப்படுத்தி நிறுத்தவும், சுபாவமாகப் பழக வேண்டிய இடங்களில் கூட நடுநடுங்கி நிற்கச் செய்யவும் முடிகிற 'கெத்து' வேண்டும் என்று அதிகாரிகள் 'உத்தியோக லட்சணம்' கூறுவார்கள். பயமுறுத்தி அடைகிற கௌரவம் என்றாவது ஒரு நாள் கரைந்து போகும். காட்சிக்கு எளிமை, பேச்சுக்கு எளிமை, பழக்கத்துக்கு எளிமை — இவற்றால் எந்தவிதமான கௌரவத்தையும் அடைய முடியாது போலச் சராசரி மனிதனுக்குத் தோன்றினாலும் பண்பினால் மனிதர்களை அளந்து பார்க்கிறவர்கள் இவற்றைத் தான் நிலையான கௌரவங்களாக மதித்துக் கணக்கிடப் போகிறார்கள் என்று நாம் உறுதியாய் நம்புவோமாக.

பூக்களைப் போல் எல்லார்க்கும் எங்கும் வேறுபாடின்றி மலர்ந்து மணக்க வேண்டும். கோடீஸ்வரராகிய பிரபு பார்க்க வருகிற போது மலர்ந்து மணந்த பூ ஒன்று குப்பை மேட்டுச் சுப்பன் பார்க்க வருகிறபோது கூம்பிக்கொண்டு விடுவதில்லை. பண்பாட்டின் நிறைந்த எல்லை இப்படி எல்லார்க்கும் மலர்ந்து நிற்பது தான். அற நூலாசிரியர்கள் இந்தக் குணத்தை ஒப்புரவு, அருள், கருணை, சான்றாண்மை என்று படிப்படியாக வேறு வேறு பெயர்களில் சொல்லியிருக்கிறார்கள். நாம் இதையே புதுப் பெயர் சூட்டிப் பொதுவாகக் 'காட்சிக்கு எளிமை' என்று அழைப்போம்.

மலர்ந்த நிலை

இன்று நாம் வாழ்கிற சமுதாயம் புதுமைகள் நிறைந்ததாகச் சொல்லப்படுகிறது. போலிக் கௌரவங்களை விட்டு விட்டு மனிதனுக்கு மனிதன் இதயத்துக்கு இதயம் மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்று நல்லவர்களும், பிரமுகர்களும் பேசுகிறார்கள். புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் எழுதுகிறார்கள். ஆனால் இப்படிப் பேசுவதையும் எழுதுவதையும் தவிர இதே பண்பை நடைமுறையில் வாழ்ந்து காட்டுகிற சிலரும் சமூகத்துக்குத் தேவை. அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு இன்னும் பத்துப் பேராவது திருந்த முடியும்.

'காட்சிக்கு எளிமை' — என்ற இந்தத் தொடரை நான் சொல்கிற இந்தப் புதுப் பொருளில் இணைத்து நன்றாகச் சிந்தியுங்கள். இதில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களையும் இதைப் படித்தவுடன் நீங்கள் சொல்லத் துடிக்கிற கருத்துக்களையும், — உங்கள் மன அரங்கினுள் ஒரு மேடையில் இணைத்து நிறுத்திச் சிந்தியுங்கள்.



அப்படிச் சிந்திக்கிற போது, 'பூக்களைப் போல எல்லார்க்கும் மலர்ந்து எல்லார்க்கும் மணக்க வேண்டும்' என்று நீங்களும் ஆசைப்படுவீர்கள். உங்களால் அவ்வாறு ஆசைப்பட முடியவில்லையானால் உங்களைப் பற்றி நான் நிறையச் சிந்திக்க வேண்டியதுதான்.

இருண்ட எண்ணங்களால் நத்தையைப் போல் தனக்குள் தன்னை ஒடுக்கிக் கொள்ளாமல் சமுதாய நம்பிக்கையோடு பரந்து நின்று வாழ வேண்டுமென்று இந்த மேடையில் அமர்ந்து முதலாவதாகச் சிந்தித்தோம். சமுதாய நம்பிக்கைக்கு அடுத்தபடி நம் சிந்தனைக்குச் சிறந்ததாக அமையக் கூடிய பண்பு 'காட்சிக்கு எளிமை' தான்.

காட்சிக்கு எளிமையாயிருப்பதனால் 'நாம் பிறரிடம் மிகவும் மலிந்த நிலைக்குப் போய் விடுகிறோமே' என்று எண்ணி யாரும் தனக்குத்தானே குழப்ப மடைய வேண்டியதில்லை. மெய்யான கௌரவம் நல்ல மனமும் பொய்க் கலப்பில்லாத தூய எண்ணங்களும்தான். அவற்றை ஆளும் தன்னம்பிக்கை நமக்கு இருக்குமானால் 'நம்மைப் பிறர் மதிக்க வேண்டுமே'—என்ற ஆசையைக் கூட நாம் தியாகம் செய்ய முடியும். அப்படித் தியாகம் செய்கிற வைராக்கியம் நம்மில் செருக்காவது வேண்டும்.

அரியணையேறி அரசாளும் மாபெரும் மன்னர்கள் கூடக் காட்சிக்கு எளியராய்—இருக்க வேண்டுமென்றுதான் திருவள்ளுவர் கூறுகிறார்.

தனக்கு முன்னால் வந்து சிரித்துக் கொண்டு குழைந்து நிற்கிற அத்தனை பேரும் ஏதோ உதவியை எதிர்பார்த்துத் தான் குழைகிறார்களோ என்று பயந்து பதிலுக்கு மலரவோ, சிரிக்கவோ, முடியாமல் கல்லாகி விடுகிற சிலரைக் கண்களின் எதிரே பார்க்கும் போது எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கும்.

'மலர்ந்தால் எவரேனும் பறித்துக் கொண்டு போய் விடுவார்களோ'—என்று பயந்து எந்தப் பூவும் மலர்ந்து மணக்காமல் அரும்பாகவே இருந்து விடுவதில்லை. பூக்களைப் போல எல்லார்க்கும் எங்கும் எப்போதும் மலர்ந்து மணக்கும் 'காட்சிக்கு எளிமையே' ஒரு கௌரவம். இதைத் தவிர மற்றவற்றைக் கௌரவங்களாக நினைத்து இப்படி மலர்ந்து மணக்கக் கூசுவது தான் அகௌரவம் என்பது என்னுடைய துணிந்த கருத்து. இதையே வேறொரு விதமாகக் கூற வேண்டுமானால், 'கரும்பு போல எளியதாய் எல்லார்க்கும் எல்லா இடத்திலும் கிடைக்கிற தொண்டு தான் காட்சிக்கு எளிமை. சமுதாய நம்பிக்கை உள்ள ஒவ்வொருவரும் இதை மறப்பதற்கில்லை. நம்முடைய எளிமையே நமக்குப் பலம். நம்முடைய தூய்மையான நம்பிக்கைகளினால் நாம் எதையும் சாதிக்க முடியும் என்ற துணிவுடன் கண்முன் தெரிகிற எல்லாருடைய துக்கங்களுக்கும் மனம் கசிந்து இரங்கியபடியே நாம் கைவீசி நடக்க வேண்டும். இதைவிடப் பெரிய உபகாரமாக இந்த உலகத்துக்கு நாம் வேறென்ன செய்ய முடியும்?

வ ட் ட மே ஜை

நெருப்புக் கனிகள்

ஆசிரியர் 'பொன்முடி' அவர்களின் 'நெருப்புக் கனிகள்' ஓர் இனிய கதை. சாதாரணச் சம்பவங்களை ஆசிரியர் வர்ணிக்கும் அழகு தனித் தன்மை வாய்ந்தது. ரகுவும், இந்துமதியும் படிக்கிறவர்களின் நெஞ்சை விட்டு அகலாத கதாபாத்திரங்கள்.

தஞ்சாவூர்
21—5—62

சுந்தர ராமச்சந்திரன்

'நெருப்புக் கனிகள்' பல அற்புதத் தத்துவங்கள் அடங்கிய அழகுக் கதை.

மடமடவென்று படித்து முடிக்கக் கூடிய கதை இல்லை! ஆனால் ஒவ்வொரு வரியிலும் எவ்வளவு கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன.

கோவை-12
22—5—62

கோ. ந. பாலசுப்பிரமணியம்

காப்பி கசக்கிறது

மே மாதம் 20-ந் தேதி "காப்பிக்குக் கட்டுப்பாடு" என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமதி கமலா அவர்கள் எழுதியிருப்பது மட்டுமல்ல. இப்போதெல்லாம் "பினான்டேஷன்" 'ஏ'. அதாவது, தட்டைக் கொட்டை வேண்டுமென்றாலும் "ரோபஸ்டா" வாங்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது! இந்த நிலை உடனடியாக மாற வேண்டும். அதிகாரிகள் கவனித்து உடனடியாக ஆவன செய்தல் வேண்டும்.

சென்னை
18—5—62

கி. ரகுநாதன்

ஆறுக்கு அவதாரம்

சிவபெருமான் சிலப்பதிகாரத்தில் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று போற்றப்படுகிறார். "பிறப்பிலி இறப்பிலி" சிவபெருமான் என்பதைச் சைவ இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்வாறிருக்க அவர் சங்கரராக மனிதப் பிறவி எடுத்தார் என்று 'ஜயஜய சங்கர'வில் குறிப்பிட்டிருப்பது மனத்தை வருத்துகிறது. ஒரு சான்றோருக்கு உயர்வு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பல கோடி மக்களின் நெஞ்சில் வாழும் தனிப் பெருந் தெய்வத்தின் புகழுக்குக் குறைவு ஏற்படும் வகையில் எழுதிய தற்காக மிகவும் வருந்துகிறோம்.

புதுதில்லி
28—5—62

சொக்கு சுப்பிரமணியம்

வருந்துவானேன்? நாராயணனே முழு முதற் கடவுள் எனக் கருதும் வைணவர்கள். தசாவதாரத்தால் அவனது பெருமைக்கும் புகழுக்கும் குறைவு ஏற்பட்டதாக எண்ணுவதில்லையே! மேலும் ஸ்ரீ ஆதி சங்கரர் பரமேசுவரனது அவதாரம் என்பது 'ஜயஜய சங்கர' ஆசிரியரது கற்பனை அன்று. விஷ்ணு தர்மோத்தரம், வாயு புராணம் முதலிய பண்டைய நூல்களில் ஈசுவரன் சங்கராச்சாரியாராக அவதரிக்கப் போகிறார் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. ஆசாரியரை அத்வைத ஸ்தாபகர் என்பதை விட, சிவபக்தர் என்ற முறையிலேயே போற்றும் சிவ ரஹஸ்யம் என்ற சைவ இதிஹாசத்திலும் சங்கர பகவத்பாதர் சிவபெருமானின் அவதாரம் என்றே கூறப்பட்டுள்ளது. சங்கர விஜய நூல்கள் யாவற்றிலும் இவ்வாறே கண்டுள்ளது. — 'ஆசிரியர்'

உங்கள்

டிபாசிட்டுகளின் மீது வட்டி விகிதங்கள் அதிகரிப்பு!!

1-6-62 முதல் கீழ்க்கண்ட டிபாசிட்டுகளுக்கு $\frac{1}{8}$% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறதென்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

டிபாசிட்டுகள்

30 நாட்கள்	வரை ...	$3\frac{1}{8}$%
31 நாட்கள் முதல் 60 நாட்கள்	வரை ...	$3\frac{3}{8}$%
61 நாட்கள் முதல் 90 நாட்கள்	வரை ...	$3\frac{5}{8}$%
91 நாட்கள் முதல் 1 ஆண்டுக்குக்	குறைவாக	$3\frac{7}{8}$%
1 ஆண்டும் 24 மாதங்களுக்குக்	குறைவாக	$4\frac{1}{8}$%
2 ஆண்டுகளும் 48 மாதங்களுக்குக்	குறைவாக	$4\frac{3}{8}$%
4 ஆண்டுகளும் 60 மாதங்களுக்குக்	குறைவாக	$4\frac{5}{8}$%
5 ஆண்டுகள் ...	...	$5\frac{1}{8}$%

முழு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள இந்தியன் பாங்கியின் கிளையை அணுகவும்

G. S. சுந்தரம், காரியதரிசி

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ் - - - சென்னை -1

புதிய பெரிய டப்பாவில்

கால்கேட் பேபி பவுடர்



அதிகப் பவுடர்...
அதிகச் சிக்கனம்...

புதிய சுலபமாக
அழுந்தும் மூடி!



குழந்தையின் நளினமான
சருமத்திற்கு இதமளிக்கிறது!

கதையில் ஏதும் புதுமையில்லை. தாய் நாட்டிலிருந்து தொலை தூரத்தில் டாக்டராக இருக்கும் ஒருவன் ஒருத்தியைக் காதலித்துக் கல்யாணமும் செய்துகொள்கிறான். எகிப்து நாட்டுக்குச் சென்று ராணுவ முகாமில் பணியாற்ற அவசர உத்தரவு வரவே, அவன் தன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி விட்டு மனைவியை ரயிலேற்றி விடுகிறான். பிரயாணத்திலேயே பிரசவநோய் கண்டு அவள் பெங்களூரில் ஓர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்து விட்டுக் கண்ணை மூடி விடுகிறாள். (ஞாபகமாகத் தன் கழுத்துச் சங்கிலியை ஆஸ்பத்திரி நர்ஸிடம் கொடுத்து விட்டுத் தான் கண்ணை மூடுகிறாள்! அந்த அடையாளம் மட்டும் கொடுக்கா விட்டால் குழந்தையின் தகப்பன் எப்படி அதைக் கண்டுகொள்வான்?) அந்த அநாதைக் குழந்தை தான் அசோகா பிக்சர்ஸாரின் ''இந்திரா என் செல்வம்''. ஆஸ்பத்திரி நர்ஸே குழந்தையை எடுத்து வளர்க்கிறாள். (வாழ்க்கையில் நடக்க முடியாததுதான்! என்ன செய்யலாம்! சினிமாப் படங்களில் வரும் அநாதைகளுக்கும், துன்பப் படுகிறவர்களுக்கும் ஆதரவு கிடைக்கிறமாதிரி நிஜ வாழ்க்கையிலும் கிடைக்குமானால் நான் அநாதையாகவே இருந்துவிடத் தயார்!)

தேவலோகத்தில் தகப்பனார் இருப்பதாக எண்ணி, குழந்தை அவருக்குக் கடிதம் எழுதுவதும் அந்தக் கடிதத்துக்கு உண்மைத் தகப்பன் பதில் எழுதுவதும் ரொம்ப ரொம்பப் பழைய கதை! மறுமணத்தையே வெறுத்து வந்த கதாநாயகன் தன் குழந்தையை வளர்க்கும் நர்ஸிடம் மனத்தைப் பறி கொடுப்பதும் கூடப் புதியதல்லவே!

இடையில் சம்பந்த மில்லாமல் ஒரு வில்லன் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ள முயன்று கேலிக் கூத்தடிக்கிறான். நர்ஸ் சுசீலாவுக்குக் கிடைக்கவிருக்கும் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு போலி டாக்டர் வேஷம் போடுகிறான்; எம். ஆர். ராதா வில்லனாக வருகிறார். இந்த மாதிரிக் கூத்துக்களுக்கு அவரை விட்டால் வேறு ஆள் கிடையாதே!



இந்திரா என் செல்வம்



அசோகன் இந்தப் படத்தில் கதாநாயகன். கதை எப்படி யிருந்தாலும் கதா பாத்திரங்களுக்கு நல்ல சோக ரஸம் கிடைத்திருக்கிறது. அசோகனுக்கு நல்ல வாய்ப்பு என்றே கூற வேண்டும். மிக நன்றாய் நடித்திருக்கிறார். நர்ஸ் சுசீலாவை ஏற்காடு மலைப் பாதையில் சந்தித்து, பொய்யாகக் கார் விபத்தை உண்டாக்கி அவளைச் சோதனைக் குள்ளாக்கிய கட்டம் நன்று விருக்கிறது. கடைசியில் வில்லனோடு கட்டிப் புரண்டு செம்மையாக உதை கொடுக்கிறார். ஆனால் நர்ஸ் சுசீலாவாகப் பண்டரிபாயைப் போட்டது பொருத்தமா யில்லை. அவரைக் காட்டி, இளம் பெண்ணென்று எல்லாரும் நம்பும்படி வற்புறுத்துவது மிகக் கொடுமை யில்லையா? பண்டரி பாய் குழந்தை இந்திராவுக்கு மட்டும் தாயாகத் தோன்றவில்லை; அசோகனுக்கும் தாயாகத் தோன்றுகிறார்! இவைகளை யெல்லாம் சொல்லவேண்டாமென்று பார்த்தால் நம் படங்களை விட்டு இந்தக் கொடுமைகள் ஒழிவதுதான் எப்படி? ராயப்பனாக நடிக்கும் நாகேஷ் நன்றாய் நடிக்கிறார். இறுதிச் சண்டைக் காட்சிகள் படம் பார்ப்பவர்கள் மீது சிறிதும் இரக்கமில்லாமல் இழைக்கப்பட்டிருக்கும் கொடுமை. நிர்த்தாட்சிண்யமாக வெட்டி எறிய வேண்டிய பகுதிகள் இவை. வெட்டும்போது நினைவாக நர்ஸ் சுசீலா - கருணாகரன் நாடகத்தையும் வெட்டித் தொலைக்க வேண்டும்!

—காந்தன்



பட்டினத்தார்

திருவெண்காடர் வேஷத்தில் டி. எம். சௌந்திர ராஜனைப் பார்க்கும்போது பி. யு. சின்னப்பாவின் ஞாபகம் வருகிறது. அசப்பிலே பார்த்தால் ஜெமினி சந்திரா பத்மினியைப் போல் தோற்றமளிக்கிறார். ஆனால் உருவ ஒற்றுமை இருந்தால் மட்டும் போதுமா? நடிப்பு.....?

கதை வசனம் ஆகியவற்றுக்குத் தஞ்சை ராமையா தாஸும் அகிலனும் பொறுப்பேற்றிருக்கிறார்கள். பல இடங்களில் வசனங்கள் அழகாக அமைந்திருப்பதுடன் அழுத்தமாகவும் விழுந்திருக்கின்றன. செருகளத்தூர் சாமா சிவசர்மராக வந்து, தராசில் பொன் நிறைந்துள்ள தட்டு கீழே இறங்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகிறாரே அந்த இடம் ஒன்றே போதுமே. இருந்தாலும் மண்டையில் நிறைய ஏற்றிக் கொள்ள வேண்டியிருப்பதால் வீடு திரும்பும்போதுகொஞ்சம் கனக்கத்தான் செய்கிறது!

குழந்தையைத் தொட்டிலில் இடும் காட்சியில் எஸ். டி. சுப்புலக்ஷ்மியின் முக பாவம் நடிப்புக் கலையில் நீண்ட நாள் அனுபவம் பெற்றவர் அவர் என்பதனை நிரூபிக்கின்றது.

ஒளிப்பதிவு சிட்டிபாபு ரொம்பவும் சிரமப்படுத்தி விட்டார். பழைய கதையைப் படம் எடுக்கும்போது அதற்குப் புது மெருகு கொடுப்பதில் 'டெக்னீஷியன்கள்' பெரும் பங்கு எடுத்துக்கொள்ள முடியும். இந்தப் பொறுப்புணர்ச்சியுடன் காமிராவைக் கையாண்டவர் நடந்து கொண்டதாய்த் தெரியவில்லை.

சினிமா பார்ப்பதால் கெட்டுப்போகிறார்கள் என்று பலர் படித்துப் படித்துச் சொல்கிறார்கள் அல்லவா? அப்படிக் கெட்டுப் போகாதிருக்க அதிர்ச்சி வைத்தியம் செய்ய நினைத்தார் போலும் தயாரிப்பாளர் ஜி. ராமநாதன், பட்டினத்தார் படத்தை உருவாக்கியதன் மூலம். தீபாவளி மருந்து மாதிரி இல்லாமல், கஷாயம் போல் கசப்புத்தான் அதிகமாக இருக்கிறது படத்தில். திரைப்படத்தில் தொடர்ச்சியாக மூன்று பிணங்களைப் பார்த்துச் சகிப்பது எப்படிச் சாத்தியமாகும்?

பாடல்கள் பரவசப்படுத்த வில்லை என்றாலும் பழுதில்லை. கண்களை மூடிக் கொண்டு கேட்டால் இசையின் இனிமையை மட்டுமாவது அனுபவிக்கலாம்.

ராதா? – பூ! வழக்கமான கதைதான்!

பட்டினத்தாரைப் படித்தவர்களுக்குப் படம் பிடிக்கும்.



தாய்மார்கள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை இழுத்துக் கொண்டு சினிமாக் கொட்டகைக்கு வரக் கூடாது என்று சட்டம் இயற்றுவதில் குற்றம் இல்லைதான். நண்டுகளும் சுண்டுகளுமாய் இடுப்பில் சுமந்து கொண்டு படை பதைக்கும் வெய்யிலில் நாள் எல்லாம் 'கியூ'வில் நின்று சுகாதாரம் சிறிது மற்ற கொட்டகையினுள் மூன்று மணிநேரத்துக்கு மேல் அடைத்து, கசங்கி, அவதிப்பட்டுக் கிடந்தால் அந்தக் குழந்தைகளின் கதி என்ன? இப்படி எத்தனை எத்தனை இளஞ்சிறார்கள் சித்திரவதைக்குள்ளாகிறார்கள். ஒவ்வொரு நாளும் மூன்று வேளையும்? இந்த நல்ல காரியத்தை அரசாங்கம் செய்ய முன்வராது. தாய்மார்கள் தாங்களாகவே குழந்தைகளிடம் கருணை காட்டினால்தான் உண்டு.

வாட்டர்பரீஸ்
சிவப்பு லேபில்
காம்பவுண்ட்
இருமல்,
ஜலதோஷங்களுக்கானது




நான்கு நல்ல காரணங்கள் இதோ

1 இருமலையும், ஜலதோஷத்தையும், இமைப் பொழுதில், கச்சிதமாகக் கரைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**2** கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப்படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**3** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் வெறும் நோய் நிவாரணி மட்டுமல்ல; நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது.	**4** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டுகிறது. ஜீரண சக்தியை வளர்க்கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தாதுப் பொருள் நஷ்டத்திற்கு ஈடுசெய்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
சிவப்பு லேபில்

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)



பாரிஸ்டர் பரந்தாமன்

அட்டைப்படக் கதை

வாசவன்

அன்றைய தினம் ஏன் பொழுது விடிந்தது? அப்படித்தான் விடிந்தாலும் ஏன் பொழுது வளர்ந்து கொண்டே இருந்தது? அப்படியேதான் வளர்ந்தாலும் தபால்காரன் ஏன் வரவேண்டும்? வந்துதான் தொலைத்தாலும் அவன் ஏன் வக்கீல் நோட்டீஸைக் கொண்டு வந்து தர வேண்டும்?

இப்படிப் பல 'ஏன்'களை நெஞ்சு கொள்ளாமல் எழுப்பியபடி அப்படியும் இப்படியுமாக அலைந்தான் எழுத்தாளன் ஏகலைவன். எப்படி நடந்தாலும் விடிவு ஏதும் கிடைக்காத ஆழப் புதை இருட்டில் அவன் நெஞ்சம் துளி துளியாய் நழுவிப் போய்க் கொண்டிருந்தது.

வந்தது வக்கீல் நோட்டீஸா? மன்னிக்க வேண்டும். பாரிஸ்டர் நோட்டீஸ். பாம்புக்கு இன்னொரு பெயர் பாரிஸ்டரா? எப்படியோ? 'நோட்டீஸ்' என்ற புதரில் நெளிந்த பாம்பு இதுதான்:

''ஏகலைவன் அறிவது: என் அடுத்த வீட்டுக்காரரும், என் நீண்ட நாளையக் கட்சிக்காரரும், தமிழ் மீட்சிக் கட்சியின் தனிப் பெரும் தலைவருமான சிவபாதசுந்தரம் அவர்கள் வீட்டில் நேற்றைய தினம் நடந்த திருட்டுக்குக் கீழ்க்கண்ட விதத்தில் காரணமாகிறீர்கள்.

''நீங்கள் எழுதிய 'மின்சாரக் கன்னம்' என்ற மஞ்சள் நாவலின் நான்காவது அத்தியாயத்தில், முப்பத்தெட்டாவது பக்கத்திலிருந்து நாற்பத்தொன்றாவது பக்கம் இரண்டாவது பாரா எட்டாவது வரி வரையிலும் கதா (கள்ள) நாயகன் எந்த முறையில் திருடுகிறான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதே முறையில் சிவபாதசுந்தரம் அவர்கள் வீட்டில் திருடிய திருடனும் தன் கை வரிசையைக் காட்டியிருக்கிறான்.

''உதாரணமாக, நாற்பதாவது பக்கத்தில் 'மின்சாரக் கள்ளன் தான் வந்து போனதற்கு அடையாளமாக ஏதாவது ஒரு தடயத்தை விட்டுப் போக நினைத்தான். செப்புச் சூலாயுதம் ஒன்றை அந்த இடத்தில் போட்டு விட்டுப் போனான்' என்று எழுதியிருக்கிறீர்கள். அதே போல் சிவபாத சுந்தரம் வீட்டில் புகுந்த திருடன், ஒரு செப்புச் சூலாயுதத்தைப் போட்டு விட்டுப் போயிருக்கிறான். உங்கள் மின்சாரக் கள்ளனின் நோக்கம், 'பணக்காரர்களிடம் குவிந்து போயிருக்கிற செல்வத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதுதான்' என்று எழுதியிருக்கிறீர்கள். இந்தத் திருடனும் அதேபோல் ஒரு சம (அ)தர்மக் கடிதத்தை எழுதிப் போட்டு விட்டுத்தான் போயிருக்கிறான்.

'தீய வழிகளைக் கற்பிக்கக் கூடிய உங்கள் நாவல் வராதிருந்தால், இங்கும் ஒரு சூலா



யுதத் திருடன் வந்திருக்க மாட்டான் என்று கருதுகிறார் என் கட்சிக்காரர். செல்வந்தரும், செல்வாக்குப் பெற்றவரும், தமிழ் மீட்சிக் கட்சித் தலைவருமான என் கட்சிக்காரர், இந்தத் திருட்டின் மூலம் ஒரு நாற்பது வாட்ஸ் பல்பையும் விலை மதிக்க முடியாத தன்மானத்தையும் இழந்து நிற்கிறார். 'தம் சொத்தையே திருட்டுக் கொடுத்து விட்ட இவர், எப்படியோ, எங்கேயோ, எவராலோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழை எப்படி மீட்டுத் தரப் போகிறார்?' என்று எதிர்க் கட்சிப் பத்திரிகைகள் இழித்துப் பழிக்கும் அளவுக்கு மானம் இழந்து நிற்கிறார் என் கட்சிக்காரர். இதற்கெல்லாம் காரணமாக இருந்த நாவலை எழுதிய நீர், இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ஐம்பதாயிரம் ரூபாய்களை நஷ்டஈடாகத் தராது போனால், உம் மீது சிவில், கிரிமினல் ஆகிய இரண்டு விதங்களிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கண்டிப்பாய் அறியவும்.

—பாரிஸ்டர் பரந்தாமன்.''

சிவபாத சுந்தரம் செல்வந்தர்தான். சந்தேகம் இல்லை. செல்வாக்குள்ளவர்தான். ஆட்சேபம் இல்லை. 'தமிழ் மீட்சிக் கட்சி'யின் தனிப் பெரும் தலைவர்தான். ஏனென்று எதிர்த்துக் கேட்க அந்தக் கட்சியில் வேற்றவர் எவரும் இல்லை. அந்தக் கட்சிக்குச் சிவபாத சுந்தரம் அவர்கள் தலைவர். உதவித் தலைவி திருவாட்டி சிவபாதசுந்தரம். காரியதரிசி அவர் மாப்பிள்ளை. பொருளாளர் அவர் மகள் ஷீலா. கட்சி உறுப்பினர்கள் அவரிடம் பணி புரிபவர்கள்-ஒரு பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தைப் போல. இயங்காமலே எழுந்து ரூபத்தில் இருக்கும் 'தமிழ் மீட்சிக் கட்சி'க்கு அவர்தானே தனிப்பெரும் முதல்வராக இருக்க முடியும்? சிவபாதசுந்தரம் தனிப் பெரும் முதல்வராகவோ, முதலையாகவோ இருந்து விட்டுப் போகட்டும். அதற்கென ஒரு 'ரிட்' மனுப்போட எப்பொழுதுமே தயாராக இருந்ததில்லை ஏகலைவன். ஆனால் அவர் தம் வீட்டில் திருட்டுக் கொடுக்கும் அளவுக்கு ஏன் 'தனிப் பெரும் உறங்கி'யாக இருந்தார்? ஏகலைவன் அவர் பேரில் ஒரு 'உறக்க நஷ்ட வழக்கு'ப்போட உலக பிரஜா உரிமைச் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் முதலில் ஐம்பதாயிரத்தை எண்ணி வைத்து விட்டல்லவா வழக்குப் போட வேண்டும்?

நோட்டீஸை அனுப்பிய பாரிஸ்டர் பரந்தாமன் இருக்கிறாரே, அவர் ஒரு கலியுக ராவணன். சீதையைப் போலத்தான் அவரிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டான் ஏகலைவன்.


அசோகவனத்திலிருந்து ஏகலைவன் தப்ப ஏதேனும் வழியிருக்கிறதா?


'இல்லை' என்றது அவன் மனம்.

'அதற்குக் காரணத்தை நான் சொல்கிறேன்' என்றது அவன் புத்தி.

பாரிஸ்டர் பரந்தாமன் தமிழ் மண்ணில் அவதரித்ததற்கு இரண்டு பலமான காரணங்கள் உண்டு. ஒன்று: சட்டம் படிக்கப் போன வெள்ளைக்காரன் சீமையில் 'ஷூட் பண்ணி விடுவேன்' என்பதைச் சம்பளம் கொடுக்காமல் கற்றுக் கொண்டு வந்து, 'வேட்டை' என்ற பெயரில் வெட்டுக்கிளி கட்டுக் கொல்வது. (விவசாய அபிவிருத்தி இலாக்கா வெட்டுக்கிளியின் 'விதிநாசினி'யான இவருக்கு வெள்ளிப் பதக்கம் ஒன்றை வழங்கப் போவதாக ஒரு பிரளய பிரஸ்தாபம்!) இரண்டு: அமுதுக்குப் பதிலாக ஆங்கிலத்தை ஊட்டி வளர்த்த அவர் அருமைப் புதல்வி ஷீலா, பாரிஸ்டருக்குப் பாகற்காயைப் போன்ற தமிழ் இலக்கியத்தில் பற்று வைத்து, அத்துடன் நிற்காமல் இலக்கிய கர்த்தா ஒருவனிடம் புறநானூற்றுப் பெண்ணாகி உள்ளத்தைப் பறி கொடுத்ததற்குத் தடையாக இருப்பது.

இந்த இரண்டு காரணங்களில் கடைசிக் காரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இலக்கிய கர்த்தா ஏகலைவன்தான் என்று சொன்னால், அப்படிச் சொல்வது பாரிஸ்டர்





விரைவுக்கோர் திறவுகோல்

வருஷாவருஷம் சுமார் ஒன்றரைக் கோடி கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படாமல் ''ரிட்டர்ன்ட் லெட்டர் ஆபீசுகளுக்கு'' வந்து குவிகின்றன. காரணம்: தெளிவான விலாசம் இல்லாததுதான். பெருமுயற்சியுடன் சரியான நபருக்கு அவைகளில் 90 சதவீதம் கடிதங்களை எங்களால் அனுப்பிவைக்க முடிகிறது. விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியாதபோது எழுதியவருக்கே கடிதம் திருப்பி அனுப்பப்படுகிறது. அதுவும் மிகவும் தாமதமாகத்தான் நடைபெறுகிறது.

விலாசத்தை புரியாமல் எழுதினாலும் பூரணமாக
எழுதாவிட்டாலும் கடிதம்
தாமதித்தே செல்லும்

பூரணமாயும் புரியும்படியும் விலாசம் எழுதுங்கள்.

தபால் துரிதமாய்ச் சேரும்



உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA 62/143

பரந்தாமன் காதில் விழுந்தால் 'ஷூட்' பண்ணுமல் விடமாட்டார்.

ஒரு நாள். லீலாவும் ஏகலைவனும் கடற் கரையில் உலகத்தை மறந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது வெடிகுண்டுக்குள் காடி புகுந்தது போல் பின்னுலிருந்து கர்ஜனை புரிந்தார் பாரிஸ்டர். ''அயோக்கிய ராஸ்கல்! என்னடா பண்ணிக் கொண்டிருக்கிருய்?''

ஜீவாதார உரிமைச் சட்டப்படி, தீங்கில்லாத எதையும் செய்யலாம் என்று நிச்சயமாக நம்பிக் கொண்டிருந்த ஏகலைவன். அவரை அனுதாபத்துடன் பார்த்தான். பிறகு தருக்குடன் பேசினன்: ''என்ன செய்து கொண்டிருக்கிறேன்? காதல் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''காதலைச் செய்ய நீ யாரிடத்தில் உரிமை பெற்றுய்?'' என்று குமுறினர் பாரிஸ்டர்.

''காதல் 'காப்பிரைட்' அல்ல, குமுறும் பெரியவரே!'' என்று பயப்படாமல் பதில் அளித்தான் ஏகலைவன்.

''பெரியவரல்லடா நான். லீலா என்னும் பெண்ணைப் பெற்றவன்!''

'ஹா!'

''என்னடா ஹா! இன்னுமா லீலாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிருய்? எழுந்தோடுகிருயா? இல்லே, 'ஷூட்' பண்ணட்டுமா?'' என்று நிஜமாகவே வெட்டுக்கிளித் துப்பாக்கியைத் தூக்கி விட்டார் பாரிஸ்டர் பரந்தாமன்

இந்த நாட்டில் கொலை செய்வதைப் போல, கொள்ளை அடிப்பதைப் போல் காதல் செய்வதும் ஓர் இந்தியன் பீனல் கோடு சம்பந்தப்பட்ட குற்றம்தான் போலிருக்கிறது என்பதைத் துப்பாக்கி முனையில் தெரிந்து கொண்டு விட்ட ஏகலைவன் அடுத்த நிமிஷம் 'காதலை விட உயிர் எவ்வளவு பெரியது?' என்பதைப் புரிந்து கொண்டவனுக எடுத்தான் ஓட்டம்.

அப்பொழுது அவனை ஓட ஓடத் துரத்திய பாரிஸ்டர் இன்னும் விடுவதாக இல்லை. இப்பொழுதும் அவனை நோட்டீஸ் மூலம் துரத்துகிறார். கல்யாணமாகாத தன் கன்னிக் குமாரத்தியின் பக்கத்தில், மாப்பிள்ளையாகாத ஒரு மடையன் பேசிக் கொண்டிருந்தால், துரத்துவதை விட்டுவிட்டு, இரண்டு அட்சதைகளையா அள்ளிப் போடுவார்?

எப்படி இருந்தாலும் இனி அவன் தப்பித்துக் கொள்வதற்கில்லை. 'மின்சாரக் கள்ளன்' என்ற நாவலில் அவன் எழுதியிருப்பதைப் போன்ற முறையில், தமிழ் மீட்சிக் கட்சித் தலைவர் சிவபாத சுந்தரம் வீட்டில் திருட்டு நடந்திருந்தால், மேல்நாட்டுத் திடுக்கிடும் இலக்கிய ஜாம்பவான் ரெய்னால்ட்ஸ்தான் அதற்கு ஜவாப்தாரியாக வேண்டும். ஏனென்றால் ஏகலைவனுக்கு 'மின்சாரக் கள்ளனை'க் கொடுத்த புண்ணியவான் அவர்தான்! தொப்பியையும், கவுனையும் மாற்றிய கற்பனை ஒன்றுதான் அவனுக்குச் சொந்தம். ஆனால் புத்தகத்தின் முன்னுரையில் முழுக்க முழுக்கத் தன் சொந்தக் கற்பனை என்று பெருமையடித்துக் கொண்டிருப்பதால் என்றோ இறந்து போன அந்த மேல்நாட்டு மர்மக்கதை மன்னன் மேல் பழியைத் தூக்கிப் போட முடியாது. அப்படிப் போட முடியாததால் பாரிஸ்டர் பரந்தாமன் தூக்கிப் போட்டிருக்கும் வெடிகுண்டிலிருந்து அவனும் தப்ப முடியாது. இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து தப்புவதற்கு யோசித்தான். ஒரு வழியும் பிறந்தது.

ஏன் தப்ப முடியாது? பாரிஸ்டரின் காலில் விழுந்து கதறினுல் அதன் மூலம் அவர் மனம் கொஞ்சம் இளகினுல் தப்புவதற்கு வழி இருக்கத்தான் செய்கிறது. எப்பொழுதோ ஒரு முறை 'என் அப்பா ஒரு ஸ்தோத்திரப் பிரியர்' என்று கூறி இருக்கிருளே லீலா?

ஒரு வண்டி ஸ்தோத்திரங்கள் நெஞ்சில் ஏற்றிக் கொண்டு பாரிஸ்டர் வீட்டை நோக்கிக் கிளம்பினுன் ஏகலைவன்.

போலீஸ் ஸ்டேஷனைப் போல் இருபத்து நான்கு மணி நேரமும் திறந்து கிடக்கும் பாரிஸ்டரின் பங்களா வாசல், அப்பொழுது ஏனே சொர்க்க வாசல் போலச் சாத்திக் கிடந்தது. அதனுல் என்ன? லீலாவை உள்ளிருந்து வரவழைக்கும் சங்கேத ஒலியை அவன் இன்னும் மறந்து போய்விடவில்லையே! அந்த ஒலியைத் தொடர்ந்து அவள் உள்ளே போய் விடலாமே

'உஷ், விஷ், ஷ்....ஷ்.....'

ஒலி ஓசைக்குப் பலன் இருந்தது. விபரீதமான பலன்:

வந்தது லீலா அல்ல. பாரிஸ்டர் பரந்தாமன்தான்!

''என்னடா எழுத்தாளா? ஊளையிட்டுக் கொண்டிருக்கிருய்?'' என்று ஹாஸ்யமே போல ஆரம்பித்த பாரிஸ்டரின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஆயிரம் எரிமலைகள் எப்படி அந்தப் பன்னிரண்டு அங்குலப் பரப்புள்ள முகத்தில் வெடிக்கின்றன: ''அயோக்கியப் பயலே! என் லீலாவின் மனத்தில் கன்னம் வைக்கவா இப்படி ஊளையிடுகிருய்? நடக்காதடா உன் நரித்தனம். அன்று கடற்கரையில் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டாய். இன்று நான் உன்னை விடப்போவதில்லை!'' என்று பற்களைக் கடித்தபடி பாக்கெட்டில் கையை விட்டார்.

பாக்கெட்டிலிருந்து கையை வெளியே எடுக்கும்போது அதில் துப்பாக்கி இருக்க



டாக்டர் உங்களுக்கு என்ன உடம்பு?

நோயாளி நான்கு நாட்களாக உட்காரவே முடியவில்லை. நிக்கறேன்.

டாக்டர் அப்படியா? இந்தே உக்காருங்க இதோ வந்து விட்டேன்.

மாட்டாது என்பது என்ன நிச்சயம்? நிச்சயமில்லாத எதற்காகவும் தன் உயிரை நிச்சயமாகக் கொடுக்க விரும்பாத ஏகலைவன், கொஞ்சமும் தாமதிக்காமல் ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்தான்.

ஆமாம். அவன் சிலையாய் நின்றால் மயங்கி நிற்பதற்குப் பாரிஸ்டர் என்ன ஒரு கலைஞரா? எனவேதான் அவன் இரண்டாவது தடவையாகவும் அங்கிருந்து ஓடித் தொலைக்க வேண்டியிருந்தது.

மறு நாள். பாரிஸ்டரின் வாசல் கதவு. போலீஸ் ஸ்டேஷனாகி விட்டிருந்தது. ஆமாம்; இறந்து கிடந்தது!

சூறை மழையல் போலவல்ல; குமுறும் எரிமலையாக உள்ளே பிரவேசித்தான் ஏகலைவன்.

அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பவர் போல் போர்டிகோவில் நின்று கொண்டிருந்தார் பாரிஸ்டர்.

''கெட்-அவுட்!'' என்று சீறினார் பாரிஸ்டர் அவர்கள்.

''நிறுத்தும், உமது வெற்று வேட்டை!'' அவருக்கும் அதிகமாகக் கத்தியவன் ஏகலைவன் தானா? என்ன தருக்கு அவன் பார்வையில்? எத்தனை மிடுக்கு அவன் நடையில்? தமிழ்ச் சினிமா வில்லன் தூக்குப் போட்டுக் கொள்ள வேண்டும். அத்தனை கம்பீரம்!

பாரிஸ்டருக்கு ஓடுபவனை விரட்டித்தான் பழக்கம். இமயம் போல் எதிர்ப்பவனை இது வரை அவர் சந்தித்ததில்லை. அந்த ஒரு கணத்தில் அயர்ந்துதான் போய் விட்டார் அவர்.

''எச்சரிக்க வந்திருக்கிறேன் உம்மை. என் மின்சாரக் கள்ளனைப் படித்திருக்கிறீரா?'' பள்ளத்தாக்குப் போலக் குழிந்த ஏகலைவன் மார்பு, அப்பொழுது வேடந்தாங்கல் ஏரியைப் போலப் பரந்து நிமிர்ந்தது!

''படித்ததில்லை. காதுக்கு உயரமாக வைத்துப் படுத்துத் தூங்கியிருக்கிறேன்'' என்றார் பாரிஸ்டர் பரந்தாமன்.

''அளக்காதீர், சும்மா! நீர் படித்திருக்கிறீர்! அதற்கப்புறம்தான் உமது திறமையைக் காட்டப் புகுந்திருக்கிறீர். எப்படி என்பதை நீர் கேட்க விரும்ப மாட்டீர் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் சொல்லத்தான் போகிறேன். உமது வேலைக்காரனை அழைத்தீர். நான் என் நாவலில் குறிப்பிட்டிருக்கிற மாதிரி அவன் சிவபாதசுந்தரத்தின் வீட்டில் பல்லைத் திருட வைத்தீர். அப்படித் திருடிய பல்லை அவனையே எடுத்துக் கொள்ளும்படி செய்தீர்......''

''பைத்தியக்காரா! பல்லை நான் திருடச் சொன்னேனாக்கும்! அதை அவனையே எடுத்துக் கொள்ளும்படி செய்தேனாக்கும்! அதில் எனக்கென்ன லாபம்?''



''ரொம்ப ஞாபக மறதி டாக்டர். இப்ப சொன்னது அடுத்த நிமிஷம் மறந்து போய் விடுகிறது!''

''இந்த வியாதி எத்தனை நாட்களாக இருக்கிறது?''

''எந்த வியாதி?''

''இரண்டுவித லாபங்கள். ஒன்று: சிவபாதசுந்தரம் புகழ் பெறுவதில் உமக்கு விருப்பம் இல்லை. அடுத்த வீட்டில் இருந்து கொண்டு அந்தக் 'கொடுமை'யை உம்மால் தாங்க முடியவில்லை. திருட்டுப் போனால் அவர் அவமானத்தால் புழுங்குவார் என்பதற்காக அப்படிச் செய்தீர். பிறகு துக்கம் விசாரிப்பவரைப் போல அவர் வீட்டுக்குச் சென்று, உமது 'திருடன்' விட்டுப் போன தடயத்தை அவரிடம் காட்டி, என் புத்தகத்தின் மேல் பழியைப் போட்டு, என் பேரில் 'திங்கான பிரகாரம்' வழக்குத் தொடுத்து என்னை உள்ளே தள்ளி விட்டு, இரண்டாவது லாபத்தைப் பெற விரும்பினீர். அந்த இரண்டாவது லாபம் என்ன? நான் சிறையில் இருக்கும் காலத்தில் ஷீலாவை அந்தஸ்தான இடத்தில் திருமணம் செய்து விடலாம் என்பது! ஏனென்றால் ஷீலாவின் உறுதியைக் கலைக்க என்னைக் குற்றவாளியாக அவளுக்கு அறிமுகப்படுத்தி வைப்பது தான் என்பதை எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டிருந்தீர்....''

இடைமறித்தார் பாரிஸ்டர்: ''அழகான ஜோடனை! அற்புதமான கற்பனை! இத்தனைக்கும் சாட்சி?''

''நான் இருக்கிறேன் அப்பா!''

திரும்பிப் பார்த்தவரின் கண்ணில் தீயாக எரிந்தவள் ஷீலா.

''நீயா?....'' பாரிஸ்டரின் குரல் ஆழமாய்ப் புதையவே ஆசைப்பட்டது.

''நானேதான் அப்பா: நம் வேலைக்கார நாராயணனை நீங்கள் சிவபாதசுந்தரத்தின் வீட்டில் பல்லைத் திருட அனுப்பிய போது நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏகலைவன் உங்கள் மகளுக்குக் காதலன் என்றால், அவரை ஒழிப்பதற்கு இது சரியான வழி அல்ல. இன்னும் கௌரவமான வழியை நீங்கள் அனுஷ்டித்திருக்க வேண்டும். குற்றவாளியான காதலனை நான் வெறுப்பேன் என்று நீங்கள் நினைத்ததைப் போலக் குற்றவாளியான அப்பாவையும் நான் வெறுக்கக் கூடுமல்லவா? ஏகலைவனிடம் உண்மையைச் சொன்னவள் நான்தான். இனிமேல் சொல்ல வேண்டிய இடத்தில் நான் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கலாம்'' என்று சொல்லி முடித்த ஷீலாவின் கைகளைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினார் பாரிஸ்டர் பரந்தாமன்.

கொஞ்ச நேரத்தில் திரும்பிய ஷீலாவின் புன்னகைக்கு ஒரு புதுப் பொருள் இருந்தது. ஏகலைவனுக்கும் அது புரியத்தான் செய்தது.

இனி ஆரம்பமாகப் போகிற வழக்குக்கு முப்பது முக்கோடி தேவர்களும் நிச்சயம் வந்து சேருவார்கள்!


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை
உபயோகித்து நாள் முழுவதும் குளுமையையும்
நறுமணத்தையும் அனுபவியுங்கள்
எந்தப் பருவகாலத்திலும் நீங்கள் நாள் முழுவதும்
இதமாக இருக்கலாம்—குளிர்ந்த நீரில் குளித்த
பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம்
பவுடரை உடல் மீது தாராளமாகத் தூவினால்
நாள் முழுவதும் அயர்வில்லாமல்
புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்!
துல்லியமான நறுமணமுடைய இப்
பவுடர் வியர்வையை உறிஞ்சுவதில்
இணையற்றது...நீராடிய புத்துணர்ச்சி
நாள் பூராவும் நீடித்து நிற்கச்
செய்யும் சிறந்த சுகந்த சாதனம்!
POND'S
DREAMFLOWER TALC
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)
JWT-P 3233



அத்தியாயம் 19

கிராமத்துக்கு ஒரு பள்ளி

கலெக்டரை நேரில் சென்று கண்டதினால் கணிசமான பலன் ஏதும் கிட்டாமல் போகவே வருத்தத்துடன் தேனூருக்குத் தாரா திரும்பிக் கொண்டிருக்கையில் அவளுக்குத் திடீரென்று அந்த எண்ணம் உண்டாயிற்று. 'நாமே தேனூரில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தினால் என்ன?' என்பது தான் அந்த எண்ணம்.

கூடவே, 'நடக்கிற காரியமா அது?' என்ற எதிர்ப்பும் உருவாயிற்று அவள் உள்ளத்தில். 'தன்னந் தனியாக இருந்து கொண்டு உன்னால் எதைச் சாதித்துவிட முடியும்?' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அவள். அதைத் தொடர்ந்து தேனூரைச் சென்றடையும் வரையில் பலத்த சர்ச்சையில் ஈடுபட்டாள். யோசிக்க யோசிக்க இந்தத் திட்டம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. 'எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டானாலும் பாதகமில்லை. எப்பாடுபட்டேனும் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கிவிட வேண்டியது தான்.' இந்த முடிவுக்கு வரப் பல காரணங்கள் தோன்றின.

தேனூரில் இருந்த குழந்தைகளில் பெரும்பாலோர் பள்ளி வாசலில் அடி எடுத்து வைத்ததே கிடையாது. ஓரளவுக்கு வசதி படைத்த குடும்பத்தினரின் சிறுவர் சிறுமியரும் டவுனுக்குப் போய்த்தான் படித்துவிட்டு வந்தார்கள். வெங்கிட்டு வாத்தியாரும் அங்கே இருந்த உயர்நிலைப் பாடசாலையில் தான் வேலையில் இருந்து வந்தார், உத்தியோகத்திலிருந்து துரத்தி அடிக்கப்படுவதற்கு முன்னால்.


ஆகக் கூடித் தேனூரிலேயே பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவக் கூடுமானால் கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு ரொம்பவும் சௌகரியமாகப் போகும் என்பதோடு வெங்கிட்டு வாத்தியாருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்ததாக இருக்கும். 'அவருக்கு மட்டும் சம்பளம் என்று ஒரு தொகையைக் கொடுத்து விடுவது. பிறகு நானும் பாருவும் இன்னும் இந்த நல்ல பணிக்கு மனமுவந்து உதவ முன்வருகிற இரண்டொருவரும் ஒன்றாகச் சேர்ந்தால் போதாதா, குழந்தைகளைக் கட்டி மேய்க்கவும் அறிவு புகட்டவும்? ஐந்தாறு மாதங்கள் வரை இங்கே தங்குவதாகப் பாருவிடம் வாக்களித்துவிட்டு வந்திருக்கும் நான் வம்பளப்பதிலும் வெறுமனே உட்கார்ந்திருப்பதிலும், வெட்டியாகப் பொழுதைப் போக்குவானேன்? ஊருக்கு நல்லது செய்து, உள்ளத்துக்கும் நிம்மதி தேடிக் கொண்டால் என்ன?'

புதிய பள்ளி காந்திய அடிப்படையில் கைத்தொழில்களுக்கு முதலிடம் கொடுத்துச் செயல்பட வேண்டும்என்று ஆர்வத்தோடு நினைத்தாள் தாரா. ஐந்து முதல் பன்னிரண்டு பதின்மூன்று வரையில் வயதுள்ள பையன்களும் பெண்களுமாய் நிறைந்து ராட்டை சுற்றுவதிலும், தக்களியில் நூற்பதிலும், நெசவுத் தொழிலைப் பயில்வதிலும் இன்னும் தச்சு வேலை, தோட்ட வேலை போன்ற பல காரியங்களிலும் குதூகலமாக ஈடுபட்டிருக்கும் காட்சியை மானசீகமாகப் பார்த்தபோதே தாராவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. பள்ளிக்கூடம் பற்றிய தனது திட்டங்களை உடனடியாக யாரிடமாவது



சொல்லா விட்டால் இத யம் வெடித்துவிடும் போல் இருந்தது அவனுக்கு. சிறு வன் மோகனே இழுத்து மடியில் உட்கார வைத் துக் கொண்டு மனத்தில் அலே அலேயாகப் பொங்கிய எண்ணங்களே யெல்லாம் கொட்டித் தீர்த்தான் அவன்.

இவ்வளவும் தங்குதடை யின்றி நிறைவேற ஒரே ஒரு இடைஞ்சல் தான். அது பொருளாதாரப் பிரச்னே. சாமான்யமான தடங்கல் அல்லவே அது? இதைக் குறித்துத் தீவிரமாய்ச் சிந்தித் தாள் தாரா. 'அப்பாவுக்குக் கடி தம் எழுதினுல் ஏதேனும் ஒரு தொகை அனுப்பி வைக்காமல் போகமாட்டார். பிறகு...?' முத்தையாவைப் பற்றி வடி வேலு மூலமாக நிறையக் கேள்விப்பட் டிருந்ததால் அவரிடம் நன்கொடை கேட்கும் எண்ணத்தை அடித்து விரட்டி ஞன் அவன். 'அதோடு அவர் வீட் டிலே நான் விருந்தாளியாக இருந்து ஏற்கனவே நன்றிக் கடன்பட்டிருக்கும் போது மேலும் அவருக்குத் தொந்தரவு கொடுப்பது எப்படி நியாயமாகும்? ஊரி லுள்ள மற்றவர்களெல்லாம் தாராள மாக ஒத்துழைப்பதைப் பார்த்துவிட்டு அவராகவே தயாள சிந்தையுடன் நடந்து கொண்டாராஞல் தடைசொல்ல.



லாமல் ஏற்றுக் கொள்ளலாம். அதற்கு முன்னால் கிராமத்தில் வசிக்கும் செல்வம் படைத்த வேறு சில பெரிய புள்ளிகளை இந்த முயற்சியில் சிரத்தை எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். பின்னர் முத்தையாவும் போட்டி போட்டுக் கொண்டு முன் வரலாம், தானும் நல்ல பேர் எடுக்க வேண்டும் என்கிற ஆசையில்.'

இந்த ரீதியிலே யோசித்துக் கொண்டே போன தாரா, பணக்காரர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு சிலரில் பொன்னம்பலம் முதலிடம் பெறுவதை உணர்ந்தாள். 'அவருக்கு எதிராகக் கலெக்டரிடம் போய்ப் புகார் செய்து விட்டுப் புண்ணியமில்லை என்று உறுதியானதும் அவரிடமே போய்க் குழைவதா? கூடாதுதான். குழைய வேண்டாம்; கடமையை எடுத்துச் சொல்வோம். வெங்கிட்டு வாத்தியாருக்கு ஒரு வழி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறாரே அவர்? அதோடு கலெக்டரிடம் தான் போய்வந்தது பற்றி வேறு யாரேனும் அவரிடம் மனக் கசப்புக்கு இடம் அளிக்கும் வகையில் தூபம் போடுவதற்கு முன்னதாக நானே நேரில் போய்ப் பேசிவிடுவது நல்லதல்லவா?'

இம்மாதிரியெல்லாம் தீர்மானித்துக் கொண்ட தாரா, ஊர் திரும்பிய சில மணி நேரங்களுக்குள்ளாகவே பொன்னம்பலத்தின் வீட்டை அடைந்தாள். அங்கே தனக்கு இவ்வளவு தடபுடலான உபசாரம் நடக்கும் என்று அவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவேயில்லை. மிகுந்த மரியாதை காட்டி வரவேற்றார் பொன்னம்பலம். தாராவை வாசலுக்குள் முதலில் நுழைய விட்டுப் பின்னால்தான் அவர் சென்றார்.

''என்ன அதிசயம் பாருங்க, இவ்வளவு நேரமா உங்களைப் பற்றித்தான் பேசிக்கிட்டிருந்தோம்; நீங்கள் நேரிலேயே பிரத்யட்சமாயிட்டீங்க. உட்காருங்க, உட்காருங்க!''

மகள் செல்லம் தகப்பனாரின் சொல்லுக்கிணங்க விரித்திருந்த பாயில் அமரப் போனாள் தாரா. ''இப்படி உட்காருங்க!'' என்று நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டார் பொன்னம்பலம். ஊஞ்சலில் தாம் அமர்ந்து, சங்கிலியை மகள் பிடித்துக் கொண்டு நிற்க மெல்ல ஆடினார்.

''என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்னைப்பற்றி? நான் ரொம்பப் பொல்லாதவள் என்றா?'' சற்று முன்னால் திண்ணைப் புறத்தில், 'தலையைச் சீவி விடுவாளோ கலெக்டர் துரை?' என்று பொன்னம்பலம் இரைந்து கொண்டிருந்ததைத் தாராவினால் அதற்குள் மறந்து விட முடியவில்லை.

''சேச்சே! விளையாட்டாக்கூட அப்படிச் சொல்றவனுடைய நாக்கு அழுகிப் போயிடாதா? எப்படிப்பட்ட அதிர்ஷ்டம் இந்தக் கிராமத்துக்கு? அதைக் காட்டிலும் நாங்க எல்லாருமே ரொம்பக் கொடுத்து வைச்சிருக்கோம். இல்லாத போனால் உங்களைப் போன்றவங்ககிட்டே நெருங்கிப் பழகற சந்தர்ப்பம் எங்களுக்கு எங்கேயிருந்து கிடைக்கப் போகுது?''

''ஏதேது. ஒரேயடியாகப் புகழ்கிறீர்களே?'' என்றாள் தாரா.

மகளைப் பார்த்து மகிழ்ச்சிப் பூரிப்புடன் கூறினார் பொன்னம்பலம்: ''செல்லம்! தெரியுமா உனக்கு? இவங்களெல்லாம் சுபாஷ் போஸுக்கு நகமும் சதையும் என்பார்களே அப்படி. ரொம்பவும் வேணுமென்கப்பட்டவங்க. 'பார்வர்டுபிளாக்'கிலே சேர்ந்து சுபாஷோட உத்தரவு கேட்டு அதன்படி நடந்துக்கிறவங்க. அவர் தம்மோட திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற நம்ம கிராமத்தைத் தேர்ந்தெடுத்தாரே, அதைச் சொல்லு! இலேசாக் கிடைச்சுப்புடற பாக்கியமா அது?''

தாராவினால் சிரிப்பைத் தாங்கவே முடியவில்லை. தயங்காமல் நகைத்தாள் அவள். தன் கணவரைப் பற்றி ஏதோ அரையும் குறையுமாக அறிந்து வைத்துக் கொண்டு யாரோ பெரிதாகக் கதை அளந்து விட்டிருக்கிறார்கள் என்பதை அவள் ஊகித்தாள்.

''அது எப்படியோ போகட்டும். நான் வந்த விஷயம் வேறு....''

''என்னால் என்ன ஆக வேண்டும், சொல்லுங்க!'' நடு விரலையும், கட்டை விரலையும் சேர்த்துச் சொடுக்கினார் பொன்னம்பலம், எதுவானாலும் விநாடிப் பொழுதில் செய்து காட்டுகிறேன் என்பது போல.

''அதைச் சொல்லுவதற்கு முன்னால், கலெக்டரிடம் போய் உங்களைப் பற்றி முறையிட்டேன் என்பதால் என் மீது உங்களுக்கு லவலேசமும் கோபமில்லையே? முதலில் அதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் நான்.''

''நான் நிஜத்தைச் சொல்லிப் போடறேன்; நீங்க அவ்வளவு தூரத்துக்குப் போயிருக்க வேண்டாம்! நேரா என்கிட்டே வந்து, 'பொன்னம்பலம்! நீ செய்தது சரியில்லை; வாத்தியார் கஷ்டப்படறார்' அப்படீன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தீங்கன்னா போதும். உடனே ஸ்கூல் டிரஸ்டியைத் தேடிப்

உங்கள் சருமம் மிருதுவாக, சுத்தமாக

புதுமலர்ச்சியோடு

விளங்க



டாடாவின்
ஓ டி கோலான்
சோப்



TESY-25

போய், நேரிலே சந்திச்சு நான் எழுதிக் கொடுத்ததை யெல்லாம் வாபஸ் வாங்கிக்கிட்டு வந்திருப்பேன். இப்போ காலம் கடந்து போச்சு. போகட்டும், அவருக்காக நான் என்ன செய்யணும்னு நீங்க நினைக்கிறீங்க? சாருக்காக ஒரு பள்ளிக்கூடத்தையே ஆரம்பிக்கணுமா? சொல்லுங்க, செய்துப்புடுவோம்!''

தூக்கிவாரிப் போட்டது தாராவுக்கு. காப்பியை அருந்துவதற்காகத் தம்ளரை வாய் வரைக்கும் எடுத்துச் சென்றிருந்த அவள் அதிர்ச்சி அடைந்தவளாக அதை டபராவில் திரும்பவும்வைத்துவிட்டாள்.

''என்ன விநோதம் இது! என் மனத்தில் இருந்ததை அப்படியே படித்து விட்டீர்களே!''

''நீங்க ஒரு பக்கம்!'' என்று கண்ணங்கள் பழுத்துச் சிவக்கச் சிரித்தார் பொன்னம்பலம். ''ஏதோ பேச்சுக்குச் சொல்லி வைத்தால் கேலி செய்யத் தொடங்கி விட்டீங்களே?''

பரபரப்புடன், ''இல்லே, நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லே'' என்றாள் தாரா, மனம் மாறிவிடப் போகிறதே அவருக்கு என்ற கவலையுடன். ''காரிய சாத்தியமாகக் கூடாதா உங்கள் வார்த்தைகள்? பேச்சளவோடு நிற்க வேண்டியதுதானா?''

''என்கிட்டேயிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீங்க?'' என்று கேட்டார் பொன்னம்பலம்.


பள்ளி சம்பந்தமாய்த் தன் மனத்தில் இருந்தவற்றை யெல்லாம் விவரித்தாள் தாரா. கடைசியில், ''இதற்கெல்லாம் பெரிய கட்டடம் என்பதாக ஒன்றும் வேண்டியதில்லே. ஊர் எல்லேயில் இருக்கிறதே பிரும்மாண்டமான ஆலமரம்; அதனடியில் கூட வகுப்புக்களை நடத்திக் கொள்ளலாம்'' என்றாள்.

''பார்த்தாயாம்மா செல்லம்! அக்காளுக்கு ஏழை ஜனங்ககிட்டே இருக்கிற சிரத்தையை? நமக்காகவே வாழ்ந்துக்கிட்டிருந்தா எப்படி? மற்றவங்களுக்காகவும் பாடுபட வேண்டாமா?''

''செல்லமும் என்னோடு சேர்ந்து கொள்ளட்டுமே! அதற்கு உங்களுடைய சம்மதத்தைக் கொடுத்து விட்டால் போதும்; இந்தக் கிராமத்தில் உள்ள மற்ற எல்லாருமே ஆதரவு காட்டுவார்கள், மிகுந்த அக்கறையும் எடுத்துக் கொள்வார்கள்!''

''பிரமாதப்படுத்திப்புடுவோம்; நீங்க மனசு வைச்சதுக்கப்புறம் நடக்காத காரியமா? முதற்படியா நாளன்னைக்கு நம்ம வீட்டிலே விருந்து. அன்னைக்கு முக்கியப் பட்டவங்க எல்லாரையும் தருவிச்சு ஒண்ணு இங்கே கூட வைச்சு இந்தச் சங்கதியை உடைச்சு விட்டுவிட வேண்டியது. முத்தையா கிட்டேயும் சொல்லி வையுங்க. நாளைக்கு நேரிலேயே வந்து அழைச்சுப்புடறேன்.''

இவ்வளவு சுலபமாகவும் வேகமாகவும் தன் ஆசைகள் நிறைவேறும் என்று தாரா கனவில்கூடக் கருதியிருக்க மாட்டாள். அப்படியிருக்க ஏதோ மந்திர ஜாலத்தில் எல்லாம் நடப்பது போல் பிரமை உண்டாயிற்று அவளுக்கு. ஆனந்த மிகுதியில் அவள் சற்றும் தயங்காமல் விருந்துக்கு வர ஒப்புக் கொண்டு விட்டாள்.



அத்தியாயம் 20

ஒளிரும் தாரகை

பொன்னம்பலம் சொன்ன சொல் தவறவில்லை. தாராவுக்கு உதவுவதாகத் தாம் அளித்த வாக்குறுதியை அவர் மறக்கவில்லை. அவருடைய வீட்டிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் அவருக்கு ஒரு மனை இருந்தது. சுற்றிலும் முள் வேலி எழுப்பி, வேளைக்கு மூன்று படிக்குக் குறையாமல் கறக்கும் எருமைகள் நான்கையும் இரண்டு பசுக்களையும் அதனுள் கட்டிப் போட்டு வைத்திருந்தார் அவர். மாட்டுக் கொட்டில் என்பதாகப் பெயருக்கு அங்கேயிருந்த ஒரு 'கட்டடத்தை' அந்தமாடுகளே தங்கள் இருப்பிடமாக ஏற்றுக் கொள்ள மறுத்து அரசமரத்தடியில் படுத்து அசை போட்டன.

தாராவும் மற்றவர்களும் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்து விருந்துண்டு திரும்பிய இரு தினங்களில் அவர் அவனை அந்த மனைக்கு அழைத்துச்



சென்றார். அதற்கு முன்னமேயே மாடுகளை யெல்லாம் அவிழ்த்து விரட்டிக் கொண்டு போய்த் தம் வீட்டின் கொல்லைப்புறத்திலேயே முளையடித்துக் கட்டச் செய்திருந்தார். இப்போது வெய்யிலும் மழையும் ஒழுகக் கூடிய அந்த மாட்டுக் கொட்டிலும் எருமைகள் புரண்டதால் ஏற்பட்ட சேறுமே எஞ்சியிருந்தன அங்கே. கொட்டிலை நெருங்கி, தொட்டால் தகர்ந்து விழுந்துவிடும் போல் இருந்த தட்டிக் கதவை ஜாக்கிரதையாக இழுத்துச் சாத்தினார் பொன்னம்பலம். இடுப்பில் சொருகப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்த சாவிக் கொத்தை எடுத்து அவற்றுள் ஒன்றை நாதாங்கியில் தொங்கிய பூட்டினுள் நுழைத்துத் திருப்பினார். சரியாகப் பூட்டியிருக்கிறோமா என்று ஒருமுறை பூட்டை உலுக்கிப் பரிசோதித்து விட்டுச் சாவியை வளையத்திலிருந்து கழற்றித் தாராவிடம் தந்தார். ''உங்கள் பள்ளிக்கூடம் தயாராயிடுச்சு; பிள்ளைங்க வரவேண்டியதுதான் பாக்கி!'' என்றார்.

ஆலமரத்தடியில் பள்ளியை நடத்த அனுமதி கிடைத்தாலே போதும் என்று எண்ணி வந்த தாராவுக்கு மெய்யாகவே அரமனை கிடைத்தது போல் இருந்தது. நன்றி பொங்கும் நெஞ்சத்துடன் அவள் திறவுகோலைக் கை நீட்டிப் பெற்றுக் கொண்டாள். ''பிஞ்சு உள்ளங்கள்தான் இங்கே படிக்கப் போகின்றன. ஆனால் உங்களை அவர்கள் வாழ்த்துகிற ஒலியில் பழுத்த பழத்தின் நிறைவு நிலவும், முதிர்ச்சி தொனிக்கும், இனிமை சொட்டும்!'' என்றபோது அவள் குரல் கம்மிக் கரகரத்தது.

''அழகாகப் பேசறீங்க'' என்று பாராட்டி விட்டுத் திரும்பினார் பொன்னம்பலம். வேலியை அடைந்ததும் எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயலுகிறவர் போல் நெற்றியை ஒரு விரலால் கொட்டிக் கொண்டார். பின்னர், ''முக்கிய விஷயம்! மனைக்கும் கட்டடத்துக்குமாய்ச் சேர்த்து மாத வாடகை இரண்டு ரூபாய்! ஐந்து தேதிக்குள் கண்டிப்பாய்க் கட்டிவிட வேண்டும்'' என்று கூறிவிட்டுப் போனார்.

''ஆகட்டும்'' என்று புன்னகையுடன் தலையசைத்து வைத்த தாரா, சொத்துரிமையை விட்டுக் கொடுக்காததோடு முன்யோசனையுடன் அதனை ஆர்ஜிதப் படுத்திக் கொள்ளும் அவர் சாமர்த்தியத்தை வியந்தவாறே சுற்றிலும் கண்ணோட்டம் செலுத்தினாள். மாட்டுக் கொட்டிலை மாணவ மாணவியரின் கூடமாக்கும் மாயா ஜாலத்தைச் செய்ய வழி வகைகளை ஆராய்ந்தது அவள் மனம். நான்கு ஆட்களை அந்த வேலையில் ஏவி விடுமாறு அவள் வடிவேலுவைக் கேட்டுக் கொண்டாள். தன்னையும் சேர்த்து நாலு என்று கணக்குப்போட்டு அவன் மூன்று பேர்களுடன் வந்து சேர்ந்து விட்டான்.

ஒரு பர்ணசாலையைப் போல் தோற்றமளிக்க வேண்டும் என்ற தாராவின் விருப்பத்துக் கிணங்க ஆயிரம் பொத்தல்களுடன் கூடிய ஓலைக் கூரையை அவர்கள் அப்புறப்படுத்தினார்கள். ஓரடி கனத்துக்கு வைக்கோலை வைத்து வேறு கூரை வேய்ந்தார்கள். இடுப்பளவு உயரம் எழும்பியிருந்த சுவரின் மேல் மட்டத்திலிருந்து கூரை வரையில் மூங்கில் பிளாச்சுக்களைக் குறுக்கும் நெடுக்குமாகப் பொருத்தி ஆணி அடித்தார்கள். கீழே தளத்தை உறுதியாக்கி, சுவர்களுக்குச் சுண்ணாம்பு அடித்து, கடைசியாகச் சுற்று வட்டாரத்தையும் சுத்தம் செய்தார்கள்.

இதற்குள்ளாகத் தாரா தேனூர் வாசிகள் பலரிடமும் போய்ப் பண உதவி கோரினாள். பொன்னம்பலத்துடன் போட்டியிட்டுக்கொண்டு பலர் பொருள் வழங்குவார்கள் என்ற அவள் கருத்து பொய்த்து விட்ட போதிலும் பணத்துக்குத் தட்டுப்பாடும் ஏற்படவில்லை. முத்தையா கொஞ்சம் முனகிக் கொண்டே மகளுடைய வற்புறுத்தலுக்கு இசைந்தார். மாப்பிள்ளை சிங்காரம் தாராளமாய்த் தானம் செய்தது அவருக்குத் தெரியாது. இல்லாவிட்டால் தம்பிடி பெயர்ந்திராது அவரிடமிருந்து. வேறு பலரும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்பத் தராது, அதற்குக் கணிசமாகக் குறைந்த அளவுக்குக் கொடுக்க முன்வந்தார்கள்.

தாராவும் பாருவும் செல்லமும் கூடி யோசித்து நீண்ட பட்டியலைத் தயாரித்தார்கள். கரும்பலகை ஒன்று, மேஜை நாற்காலிகள் இரண்டு, அலமாரி ஒன்று, ராட்டினங்கள், தக்ளிகள், தோட்ட வேலை, தச்சு வேலை இவற்றுக்கான ஆயுதங்கள், தேசப்படம், தலைவர்களின் படங்கள், புத்தகங்கள்... இப்படியாகப் பட்டியல் மிகவும் நீளமாகவே இருந்தது. வடிவேலுவின் உதவியுடன் இவற்றை யெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து சேர்த்தாள் தாரா. ஒவ்வொன்றையும் எங்கே வைக்க வேண்டும் என்று தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவாள். அந்தப் பொருள் குறிப்பிட்ட இடத்தை அடைந்த உடனே தன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு வேறு ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டுவாள்.

''ஸ்திர புத்தியே இல்லையே?'' என்று அலுத்துக் கொள்வது போல் கேட்டுச் சிரித்தான் வடிவேலு விளையாட்டாக.

''நான் ஏற்றுக் கொண்டிருக்கும் இந்தப் பொறுப்பில் உங்களுக்கு உண்மை




ஒரு கிளாஸ்
கிஸான் ஸ்க்வாஷ்
அருந்தி இளைப்பாறுங்கள்

சுவை மிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.

திடீரென்று வரும் விருந்தாளிகளுக்கென்றே தனியாக ஒரு பாட்டில் வைத்திருங்கள். கிஸான் ஸ்க்வாஷ் ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்.

WT/KP-1809a




DALDA

யான சிரத்தை இல்லை. ஏதோ ஒப்புக்குக் கூடமாட உதவுவது போல் நீங்கள் நடிக்கிறீர்கள்'' என்று குற்றம் சாட்டினாள் தாரா.

'இதென்ன விபரீதம்?' என்று மௌனமாக அவள் சொற்படி கேட்டு நடந்தான் வடிவேலு. போகப் போக அவளுடைய ஒவ்வொரு சிறிய செயலிலும் கலையழகு மிளிர்வதை அவனால் கண்டு கொள்ள முடிந்தது. எளிமையிலும் எழில் நிறைந்து வழியக்கூடும் என்பதைக் கண்கூடாகப் பார்த்து உணர்ந்தான் அவன். மகாத்மாவின் உருவச்சிலைக்கு எதிரே மண்பாண்டம் ஒன்றில் நீர் ஊற்றி மலர்களை அவள் தன் கைப்பட அதில் அலங்கரித்ததும், அவை புன்னகை பூத்த அந்த முகத்துக்குப் புதியதொரு சோபையைக் கூட்டித் தந்தன. கண்ணாடி அலமாரியில் புத்தகங்களை மட்டும் வரிசையாக அடுக்காமல் இடையிடையே சில பொம்மைகளை இங்கொன்றும் அங்கொன்றுமாய் நிறுத்திய விதத்தில் வனப்பு மிகுதியானது மட்டுமல்ல, அவற்றுக்குப் பக்கத்திலுள்ள புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையே குழந்தைகளிடத்தில் ஊட்டுவது போல் அமைந்திருந்தன. தரையின் மையத்தில் இழை இழையாகக் கோலம் போட்டு நடுவே குத்துவிளக்கு ஒன்றையும் ஏற்றி வைத்ததும் அறிவொளி பரவி நிறைந்த அறையாக அந்தக் கூடம் திகழ்ந்தது. விநாடிக்கு விநாடி இந்த ரசிகத்தன்மை வடிவேலுவினிடம் வளர்ந்து புதியதொரு உற்சாகத்துடன் பள்ளிக்காக அந்தக் குடிலைப் புதுப்பிக்கும் பணியில் அவனை ஈடுபடச் செய்தது.

ஃ ஃ ஃ

தாராவுக்கு வீட்டிலே இருப்புக் கொள்ளவில்லை. மோகனைச் சீக்கிரமாகத் தூங்கப் பண்ணிப் போட்டுவிட்டு, அன்று காலையில் வடிவேலு வாங்கி வந்திருந்த வர்ணக் காகிதங்களை எடுத்துக் கொண்டு அவள் பள்ளியை நோக்கிப் புறப்பட்டாள். கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அரிக்கன் விளக்கைப் பொருத்திவிட்டு அவள் ஆனந்த மிகுதியில் பம்பரம் போல் ஒரு முறை சுழன்று நின்றாள். வாழ்க்கையில் நாமும் நாட்டுக்கு நன்மை பயக்கும் ஓர் அரிய காரியத்தைச் சாதித்து விட்டோம் என்கிற உவகைப் பெருக்கில் அவள் இதயம் பூரித்தாள். கண்களில் நீர் தளும்பி நின்றது.

வாசலில் நிழல் போல் ஓர் உருவம் அசைவதாய்த் தோன்றவே இரு கன்னங்களிலும் உள்ளங்கைகளைப் பதித்துப் பதறித் திரும்பினாள் தாரா.



திருச்சோற்றுத்துறை திரு ஜி. வைத்திய நாதய்யர் அவர்களின் புதல்வி சௌ. செல்லம்மாளுக்கும் முல்லைக்குடி திரு நாராயணசாமி அய்யர் அவர்களின் புதல்வர் திரு விகவேகவரனுக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

''உங்களுடைய தனிமையில் குறுக்கிட்டு விட்டேனா நான்?'' என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தான் வடிவேலு.

அவன் குரலைக் கேட்டதும் நிம்மதியுற்றவளாக, ''அப்பாடா! ஓசைப் படுத்திக் கொண்டு வரக் கூடாதா? ஒரு கணம் திடுக்கிட்டுப் போய் விட்டேன்'' என்றாள் தாரா.

''மாவிலைத் தோரணங்கள் கட்ட வேண்டும் என்றீர்களே என்பதால் எடுத்து வந்தேன். பிறகுதான் நீங்கள் சற்று நேரம் ஏகாந்தமாக இருக்க எண்ணி இங்கே வந்திருக்கிறீர்களோ என்ற சந்தேகம் எழுந்தது.''

''அப்படியொன்றும் இல்லை. நானும் காகிதத் தோரணங்களை ஒட்டும் உத்தேசத்தோடுதான் கத்திரிக்கோலைத் தேடிக் கொண்டிருந்தேன்'' என்று கூறி மேஜை டிராயரைத் திறந்தாள் தாரா. பென்சிலினால் சிவப்புத்தாள் ஒன்றில் 'காந்தி பாடசாலை' என்று கொட்டை கொட்டையாக எழுதிவிட்டு எழுத்துக்களைத் தனித்தனியே கத்திரிக்கத் தொடங்கினாள். நளினமாக அவள் விரல்கள் செயல்படும் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது வடிவேலுவுக்கு.

''என்ன மௌனச் சாமியாராக மாறி விட்டீர்கள்?'' என்று கேட்டாள் அவள் தன் தலையை நிமிர்த்தாமலே.

''யோசனை'' என்றான் அவன். ''ஐந்தாறு மாதங்களில் திரும்பி விடப் போவதாகப் பயமுறுத்துகிறீர்களே, அதன் பிறகு இந்தப் பள்ளிக்கூடம் எப்படி நடக்கும்?''

''நிரந்தரமாக இங்கேயே தங்கி விடுமாறு அன்றைக்கு நீங்கள் என்னைக்

கேட்டுக் கொள்ளவில்லையா? ஒருவேளை உங்கள் வாக்குப் பலிக்கப் போகிறதோ என்னமோ, யார் கண்டது?''

இதயப் படபடப்பு அதிகரித்தது வடிவேலுவுக்கு. ''என்னுடைய கோரிக்கையை நீங்கள் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

''அன்போடு ஒருவர் பேசியதை அதற்குள்ளாக மறந்து விட முடியுமா?''

'தாரா! எதற்கு என்னை இப்படி வதைக்கிறாய் நீ?' என்று மானசீகமாகக் கேட்டுத் தனக்குள்ளாகவே அழுதான் வடிவேலு. 'புரிய வைப்பது போல் பேசியும், புரியாமல் அடித்தும் என்னைச் சித்திரவதை செய்வதை நிறுத்த மாட்டாயா நீ?'

''எனக்குத்தான் எதிர் காலத்தில் இனி என்ன இருக்கிறது? இந்தப் பள்ளி சிறப்பாக நடந்தால் இத்துடன் என் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வதைக் காட்டிலும் உபயோகமாக வேறு என்ன செய்யப் போகிறேன்? கிராமத்திலுள்ள நீங்கள் எல்லோரும் அதற்குச் சம்மதம் அளிப்பீர்களல்லவா?''

பாலைவனத்தில் தண்ணீரைக் கண்டவன் கரங்களால் அதை அள்ளி எடுத்துப் பருக முற்படுகையில் விரல்களுக்கிடையில் நீருக்குப் பதில் மணல் சொரிவதைப் பார்த்துப் பரிதபிக்கும் நிலையில் இருந்தான் வடிவேலு. 'கடவுளே! ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாள் இவள்?'

கத்திரிக்கப்பட்ட எழுத்துக்களை வரிசைக்கிரமமாக ஒட்டி வாசலில் காந்தி பாடசாலை என்பதாகப் பெயர்ப் பலகை தொங்க விடுவதற்காக ஒரு தட்டி தயாரித்திருந்தான் வடிவேலு. 'கா'வென்ற எழுத்தைத் தன் எதிரே தூக்கிப் பிடித்துச் சரிபார்த்தாள் தாரா. ''பதிலையே காணோமே?'' என்றவாறே அடுத்த எழுத்தைக் கத்திரிப்பதில் முனைந்தான்.

''அதை இப்படிக் கொடுங்கள்!'' என்று கேட்டுத் தன் கரத்தை அவன் பக்கமாய் நீட்டினான் வடிவேலு. முக பாவத்தினாலேயே, 'எதற்காக?' என்று வினவிய தாரா கத்திரிக்கோலை அவனுடைய உள்ளங்கையில் வைத்துப் பொத்தினாள்.

மார்கழி மாதத்தில் விடியற்காலை நேரத்தில் காவிரி ஆற்றில் மூழ்கிக் குளிக்கும் போது குளிரில் நடுக்கமெடுத்துத் திணறுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று வடிவேலுவுக்கு. ஆனால் கரங்களின் அந்தச் சந்திப்பு அவளிடத்தில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் உள்ளங்கையை வருடியபடியே தான் அவள் விரல்கள் பின்னுக்கு நகர்ந்து சென்றன. பின்னர் கரம் ஸ்மரணையற்றுப் போனது போலத் துவண்டு விழுந்தது.

'இந்த உலகத்திலேயே அவள் இல்லையா? அல்லது சாமான்யமான மனித உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவளா அவள்?' ஆண் மகன் ஒருவனைத் தற்செயலாகத் தீண்டியதும் தீயை மிதித்து விட்டதுபோல் விலகிச் செல்லும் பெண்களைத்தான் பார்த்திருக்கிறான் வடிவேலு. 'பட்டணத்து நாகரிகத்தில் பழகிய அவளுக்கு இது பரபரப்படைய வேண்டிய நிகழ்ச்சியாகத் தோன்றவில்லையா? ஒரு வேளை குதூகலம் மிக்கக் குழந்தைக் குலத்தினால் சூழப்படவிருந்த அவள் அவர்களைப் பராமரிக்கும் தாய்மை உணர்ச்சி நிறையப் பெற்று நின்று கொண்டிருக்கிறாளோ?'

தன்னைத் தானே பிரமிப்பிலிருந்து விழித்தெழச் செய்து கொண்டு கத்திரிக்கோலின் உதவியினால் பச்சை நிறக் காகிதத்தில் இரண்டு நட்சத்திரங்களை வெட்டி எடுத்தான் வடிவேலு. தட்டியின் இரு முனைகளிலும் அவற்றை வைத்து அழகு பார்த்தான். ''எப்படி இருக்கிறது?''

தலையசைத்துத் தாரா தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள்.

''தலையை ஆட்டினால் போதாது. வாய் திறந்து சொல்லுங்கள். இதன் உட்பொருள் உங்களுக்கு விளங்குகிறதா....?''

''உட்பொருளா?''

''கிராமத்தில் உங்களை இருக்க விடுவோமா என்று கேட்டதுடன் நில்லாமல் 'பதிலைக் காணோமே' என்றும் சந்தேகப் பட்டீர்களே, பதில் இதில் அடங்கிக் கிடப்பது புரிகிறதா?''

''காலையிலும் இப்படித்தான் பிரம்மாண்டமான ஒரு நட்சத்திரத்தைச் சிரமப்பட்டு மூங்கில் குச்சிகளாலும் வர்ணக் காகிதங்களாலும் செய்து, ஏணியிலேறி மரத்தின் உச்சாணிக் கிளையொன்றிலிருந்து தொங்க விட்டீர்கள். அதை ஏதோ ஓர் உள் நோக்கத்தோடுதான் காற்றில் மெல்ல அசைந்தாடுகிற மாதிரிக் கட்டி வைத்திருக்கிறீர்களா?''

''திக்கு திசை புரியாமல் தவிப்பவர்களுக்கு வழிகாட்டுவது ஒரு தாரகை. இந்தப் பள்ளியைத் தொடங்கி வைத்திருப்பதும் தாரா தானே?''

அவள் முகம் சிவப்பதைக் கண்டான் வடிவேலு. சற்றுத் துணிவடைந்தவனாகத் தொடர்ந்து பேசினான். ''ஆனால் அந்தப் பொல்லாத நட்சத்திரம் என்னை மட்டும் குழப்பத்திலிருந்து விடுவிக்காமல் மேலும் மேலும் சிக்கலையே உண்டாக்குகிறது!'' என்றான்.

துணுக்குற்ற தாராவின் கண்களில் கலக்கம் குடிகொண்டது. (தொடரும்)

16 M. M.

பிலிமில் சமீபத்திய சிறந்த படங்களைக் கண்டு மகிழுங்கள்

படிக்காத மேதை, பாக்தாத் திருடன், தெனுலி ராமன், சம்பூர்ண ராமாயணம், ஏழைபடும்பாடு, இல்லறமே நல்லறம், மாய மனிதன், பணம் பந்தியிலே, தாய் உள்ளம், கண் திறந்தது, பாக்யலக்ஷ்மி முதலியன (தமிழில்)

முண்டுடுகு, ஆலு மகளு, காலாந்தகுடு, கந்தர்வ கன்யா, செங்கமலத் திவு முதலியன (தெலுங்கில்)

மதித்துன்னே மரயா, வரதக்ஷிணே, பிரபு லிங்க லீலா, சிவலிங்க சாக்ஷி மங்கள சூத்ரா முதலியன (கன்னடத்தில்)

சந்த்ரகுப்தா, பக்த துருவ, தீர்த்தயாத்ரா, பிருத்விராஜ், சௌதூான், ஆமி பிர்லே, பஹார், மிஸ்டர் சம்பத், பேகுனு, தோ பீகா ஜமீன் முதலியன (ஹிந்தி)

விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும் :

தௌலத் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.

பட்டேல் சேம்பர்ஸ், பிரஞ்ச் பிரிட்ஜ், பம்பாய் - 7

தந்தி : CINMILL — போன் : 70706

பருக்கள் தீராத பிரச்னையாயிருந்தன...



எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்

DZ-929 TM


பவழத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராமணி..
24
துரோகி தாமகேது - தப்பியோடிய அதே- சமயம் மன்னர் மகி பாலரை விடுவித்து ஓடி வருகிறான் கந் தன். ஆனால் அங்கு அவன் கண்ட காட்சி
ஏன் இப்படி எல்லோ ரும் திகைத்து நிற் கிறீர்கள்?
ஆனந்தன் கந்தனுக்குக் கிழவ னின் மரணத்தைப் பற்றி விளக்கி விட்டுத் தாமகேது தப்பிச் சென்ற தையும் சொல்லுகிறான்.
பாழடைந்த இந் திர புரியை நோக் கித்தான் அவன் ஓடிப் போய்க் கொண்டி ருப்பான். அவனைத் தொடர்ந்து நான் போகிறேன்.
உன்னுடன் நானும் வருகிறேன்.
ஆனால் கந்தன் காத்திருக்க வில்லை.
ஜம்பு. தாம- கேது குதிரை- யில் போயிருக்கி றான். அவனுக்கு முன்னால் நாம் அங்கு போய் விட வேண்டும்.
அதோ போகிறான் கிழவனை போட்ட கெட்டவன் தாமகேது. அவன் அறி யாமல் பின் தொடர வேண் டும்.
அது என்ன காலடிச்- சத்தம்? யாருமிருக்காது. என்னை யாரும் பின் தொடர்ந்து வந்திருக்க முடியாது.
கூட்டாளி ஆலபாணி கூடச் செத்தொழிந்து போனான். புதையலில் இனி யாருக்கும் பங்கு கிடையாது.


குறிப்பில் கண்டபடி பாழடைந்த அரண்மனையின் கூடங்களைக் கடந்து கொண்டிருந்த தாமகேது பின் தொடரும் கந்தனைக் கவனிக்கவில்லை...
பொக்கிஷ அறையின் கதவை நெம்பித் திறந்து உள்ளே நுழைந்த தாமகேது....
ஆ! பொன், வைரம் வைடூர்யம், ரத்தினம், மாணிக்கம், நல்முத்துக்கள்......
அத்தனையும் என்னுடையது. ஹா..ஹா...ஹா! இந்தத் தாமகேதுவினுடையது இத்தனையும்
இல்லை.. இது உனக்குச் சொந்தமானதில்லை..
நீ..நீயா..!
பொடிப்பயலே! எத்தனையோ சாகசங்கள் செய்து அடைந்ததை உன்னிடம் விடுவேனா?
ஆம் நானே தான்.
சட்டென்று எழுந்த தாமகேது தன் இடையில் செருகி இருந்த வாணங்களை எடுத்தான். அவனது கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் படைவீரர்களை எச்சரிக்கை செய்து வரவழைக்க அதை உபயோகிப்பதே அவன் நோக்கம். அந்த வாணங்கள் வானத்தில் சீறிப் பறந்து சென்றால் வீரர்கள் பாய்ந்து வருவார்கள் உதவிக்கு. அப்படி அவர்களுக்குள் ஓர் ஏற்பாடு......


வெளிச்சத்துக்காக எரிந்து கொண்டிருந்த அனுப்பில் அந்த வாணங்களைக் கொளுத்தினான் துரோகி.
இன்னும் கொஞ்ச நேரத்தில் பார்! ஹா...ஹா....! ஹா!....
கந்தனுக்குத் தூமகேதுவின் செய்கை புரியாவிட்டாலும், ஏதோ சூழ்ச்சி செய்கிறான் என்று மட்டும் ஊகித்தான். உடனே அவன் மீது பாய்ந்தான். வாணங்கள் குறி தவறித் தூமகேதுவின் பிடியிலிருந்து நழுவின.
பேரொலியுடன் வாணங்கள் உள்ளேயே வெடித்தன. கந்தன் தூக்கியெறியப் பட்டான்.
வெடிகளின் அதிர்ச்சியைத் தாங்க முடியாத பழைய பாழடைந்த அரண்மனை கலகலத்துச் சரிந்தது. சூழ்ச்சியாளனை இந்திர புரியின் இடிபாடு தன் இதயத்துக்குள்ளேயே சமாதி வைத்துக் கொண்டது.
கந்தனைத் தொடர்ந்து ஆனந்தனும் மீனுபாலனும் குதிரைகளில் விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்...
பாழடைந்த அரண்மனையின் உள்ளிருந்து நெருப்பும் புகையும் சூழ்ந்து கொண்டு வருவதைப் பார்த்துக் கந்தனின் தோழர்கள் கலங்கி நின்றனர்.
அருந்த விழுது அவைகள் உள்ளே பாய்ந்தோடின. அதே சமயம் அங்கு வந்த ஆனந்தனும் மற்றவரும்...
அதோ, அதோ! கந்தனின் தோழர்கள். கந்தனுக்கு ஏதோ ஆபத்து. நெருப்பும் புகையும் மூச்சுத் திணற வைக்கின்றனவே.
தொடரும்


உங்கள் கூந்தலின் உண்மை
அழகை வெளிப்படுத்த
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
உபயோகியுங்கள்
உங்களுக்குப் பிடித்தமான
கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும்,
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத்
தவறாமல் தேய்த்து வருவது
கூந்தல் அடர்த்தியாக அழகுடன்
வளர்வதற்கு இன்றியமையாதது!
தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்திறுல் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.
எல்லோரும் அதிசயிக்கும்
வண்ணம் உங்கள் கூந்தலின்
உண்மையழகை வெளிப்படுத்த
கால்கேட் உதவுகிறது.
COLGATE
HAIR OIL
மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
CCHO.G.4.TAM.

வாலு போச்சு

'வாலு போச்சு; கத்தி வந்தது' என்று கொட்டம் அடித்த குரங்கின் கதை உங்களுக்கெல்லாம் தெரியும். உயிர் பிழைக்க வாலை அறுத்துக் கொண்டு ஓடும் பல்லியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஒருவகைப் பல்லிகள் இருக்கின்றன. இவைகளுக்கு இயற்கை ஓர் அபூர்வமான சக்தியைக் கொடுத்திருக்கிறது. விரோதிகளால் அபாயம் நேரும் போல் இருந்தால் உடனே இந்த வகைப் பல்லிகள் தங்கள் வாலைக் கழற்றி உதறிவிட்டு ஓடி விடுகின்றன. இப்படித் தன்



உடலின் ஓர் அவயவமான வாலைக் கழற்றி உதறுவதற்கு அதன் தசைநார்கள் உதவுகின்றன. அது மட்டுமல்ல. இந்த வால் பல வண்ணமுடையது. உடலிலிருந்து விடுபட்ட வால் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாகத் துள்ளிக் குதித்து நெளிந்து துடிக்கும், புழுவைப் போல. பல்லியின் விரோதி இந்தத் துள்ளும் வாலைப் பல்லி என்று எண்ணி விந்தையோடு பரிசோதித்துக் கொண்டிருக்கும்போதே பல்லி பத்திரமான இடத்துக்குத் தப்பிச் சென்று விடும். கொஞ்ச நாட்களில் அதற்குப் புதிய வாலும் வளர்ந்து விடும். எப்படி இந்த வால் விஷயம் ?

கிழவனும் வழிப்போக்கனும்

நீண்டதொரு சாலை. அந்தச் சாலையிலே ஒரு வழிப்போக்கன் நடந்து வந்து கொண்டிருந்தான். ஊரின் எல்லைக்கு வந்த போது, ஒரு மரத்தடியில் ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டு கருமமே கண்ணாகத் தன் தொழிலைச் செய்து கொண்டிருந்தான். இந்த வழிப்போக்கன் அவனைப் பார்த்து, "நீருக்குப் பகையான நில மரத்தின் கீழ் இருந்து முள்ளுக்கு வேலி கட்டும் கிழவா, எப்போதுமே நீ இதே மரத்தடியில்தான் உட்கார்ந்திருப்பது வழக்கமா?" என்று கேட்டான்.

"இந்த மரத்தடியிலேயேதான் எத்தனையோ வருஷங்களாக இப்படி உட்கார்ந்து தொழில் நடத்திக் கிட்டிருக்கேன். ஏன், என்ன விஷயம்?" என்று கேட்டான் கிழவன்.

வழிப் போக்கனிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டது. பிறகு, "ஒண்ணுமில்லே, இந்த வழியாக இரண்டு காலால் மூன்றுபேர் நடந்துபோனதைப் பார்த்தாயா?" என்று கேட்டான்.

கிழவன் ஒரு நிமிஷம் யோசித்தான். அவன் கொஞ்சம் படித்தவன். ஆகவே வழிப்போக்கன் கேட்ட கேள்வியைப் புரிந்து கொண்ட அவன், "ஓ, அதுவா? அவன் செத்து மூணு நாளாச்சு, அவனைக் கொன்னவன் செத்து மூணு மாசமாச்சு, அவனை எரித்தவன் செத்தோமூணு வருஷமாச்சே!" என்றான் மடமடவென்று. அதைக் கேட்ட அந்த வழிப் போக்கன் 'ஹோ' என்றலறியபடியே தலையில் கை வைத்து உட்கார்ந்து ஒப்பாரி வைக்கலானான்.

இந்தக் கேள்வியும் பதில்களும் என்னவென்று உங்களுக்குப் புரியவில்லையல்லவா?

சாலை ஓரத்து மர நிழலில் உட்கார்ந்திருந்த கிழவன் செய்து கொண்டிருந்த தொழில் செருப்புத் தைப்பது. நீருக்குப் பகையான மரம், தேத்தாங்கொட்டை மரம். முள்ளுக்கு வேலி—செருப்பு. இரண்டு காலால் மூன்று பேர் நடப்பதாவது என்று குழம்பினாயல்லவா? ஒரு பெண், அவள் இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தை. அவளோ நிறை கர்ப்பிணி. ஆக இரண்டு காலால் நடக்கும் அந்தப் பெண்ணின் இடுப்பில் ஒரு ஜீவன், வயிற்றில் ஒரு ஜீவன். ஆக மூன்று பேர்.

வழிப்போக்கனின் மனைவியான அப் பெண் மூன்று நாட்களுக்கு முன்பு அந்தப் பக்கமாக வரும் போது அருகிலிருந்த ஒரு குட்டையிலுள்ள தண்ணீரைக் குடித்தாள். குழந்தைக்கும் கொடுத்தாள். உடனே சுருண்டு விழுந்து இறந்தாள். ஏன் தெரியுமா? அந்தக் குட்டையில் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு நல்ல பாம்பு விழுந்து இறந்து விட்டதால் அந்தத் தண்ணீரில் விஷம் கலந்திருந்தது. இறந்த அவளை அந்த ஊரில் இருந்தோர் மூன்று வருஷங்களாகப் பட்டுக் கிடந்த ஒரு மரத்தைக் கொண்டு எரித்தனர். கொன்றவன் இறந்து (பாம்பு) மூன்று மாதமானதும் அவளை எரித்தவன் (பட்ட மரம்) இறந்து மூன்று வருடமானதும் எப்படி என்று புரிந்ததல்லவா?



சிறுவர் விருந்து




விளையாட்டுப் பிள்ளை

ஓயாத விளையாட்டுப் பிள்ளை — சுரேஷ்
ஒருகணம் அமைதியாய் இருப்பதில்லை
அப்பாவின் மேஜைமேல் ஏறி — அங்கே
அழகான புத்தக அட்டையைக் கிழிப்பான்
சாதுவாய் விளையாடும் குழந்தை — அதன்
காதைத் திருகியே கத்தியழ வைப்பான்
விளக்கைக் கையில் எடுத்தால் — அதை
வெடுக்கென்று வாங்கியே தலையில் வைப்பான்
பக்கத்து வீட்டில் சிறுவன் — கையில்
பட்சணம் வைத்திடில் தட்டிப் பறிப்பான்
ஓடியே ஒளிந்திடும் சிறுமி — உடனே
தேடிப் பிடித்தவள் சட்டையைக் கிழிப்பான்
வாசலில் சைக்கிளை வைத்தால் — அதன்
வால்டியூப்பை நீக்கியே காற்றை எடுப்பான்
விளையாட வா வென்றழைத்தால் – நம்பி
வந்திடும் குழந்தையின் தலையில் அடிப்பான்
தலைக்காகப் பூவாங்கி வைத்தால் — ஸ்வாமி
படத்திற்குச் சூட்டித்தானே சிரித்திடுவான்.

—குழந்தை ராமமூர்த்தி




மந்திர வட்டம்



அருகிலுள்ள படத்தின் நடு மையத்தில் உள்ள வட்டத்தில் மட்டும் 10 குறிக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பதினெட்டு வட்டங்களிலும் ஒன்று முதல் 19 வரையுள்ள எண்களில் 10-ஐத் தவிர மற்றவற்றை எப்படி அமைத்தால் ஒரு நேர் கோட்டில் உள்ள மூன்று வட்டங்களின் எண்ணிக்கை முப்பதாக இருக்கும்? ரொம்ப சுலபம். விடையைப் பார்க்காமல் போட்டுப் பாருங்கள்.

விடை: ஏதாவது ஒரு வட்டத்தில் ஆரம்பித்து ஒன்று முதல் ஒன்பது வரை வரிசையாக எழுது. பிறகு ஒன்பதை அடுத்துள்ள வட்டத்தில் பத்தொன்பதிலிருந்து இறங்கு வரிசைப்படி எழுதிக் கொண்டு போய்ப் பதினொன்றில் முடி.




காரோட்டத் தெரியுமா ?


மேலேயுள்ள காரேஜ்களில் B, Dயில் இருப்பவர்களுக்குத் திடீரென்று வெளியூர் போகும்படி நேர்ந்துவிட்டது. அவர்கள் காரை ஷெட்டிலேயே விட்டு விட்டுப் போய் விட்டார்கள். அதனால் C, E ஷெட்டில் இருக்கும் கார்களைச் சுலபமாக வெளியே எடுக்க வசதிப்படவில்லை. B,Dயிலுள்ள கார்களை முறையே E, Cக்கு மாற்றிக் கொண்டு வந்து நிறுத்தி விட்டால், 1, 3, 5-ல் உள்ளவர்கள் சுலபமாகத் தங்கள் கார்களை எடுத்துக் கொண்டு போகலாம். எந்தக் காரும் வீதிக்குப் போகக் கூடாது. ஒரு ஷெட்டில் ஒரு கார்தான் ஒரு சமயத்தில் இருக்கலாம். Bயில் உள்ள காரை Eயிலும் Dயில் உள்ள காரை Cயிலும் கொண்டு வர வேண்டும். காலியான 2-ம் நெம்பர் காரேஜை கார்களைக் கொண்டு வந்து திருப்புவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஐந்து அட்டைகளைக் கத்தரித்துக் கொண்டு தரையில் பெரிதாக இங்குள்ள காரேஜ் படத்தை வரைந்து கொண்டு கார்களை நகர்த்தி விளையாடிப் பாருங்கள்.

விடை: முதலில் 2-ம் காரேஜுக்கு Bயை நகர்த்துங்கள். அதைத் தொடர்ந்து காலியாகும் 3ல் E–6ல் D. 5ல் B–2ல் A. 1ல் C–4ல் B. 5ல் D–6ல் E. 3ல் A–2ல் D. 5ல் B–4ல் C. 1ல் D–2ல் A. 3ல் E–6ல் B. 5ல் C–4ல் D. 1ல் A.



மாடல் 0724 : 6-வால்வ், ஆல்-வேவ், 8 பாண்ட்
பாண்ட் ஸ்ப்ரெட். ஏஸி அல்லது ஏஸி/டிஸி
(இரு மாடல்கள்)
மற்றும் மாடல் 0737: (டிரை பாட்டரி) 7-வால்வ்
murphy radio
Delights the home!
மாடல் 0374 :
6 வால்வ் 9 வகை செயல் திறனுடன்
ஆல்-வேவ், 4 பாண்ட்
பியானோ-கீ ஸ்விட்ச், ஏஸி அல்லது
ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
மர்பி ரேடியோ




மாடல் 0452
6 வால்வ், 9 வகை
செயல் திறனுடன்
ஆல்-வேவ், 3 பாண்ட்
பியானோ-கீ ஸ்விட்ச், ஏஸி



மாடல் 0504
4-வால்வ், ஆல்-வேவ்
2 பாண்ட், ஏஸி/டிஸி



மாடல் 0298
ஆல்-வேவ், 5-வால்வ்
3-பாண்ட், ஏஸி/டிஸி
மற்றும் மாடல் 0299
(டிரை பாட்டரி)
4-வால்வ்



மாடல் 0752
5-வால்வ், ஆல்-வேவ்
3-பாண்ட், ஏஸி அல்லது
ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
மற்றும் மாடல் 0751
5-வால்வ்

MR. G. 165

இல்லத்திற்கு இன்பமளிக்கிறது!

ஆந்திர மஹிள சபையின் வெள்ளி விழா

வசுமதி ராமசாமி

"ரங்கபுர விஹாரா...ஸ்ரீரங்கபுர விஹாரா..."

இந்தக் கானம் கணீரென்று காதில் ஒலித்தது. ஸ்ரீமதி எம். எஸ்ஸும், ஸ்ரீமதி ராதாவும், துதிகீதம் இசைத்துக் கொண்டிருந்தனர். அழகான விசாலமான பந்தல். பந்தலில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகக் கூட்டம் நெரிந்தது. சுற்றிலும் கண்காட்சிச் சாலை, ஒளி வெள்ளத்தை உமிழும் மின் விளக்குகள். மேடையில் ஆற்றல் மிகுந்த மேதைகள்.

உட்கார இடமின்றிச் சுற்றிச் சுற்றி வந்தேன். ஆந்திர மஹிளசபாவின் வெள்ளி விழா மே மாதம் 27-ந் தேதியிலிருந்து மூன்று நாட்கள் தொடர்ந்து மகோன்னதமாக நடைபெற்றது.

மஹிளசபாவின் இருபத்தைந்து ஆண்டு வளர்ச்சியை எண்ணிப் பார்க்கும் போது சிறந்த சமூக நலப் பணிக்குஅது எடுத்துக் காட்டு என்றுதான் தோன்றியது.

1937-ம் ஆண்டு துவாரகா காலனியில் ஒரு தோட்டத்தில் பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளுமாக ஒரு விளையாட்டு அரங்கம் ஆரம்பித்தார்கள். விளையாட்டாக ஆரம்பித்த அந்த அரங்கம் அவர்களிடையே, "சின்னப் பெண்கள் பிருந்தாவனம்" என்ற பெயரில் உருப் பெற்றது. வளரும் குழந்தைகள் ஆரம்பித்ததினாலோ என்னவோ அந்தச்சங்கம் இருபத்தைந்து வயது நிறைந்த பெண்போல் இன்று வளர்ந்து நம்முன் நிற்கிறது. செடி மரமாக வளர்ந்துவிட்டால் அதற்கு அதிக இடம் வேண்டுமல்லவா? "சின்னப் பெண்கள் பிருந்தாவனம்" லஸ் சர்ச் சாலையில் தனக்கு ஓர் இடம் தேடிக் கொண்டது.

மஹிள சமாஜத்தின் ஒரு பாக்கியம் அதன் வளர்ச்சிக்கும், தேவைக்கும் ஏற்றவாறு நன்கொடைகள் வழங்க அநேக அன்பர்கள் அவ்வப்போது முன்வந்தார்கள். அப்படி வந்த அன்பர்களில் மிர்ஸாபூர் ராணி அவர்கள், பொப்பிலி ராணி அவர்கள், பித்தாபுரம் மகாராஜா அவர்கள் முக்கியமானவர்கள். மஹிளா வித்தியாலயம், தொழிற்பயிற்சிக் கழகம், சிசு விஹார், வனிதா பால விஹார், எலும்புச் சிகிச்சை நிலையம் ஆகிய பிரிவுகள் இதனுடைய அரிய பணிமனைகளாகும். ஏறக்குறைய ஐந்நூறு பெண்கள் மஹிள சபாவில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் படித்துக் காசி சர்வகலா சாலை, ஆந்திர சர்வகலாசாலை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு இலவச வைத்திய உதவி, இருப்பிடம், கல்வி வசதி எல்லாம் அளித்து வருகிறது மஹிள சபா. தவிர, குடிசைத் தொழில், சிறு கைத் தொழில் பயிற்சி ஸ்தாபனம் ஒன்று இதனுடைய கிளையாக சாந்தோமில் நடக்கிறது. அடையாற்றில் ஆந்திர மஹிளசபா மருத்துவ விடுதி ஒன்றும், இலவச வைத்திய சாலையொன்றும் 1950-வது ஆண்டிலிருந்து நல்ல முறையில் பணி புரிந்து வருகின்றன. மருத்துவத் தாதிகள் (நர்ஸ்) பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து மஹிள சபா அந்தத் தொண்டை ஏற்று நிறைவேற்றி வருகிறது. அதற்குத் தேவையான கட்டடமும், சென்ற ஆண்டு நிறுவப்பட்டது. இதனுடைய கிளை ஒன்று ஹைதராபாத்தில் இயங்கி வருகிறது. அதில் கைத்தொழில் பகுதி ஒன்று விரிவாக நடத்தப்படுகிறது. தென்னிந்திய ராஜ்யங்களிலுள்ள அநேகம் பெண்கள் இதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக் அவர்கள் தான் இம் மாபெரும் சேவாலயத்தின் ஸ்தாபகர்.

ஆந்திர மஹிள சபா இன்று அடைந்திருக்கும் உன்னத நிலைக்கு அவரது அயராத உழைப்பைத்தான் காரணமாகக் கூறவேண்டும். அவரிடம் பயிற்சி பெறும் சேவிகைளின் தொண்டையும் மறப்பதற்கில்லை.

ஃ ஃ ஃ

சென்ற 27-ந் தேதி மாலை மேற்படி சபையின் வெள்ளிவிழாவை ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய பேச்சு ஒவ்வொரு வார்த்தையும் பெரிய தத்துவத்துடன் கேட்பவர்களின் இதயத்தைத் தொடுமாறு அமைந்தது. மஹிள சபாவின் பல்வேறு தொண்டுகளைப் பாராட்டினார். பெண்கள் எத்தனையோ இடையூறுகளுக் கிடையில் செயலாற்றவேண்டியிருக்கிறது. ஆனாலும் தங்களுக்கு உள்ள இயல்பான உணர்வை இழக்காமல் இருப்பார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்தார்.

சென்னை கவர்னர் விஷ்ணுராம் மேதி அவர்கள் இந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கினார். வெள்ளி விழாவை யொட்டி ஏற்படுத்திய கண்காட்சியை ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்தியாயா அவர்கள் திறந்து வைத்தார். முதன்மந்திரி திரு காமராஜ் அவர்கள் ஸ்தாபனத்துக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

இவ்விழாவுக்கு வந்திருந்த பிரபல சமூக சேவிகளுக்கு வெள்ளி விழா நினைவுச் சின்னங்களை ஜனாதிபதி அவர்கள் வழங்கினார்கள். வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை யொட்டி ஆந்திர மஹிள சபைக்கு 1,80,000 ரூபாய் நன்கொடை கிடைத்தது. 'வெள்ளி விழா மண்டபம்' ராஷ்டிரபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆடம்பரங்கள் எதுவுமின்றிப் பூஜை, பாராயணத்துடன் ஒரு பிரார்த்தனை போல் அழகாக நடந்தது இவ்வைபவம்.

மற்ற இரண்டு நாட்களில் பெண்கள் இலக்கிய அரங்கம், கலை நிகழ்ச்சிகள் இவற்றுடன் வெள்ளிவிழா இனிது நிறைந்தது.

உ4. வாழ்க்கைச் சித்திரம்!



"இந்த உலகத்தில் உள்ள மனிதர்களிலே முகஸ்துதிக்கு மயங்காதவர்கள் யார்?" என்று கேட்டுக் கொண்டே பேச்சை ஆரம்பித்தார் திவான்பகதூர் செந்தில்நாயகம். வில்வநாதன் உடனே நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான்.

"இந்த உலகத்து மனிதர்கள் என்ன! கடவுளே முகஸ்துதியில் மயங்குகிறவர் தான்! அதனால்தானே கோயிலில் நூற்று எட்டு, ஆயிரத்து எட்டு, இலட்சத்து எட்டு என்று அர்ச்சனைகள் செய்து வருகிறோம்!"

இப்படி மேலும் வார்த்தைகளைத் தொடர்ந்தார் திவான்பகதூர்.

திடீரென்று இவ்வாறு முகஸ்துதியைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறாரே வக்கீல் என்று வில்வநாதன் வியப்போடு பார்த்தான். அப்போது திவான்பகதூர் சொன்னார்:

"தம்பி! இதைப் பற்றி ஒரு கிறள் இருக்கிறது. கேட்கிறீர்களா....?"

"கட்டாயம் கேட்கிறேன். சொல்லுங்கள். நீங்கள் இயற்றிய

நந்தவனம்

சோமு



கிறள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்!'' என்றான் வில்வநாதன்.

''பலே! என்னையே மடக்கிவிட்டீர்களே! சபாஷ்!''

''முகஸ்துதியாகச் சொல்லவில்லை. உண்மையிலேயே உங்களுடைய கிறள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்!'' என்றான் வில்வநாதன்.

''தம்பி! முகஸ்துதியைப் பற்றிய கிறளைச் சொல்லுவதற்கு முன்னால், 'குல்லாப் போடுதல்' என்ற வார்த்தையைக் கேட்டிருக்கிறீர்களா நீங்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்!''

''கேட்டிருக்கிறேன். காக்காய் பிடித்தல், குல்லாப் போடுதல் என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறேன். முகஸ்துதி செய்வதைப் பற்றி இப்படியெல்லாம் காக்காய் என்றும் குல்லாய் என்றும் சொல்லுகிறார்கள்'' என்றான் வில்வநாதன்.

''அப்படியானால் சரி! குல்லாப் போடுதல் என்றால் ஆசாமியைச் சரிக்கட்டி, நம்முடைய வசம் ஆக்கிக்கொள்ளுதல் என்று அர்த்தம்! இதைப் பற்றித்தான் கிறள்! குல்லாவுக்குள் அகப்படாத தலைகளே, அதில் மயங்காத மனிதர்களே இல்லை என்பது இந்தக் கிறளின் பொருள். கேளுங்கள், பாட்டை:

''குல்லாக்குள் குல்லாக்குள்
குல்லாக்குள் குல்லாக்குள்
குல்லாக்குள் எல்லாம்
தலை!''

திவான்பகதூர் இப்படி ஒரு போடு போட்டு நிறுத்தியதும், வில்வநாதன் அப்படியே சிரித்து விட்டான்.

''நான் சொன்னது சரியாகி விட்டது! இந்தக் கிறள் பிரமாதமாக இருக்கிறது! மொத்தம் ஐந்து குல்லாய் வருகிறது பாட்டிலே! உங்கள் கிறள் ஒரு பஞ்சவர்ண ஓவியம்! ஐந்து குல்லாக்கள் கொண்ட சித்திரம் அது!''

''ஆமாம். ஐம்புலன்களும் குல்லாக்குள் அடக்கம் என்பது அதன் உட்பொருள் தம்பி!'' என்றார் திவான் பகதூர்.

வில்வநாதன் சிரித்துக் கொண்டே மௌனமாக இருந்தான். கிறளின் வேடிக்கையை அனுபவித்துக் கொண்டே மனத்துக்குள் யோசித்தான், திவான் பகதூர் எதற்காக இப்படி ஒரு கிறளை இங்கே உதிர்க்க வேண்டும் என்று! அவரிடமே அதைக் கேட்கலானான்.

''அது சரி, வக்கீலையா! கிறள் ஜோராய் இருக்கிறது! ஆனால் அதற்கும் இப்பொழுது நீங்கள் என்னை இங்கே தனியாக அழைத்து வந்து இந்தச் சத்திரத்திலே உட்கார்ந்து இரகசியம் பேச ஆரம்பிப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

''அப்படிக் கேளுங்கள், தம்பி! அதைத்தான் சொல்ல வந்தேன். முகஸ்துதியில் மயங்கி மோசம் போய் விடாதீர்கள் என்று—''

இப்படி ஒரு வாக்கியத்தைச் செருகினார் திவான்பகதூர். வில்வநாதனுக்கு முகமெல்லாம் கருங்கியது. இதைக் கவனித்த வக்கீல் செந்தில் நாயகம் மேலும் சொல்லலானார்:

''தம்பி! நீங்கள் இளம் பிள்ளை. உலக அனுபவம் இல்லாதவர்கள். அதனால் உங்களுக்குப் புத்திமதி சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. நீங்கள் தப்பாக எண்ணிக் கொள்ளாவிட்டால் மேலே பேசுகிறேன். இல்லையென்றால் வந்த காரியத்தை மட்டும் முடித்துக் கொண்டு இங்கிருந்து சென்று விடுகிறேன்.''

திவான்பகதூர் முகத்தில் கொஞ்சம் கடுமையை வரவழைத்துக் கொண்டு இவ்வாறு சொன்னார். இதைக் கேட்டதும் வில்வநாதனுக்குத் தாங்க முடியாத துயரமும் வேதனையும் ஏற்பட்டன. அவனுடைய முகத்தில் அந்தத் துயரமும் வேதனையும் கோடு கோடாக நெளிந்தன. வக்கீல் தொடர்ந்து பேசினார்:

''தம்பி! நான் இங்கே வந்ததன் முக்கிய நோக்கம் இந்தப் பத்திரங்களில் கையெழுத்து வாங்கிச் செல்ல வேண்டும் என்பதே! இத்தனை அவசரமாகக் கையெழுத்து வாங்க வேண்டிய அவசியம் என்ன என்று நீங்கள் கேட்கலாம். ஜமீந்தார் அவர்களுடைய மனம் மாறுவதற்கு முன்னால், உங்களுக்கு அவர் செய்ய நினைத்த நன்மையைச் செய்து முடித்துவிட வேண்டும் என்பதே எனது ஆசை! அவருடைய மனம் மாறிவிடக் கூடிய விதத்தில் ஏதோ சில நிகழ்ச்சிகள் இங்கே நடந்து வருகின்றன என்று கேள்விப்பட்டேன். வியப்பும் வேதனையும் உண்டாயின. அந்த நிகழ்ச்சிகள் என்ன, சம்பந்தப்பட்ட மனிதர்கள் யார் என்பதை நேரிலே பார்த்துவிட வேண்டும் என்றும் ஒரு எண்ணம்! இதையெல்லாம் உத்தேசம் பண்ணித்தான் நானே இப்பொழுது தன்னந் தனியாக இந்த நந்தவனத்துக்கு வந்தேன். வந்த பிறகு என்னுடைய துயரம் பல மடங்கு ஆகிவிட்டது. முதலில் இந்தப் பத்திரங்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டு என்னிடம் கொடுங்கள். சென்னையில் உங்கள் தகப்பனாருடைய பெயரால் நடக்க வேண்டிய கலைக் கல்லூரிக்கு உரிய நன்கொடைப் பத்தி

ரங்கள் இவை. இந்த நன்கொடை முதலில் உறுதியாகட்டும். பிறகு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொள்வோம். இதில் கையெழுத்துப் போடுங்கள் முதலில்!''

இவ்வாறு சொல்லி அவசரம் அவசரமாக வில்வநாதனிடம் பத்திரத்திலே கையெழுத்து வாங்கினார் திவான்பகதூர்.

''தம்பி! இந்தக் கையெழுத்தோடு நேரே சிங்கம்புத்தூர் சென்று, இந்தப் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய வேலைகளை உடனடியாகக் கவனிக்கப் போகிறேன். அதற்கு



முன்பு ஒரே ஒரு எச்சரிக்கை மட்டும் உங்களுக்குச் சொல்வது என் கடமை. நீங்கள் என்னிடம் கோபம் கொண்டாலும் பரவாயில்லை. அந்த எச்சரிக்கையை உங்களுக்குச் சொல்லத் தான் போகிறேன்!'' என்றார் திவான்பகதூர்.

சத்திரத்திலும் அக்கம் பக்கத்திலும் வேறு யாருமில்லை. சுந்தரேசப்பட்டர், கம்பர், செண்பக சுந்தரி ஆகிய மூவரும் திவான்பகதூர் அங்கே வந்து மிகுந்த அவசரத்தோடு வில்வ நாதனைச் சத்திரத்துக்கு அழைத்துப் போனதைக் கண்டதும் மிகவும் முக்கியமான காரியம் என்பதைத் தெரிந்து கொண்டு, அங்கிருந்து சென்று விட்டார்கள். அப்படிப்பட்ட ஏகாந்தமான ஒரு சூழ்நிலையிலே வக்கீலும் தானுமாக இருந்து பேச முனைந்தபோது, இப்படி ஓர் எச்சரிக்கை மீண்டும் மீண்டும் எழுந்து ஒலிக்க ஆரம்பித்ததும், வில்வநாதனுக்கு மூளை குழம்பியது. அவன் சொன்னான்:

''வக்கீலையா! நீங்கள் ஏதோ வேடிக்கையாக ஒரு கிறளைச் சொல்ல ஆரம்பித்து இப்படி ஒரு சிக்கலான காரியத்துக்கு—''



வக்கீல் இடைமறித்தார்: ''அப்படி யெல்லாம் சிக்கலிலே நீங்கள் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்ற கவலையினால்தான் இத்தனையும் சொல்ல ஆரம்பித்தேன். ஏனென்றால் உங்களுடைய தந்தை சிவகாமி நாதனுக்கும் எனக்கும் இருந்த தொடர்பு அப்படி!'' என்றார் திவான்பகதூர்!

''என்ன, என்ன! என்னுடைய தந்தையை உங்களுக்குத் தெரியுமா? என் தந்தைக்கும் உங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததா?''

''வில்வநாதா! அதை யெல்லாம் இப்பொழுது நினைவுபடுத்திக் கொள்வதே தவறு! அவருடைய வாழ்வில், உன் அருமைத் தந்தையின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு பெரிய துயர நிகழ்ச்சியினால், என்னென்ன மாறுதல்கள் விளைந்தன என்பதை நேரிலே அறிந்திருக்கிறேன் நான்! பெண்மைக் குலத்திடமே அவருக்கு ஒரு கசப்பு உண்டாகும்படி அவருடைய வாழ்வு ஒரு சோகக் கதையாக முடிந்தது. அப்படிப்பட்ட துயரம் உன் வாழ்விலும் நேர்ந்துவிடக் கூடாதே என்றுதான் இத்தனை தூரம் துயரப்படுகிறேன் நான்! அதனால்தான் உனக்கு இவ்விதம் எச்சரிக்கை செய்வதற்கும் துணிந்தேன். நீ வரைகிற சித்திரம் நன்றாயிருக்கிறது என்று ஒருவர் சொல்லி விட்டால், அப்படியே அந்த முகஸ்துதியில் நீ மயங்கிப் போய் விடக் கூடாது என்பதே எனது கவலை. உன்னையும் உனது திறமைகளையும் ஒருவர் பாராட்டும் போது உனக்கு மகிழ்ச்சி உண்டாவது இயல்பு. ஆனால் அந்த மகிழ்ச்சியிலே மதிமயங்கி அறிவை இழந்து விடக் கூடாது. அதிலும், அதிலும்—''




திவான்பகதூர் வார்த்தைகளை முடிக்காமல் தயங்கி நின்றார். வில்வநாதனுக்கு உடம்பெல்லாம் படபடத்தது.

''ஐயா, மேலே சொல்லுங்கள். நீங்கள் பேசுகிற வார்த்தைகளில் உங்களுடைய அளவற்ற அன்பு நன்றாகப் புரிகிறது. ஆனாலும் நீங்கள் எதற்காக இத்தனையும் சொல்ல வேண்டும் என்பதைப் பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறேன்!'' என்றான் வில்வநாதன். வக்கீல் சொன்னார்:

''தம்பி! அந்தக் காலத்தில் உன் தகப்பனார் அடிக்கடி சொல்லுவார்: ஒரு சித்திரக்காரன் தான் எழுதிய சித்திரங்களை ஒரு பெண்மணி பாராட்டி விட்டால், அப்படியே அறிவை இழந்துவிடுகிறான். பிறகு பல விபரீதங்



திரு ராமச்சந்திரய்யரின் புதல்வி சௌ. பத்மாவதிக்கும் தென் ரயில்வே அஸிஸ் டெண்ட் போர்மேன் திரு வேங்கடாசலத் துக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.



டாக்டர் ஆர். ராஜகோபாலன் அவர்களுக் கும் சௌபாக்யவதி ருக்மிணி தேவிக்கும் சிங்கப்பூரில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

களுக்கு உள்ளாகி விடுகிறான். அதிலும் காதலைப் பற்றிய சித்திரங்களாக அவை இருந்தாலோ, தொலைந்தது காரியம்..''

வில்வநாதனுக்கு இப்பொழுது வக்கீ லின் போக்கிலே பொதிந்து கிடந்த நுட் பம் புலனாக ஆரம்பித்தது. எதற்காக இந்த எச்சரிக்கையை இத்தனை பெரிய முன்னுரைகளோடு சொல்ல வருகிறார் என்பதை உணரத் தொடங்கினான். திவான்பகதூர் செந்தில்நாயகம் அப் போது சொல்லுவார்:


''தம்பி, ஒரு கலைஞனுடைய வாழ் வில் அவனுடைய விசித்திரமான மன இயல்புகளுக்குத் தக்கபடி ஒரு நாயகி அமைவது அபூர்வம் என்பது உன்னு டைய தந்தையின் கருத்து. முகஸ்துதி செய்யும் பெண்களைச் சந்திக்கும் போது ஒரு இளங்கலைஞன் தனது அறிவை இழந்து அதனால் பல விபரீதமான தொல்லைகளுக்கு உள்ளாகிறான் என்று அவர் அடிக்கடி சொல்லுவார். இதற் கெல்லாம் இடம் கொடாமல் வாழ்வது ஒரு பெரிய தவம் என்பார். அந்தத் தவத்தை நீ சரியாகச் செய்ய வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. என் வரையில் எனக்குக் காதல் என்ற உணர்ச்சியிலே நம்பிக்கை கிடையாது. மெய்யான காதல் என்பது புஸ்தகத்திலேதான் இருக்கிறது. படிப்ப தற்கு நன்றாக இருக்கும். கதைகளிலே சம்பவங்களாகப் பார்த்து ரசிப்பதற்குச் சுவையாக இருக்கும் அது! ஆனால் வாழ் வுக்கு ஒத்து வராத ஒரு நிகழ்ச்சி அது! காதல் என்று ஏற்பட்டு அதனால் கலி யாணம் செய்து கொண்டு, பெற்றோர் களையும், உற்றார் உறவினர்களையும் விரோதம் செய்து கொண்ட பல தம்பதி களை எனக்குத் தெரியும். அவர்களில் பலர் என்னுடைய கட்சிக்காரர்களாக வந்து, அவர்களுக்காக அவர்களுடைய பெற் றோர்களை எதிர்த்து, நான் நீதி மன்றங் களிலே வாதாடியிருக்கிறேன். இத்தனை அனுபவத்துக்கும் பிறகு சொல்லு கிறேன்: காதலித்த இளைஞர்கள் பிறகு




சென்னை பிலிப்ஸ் கம்பெனி திரு என்.ஆர். அய்யர் அவர்களின் புதல்வி சௌ. விமலா வுக்கும் திரு அனந்தராமுக்கும் அடையாற்றில் கல்யாணம் நடைபெற்றது.



மணக்கால் மிராசுதார் திரு நாராயண சாமி அய்யர் அவர்களின் பௌத்ரி சௌ. ராஜேசுவரி திரு ஆர். ராமச்சந்திரனைத் திருமணம் புரிந்து கொண்டார்.




'ஹிந்து' துணை ஆசிரியர் திரு பி. ஏ. சேஷன் அவர்களின் புதல்வர் திரு அனந்தநாராயணனுக்கும் சௌ. பானுமதிக்கும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.




டில்லி மத்திய சர்க்கார் நிதி இலாகாவைச் சேர்ந்த திரு ஆர். கிருஷ்ணமூர்த்திக்கும் திரு ஆர். வெங்கடேசனின் புதல்வி சௌ. லட்சுமிக்கும் திருமணம் நடைபெற்றது.


விவாகரத்துச் செய்தது எனக்குத் தெரியும். ஈருடலும் ஒருயிருமாக என்னிடம் வந்து வழக்குக் கொடுத்தவர்கள், பிறகு என்னிடமே வந்து விவாகரத்துக்கு ஏற்பாடு செய்து ஈருடலும் ஈருயிருமாகப் பிரிந்து போயிருக்கிறார்கள்! இது இப்படியிருக்க, முன்பின் சந்தித்தறியாத இரண்டு பிள்ளைகள் பெற்றோர்களின் மனப்படி கலியாணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்ந்து வருவதையும் பார்த்திருக்கிறேன். கலியாணம் செய்து கொண்ட பிறகு, ஒருவரை யொருவர் முழுமனத்தோடு காதலித்த தம்பதிகள் பலரை எனக்குத் தெரியும். அவர்களுடைய இல்லறக் காதலை நான் அறிவேன். ஆகையால் காதலுக்குப் பின் கலியாணம் செய்து கொள்வதைவிட, கலியாணத்துக்குப் பின் காதல் செய்யும் கணவனும் மனைவியுமே லட்சியத் தம்பதிகள் என்பது என்னுடைய உறுதியான கொள்கை. இப்படி நான் சொல்வதை வேறு யாரிடமும் யோசனை கேட்காமல், நீயாகவே உனக்குள் நன்றாக அலசிப் பார்த்துக் கொள்! ஜமீந்தாருடைய மனத்தின் ஒரு கோடி மூலையிலே உன்னை அவருடைய மருமகனாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று ஒரு ஆசை இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. உன்னுடைய மனமோ வேறு பாதையிலே செல்கிறது. குமுதவல்லியைப் பற்றி எனக்கும் உனது தகப்பனாருக்கும் மட்டுமே தெரிந்துள்ள ஒரு செய்தி உண்டு. அது ஒரு பெரிய வாழ்க்கை இரகசியம். அதை உன்னிடம் சொல்லவேண்டிய தருணம் வரும்போது சொல்லுகிறேன். உனது எதிர்கால வாழ்வையும், உன் வாழ்க்கைத் துணைவியையும் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு முழுதும் உன்னுடையதுதான். அதில் தலையிட வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை. எச்சரிக்கை மட்டும் செய்து விட்டேன். உன்னுடைய தகப்பனாரின் நெருங்கிய நண்பன் என்ற முறையில் எனது கடமை அது. நன்றாக யோசித்து நீ ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஜமீந்தாருடைய கோபத்துக்கு ஆளாகி விட்டாயானால், பிறகு அருவியிலே எதிர் நீச்சல் நீந்துகிறது போலத்



'மெயில்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் திரு வி.பி.வி. ராஜன் அவர்களின் புதல்வி சௌ. ராதாமணிக்கும் திரு நாராயணனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.



சீர்காழி திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் புதல்வர் திரு ராமச்சந்திரனுக்கும் சௌபாக்யவதி சுப்புலக்ஷ்மிக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



மிக நல்ல விசிறிகள் மிக நல்ல பொறி இயல்
நிபுணத்துவ மூலம் உருவாக்கப்படுகின்றன.
அதுவே
ஓரியண்டின்
திறமை!
ஓரியண்ட்
விசிறிகள்
உருவ அமைப்பிலும் உயர்தர
உழைப்பிலும் பல வருடங்கள்
முன்னதாகத் திகழ்கின்றன
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்,
கல்கத்தா-11
ஆந்திரா மற்றும் மைசூர் ராஜ்யங்
களுக்கு விநியோகஸ்தர்கள்
ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிமிடெட்
கெம்பகௌடா ரோடு
பெங்களூர் - 9
போன்: 70272 - தந்தி: DEALHIND
கேரளா மற்றும் சென்னை ராஜ்யங்
களுக்கு விநியோகஸ்தர்கள்
ஓரியண்ட் டிஸ்டரிபியூட்டர்ஸ்
பிகாட்ஸ் பில்டிங்
26, எர்ரபாலு செட்டித் தெரு
சென்னை
போன் 23315 & 23445 தந்தி ORDIST

தான் ஆகிவிடும் உனது வாழ்க்கை!- அதையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள். நன்றாக, நிதானமாக, யோசனை செய்து ஒரு முடிவுக்கு வா. நன்றாக யோசனை செய்த பிறகு நீ எந்த முடிவுக்கு வந்தாலும் சரி. உனக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் எத்தகைய உதவியும் செய்வதற்கு என்னைவிட ஆர்வமாக முனைந்து நிற்கிற ஒருமனிதனும் இந்த உலகில் இருக்கிறான். இந்த மாவட்டம் முழுதுமே ஒன்றுகூடி உன்னை எதிர்த்த போதிலும், உனக்குப் பக்க பலமாக நிற்பதற்கு அந்த மனிதன் இருக்கிறான். ஆகையினால் மனத்தளர்ச்சி அடையாமல் யோசனை பண்ணி முடிவுசெய்வாயாக!''

''ஐயா! என்னுடைய தந்தை மறைந்து விட்டார்கள் என்று இதுவரை வருந்தினேன். இனி அந்த வருத்தம் எனக்கு இல்லை. நீங்கள் சொன்ன அத்தனை கருத்துக்களும் அன்பிலே பிறந்த அறிவுரைகள். நீண்ட அனுபவத்திலே கண்டெடுத்த அரிய மணி மொழிகள் அவை. அவற்றைக் கேட்ட பிறகு என்னுடைய இளம் உள்ளத்தின் அனுபவங்களையும் உங்களிடம் சொல்ல வேண்டும் என்று துடிக்கிறேன். ஆனால் ஏதோ ஒரு வெட்கம், ஏதோ ஒரு கூச்சத்தினால் வார்த்தைகள் தயங்குகின்றன. என்றாலும், உங்களுடைய உபதேசத்தை மட்டும் ஒரு நாளும் மறக்கமாட்டேன்.''

''தம்பி! நம் இருவருக்குள்ளும் அன்பு என்பது ஒரு பாலமாக இருக்கிறது என்பது உண்மை. ஆனாலும் வயது என்ற இடைவெளி நமக்குள் மிகவும் அகன்று பரந்து நிற்கிறது! எனவே நீ சில செய்திகளை என்னிடம் வெளியிட்டுச் சொல்வதற்கு வெட்கப்படலாம். அது இயல்பு. ஆனால் அப்படி நீ வெளியிட்டுச் சொல்ல வேண்டும் என்ற அவசியமும் இல்லை! எந்த முடிவானாலும் அவசரப்படாமல் உன்னுடைய ஓவிய வாழ்க்கைக்குஉகந்த முடிவு எது என்பதை நீயாகவே நன்றாக ஆராய்ந்து பார். அப்படி ஆராய்ந்த பிறகு ஒரு தீர்மானம் செய்து பிறகு அந்தத் தீர்மானத்திலே தீவிரமாக நில். உனக்கு எந்த விதமான இடையூறும் நேராதபடி பாதுகாக்க வேறு யாருடைய உதவியும் தேவை இல்லை! வேணுலிங்கம் ஒருவனே போதும்!''

வக்கீல் இப்படிச் சொன்னதும், திகைப்போடு கேட்டான் வில்வநாதன், 'வேணுலிங்கமா?' என்று!

''ஆமாம். இந்த மாவட்டம் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்குகிறானே, அந்தக் கொள்ளைக்காரன் வேணுலிங்கமே உனக்குப் பக்கபலமாக நிற்கிறான்.''

''வக்கீலையா! ஒரு கொள்ளைக்காரனுக்கு என்னிடம் அத்தனை அபிமானம் ஏற்பட வேண்டிய காரணம் என்ன? எனக்குப் புரியவில்லையே?''


''தம்பி! எல்லா விஷயங்களும் திடீரென்று ஒரே சமயத்தில் புரிந்து விட்டால் அதில் ரசமிராது! போகப் போகப் படிப்படியாகப் புரிந்தால்தான் வாழ்க்கையில் சுவை ஏற்படும். நான் புறப்படுகிறேன். மூளையைக் குழப்பிக் கொள்ளாமல், மனத்தில் அச்சம் இல்லாமல் நல்ல திடத்தோடு இருந்து யோசனை செய்து உன்னுடைய எதிர்காலத்தை நீ உருவாக்க வேண்டும். தெரிந்ததா? எப்படியும் திருவிழாவுக்குள் இந்தச் சித்திரப் பணியை முடித்துவிட வேண்டும். அதை மறந்து விடாதே!''

இப்படிச் சொல்லி விட்டுப் பத்திரங்களை மிகவும் பத்திரமாகக் கையிலே எடுத்துக் கொண்டு, சத்திரத்திலிருந்து புறப்பட்டார் திவான்பகதூர்! அவர் சென்ற பிறகு இரவெல்லாம் உறக்கம் இல்லாமல் பன்னிப் பன்னி யோசனை செய்தான் வில்வநாதன்!

மறு நாட்காலை! பொழுது விடிந்ததும், செண்பக சுந்தரி வந்ததும், பிறகு மறு நாள் பொழுது விடிந்ததும், மறு நாள் மாலை செண்பக சுந்தரி வந்ததும், அதற்கு மறு நாள் அவள் வந்ததும்—எல்லாம் காதல் என்ற மாயச் சகடையிலே சுழன்றன! அந்தச் சுழற்சியிலே ஜமீந்தார் வந்ததும், நந்தவனத்திலே நடந்த காதல் காட்சிகளைக் கண்டதும், தவணை சொல்லி விட்டுச் சிங்கம்புத்தூர் சென்றதும் எல்லாம் சேர்ந்து வில்வநாதனுடைய எதிர்கால வாழ்வை மையப்படுத்தின! அங்குமிங்கும் சிதறியோடிய உணர்ச்சிகளை ஒரு நடு மையத்துக்குக் கொண்டு வந்தன அந்தச் சுழற்சிகள்! அதன் பயனாக என்ன நேர்ந்தது? வில்வநாதனுடைய எதிர்காலம் தானாகவே தன்னை உருவாக்கிக்கொண்டு எழுந்தது. அதற்குரிய நிகழ்ச்சிகள் எல்லாம் சிங்கம்புத்தூர் மாளிகையிலே நடைபெற்றன!

ஆம்; சிங்கம்புத்தூர் மாளிகையில் நடந்து வந்த நிகழ்ச்சிகள் ஏதும் வில்வநாதனுக்குத் தெரியாது. செண்பகசுந்தரி வழங்கிய ஓவியக் கற்பனைகளையெல்லாம் சுவரோவியங்களாகச் சித்திரித்தவாறு இரவும் பகலும் இறகிலும் வர்ணங்களிலும் ஒன்றிப் போயிருந்தான் வில்வநாதன். செண்பக நாயகி கோயிலின் சுவர்ச் சித்திரங்களை இப்படி ஒரே மனவேகத்திலே வில்வநாதன் வரைந்து கொண்டிருந்த அந்த நாட்களிலேதான், சிங்கம்புத்தூர் மாளிகையில் வில்வநாதனுடைய வாழ்க்கை என்ற ஓவியம் எதிர்பாராத பல வண்ணங்களோடு வரையப்பட்டு வந்தது!

(தொடரும்)



கையெழுத்துப் போட்டு அவ்வளவு வாழ்த்துச் செய்திகளையும் வாங்கினான் ரங்கன்.

தன் இணைபிரியா நண்பனுடைய கலியாணத்தை யொட்டி வந்த வாழ்த்துச் செய்திகள்தான் எல்லாம்.

''கலியாணச் சந்தடியில் என்னிடம் வாழ்த்துச் செய்திகளை யெல்லாம் காட்ட வேண்டாம். ஆளுக்கு ஒருவராய் வாழ்த்துச் செய்திகளை வாங்கி அப்புறம் போன இடம் தெரியாது போய் விடும். வரும் எல்லா வாழ்த்துச் செய்திகளையும் நீயே வாங்கி வைத்துவிடு. மற்றவர்களை வாங்க விடாதே. நாளைக்கு நாம் சாவகாசமாய் எல்லாவற்றையும் பார்த்து யார் யார் அனுப்பினார்கள் என்பதைக் குறித்துக் கொண்டால் பிறகு அவர்களுக்கு நன்றிக் கடிதம் விட்டு விடாமல் போட்டு விடலாம்'' என்று மாப்பிள்ளை விகவம் சொல்லியிருந்தான்.

எல்லா வாழ்த்துச் செய்திகளையும் எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போய் உறைகளை ஒவ்வொன்றாய்க் கிழித்து வாழ்த்துக்களை வரிசையாய் அடுக்கிக் கொண்டான்.

எல்லாவற்றையும் படிக்கும்போது ஒரு செய்தி

தடுமாற்றம்

ஸ்ரீவத்ஸன்

யைப் படித்ததும் திடுக்கிட்டான்.

தந்திகளில் வழக்கமாய் எட்டு, பதினேழு என்று நம்பர்களை போடப்பட்டு அதை விஸ்தரித்து 'மணமக்களுக்குச் சகல நன்மையும் உண்டாகட்டும்' என்றெல்லாம் எழுதி யிருக்கும் அல்லவா?

அந்தத் தந்தியில் கண்டிருந்த வாசகம்: ''உன் மனைவி இறந்து விட்டதற்கு என் மனப் பூர்வமான அனுதாபங்கள்'' என்பதைப் படித்துப் பார்த்த ரங்கன் திடுக்கிட்டான்.

வேறு யாருடையதாகவோ இருக்கும் என்று பார்த்தான். அனுப்பியவர் பெயர் காத்தமுத்து என்றும் பெற்றுக்கொள்ளுபவர் பெயர் விகவம் என்றும் இருந்தன. தந்தியின் உறையைப் பார்த்தான். கலியாணக் கவர் தான் அது.

உடனே புரிந்து விட்டது அவனுக்கு. தபால் ஆபீஸில்தான் தவறுதல் நடந்திருக்கிறது என்பது புரிந்துவிட்டது.

சக்கையாய்த் திட்டி விட்டுவிடுவது என்றெண்ணி அந்தத் தந்தியையும் உறையையும் எடுத்துக் கொண்டு ஓடினான்.

'விசாரணை' என்று போட்டிருந்த கௌண்டரில் போய் நின்றான். அங்கே போய் நின்றதும், ''ஸார்!'' என்றான்.

''யாரது?'' என்று குரல் கேட்டதும் திடுக்கிட்டான் ரங்கன்.

'ஸார்' இல்லை. 'மாடம்'தான் பதில் கொடுத்தது.

''மன்னிக்க வேண்டும்'' என்றான் ரங்கன்.

''இப்போது ஒன்றும் முடியாது. ஆபீஸில் ஏற்கனவேயே இரண்டு பேர்கள் 'லீவு'' என்றாள் அந்தப் பெண்.

ரங்கன் விழித்தான்.

தான் 'மன்னிக்கவேண்டும்' என்று கேட்டதற்கு 'இப்போது ஒன்றும் முடியாது. ஏற்கனவே ஆபீஸில் இரண்டு பேர் லீவு' என்று ஏன் சொல்லுகிறாள்?

மன்னிப்பதற்குக்கூட லீவில் போனவர்கள் வரவேண்டுமோ என்று ஒன்றும் புரியாமல் விழித்தான்.

அதற்குள் அந்தப் பெண், ''என்ன கேட்கிறீர்கள்? எங்கேயோ ஞாபகமாய் ஏதேதோ சொல்லி விட்டேன்'' என்றாள்.

ரங்கனுக்குப் புரிந்து விட்டது.

அவள் ஏதோ ஞாபகத்தில் ஏதோ கேட்டு விட்டாள்.

''இந்த ஆபீஸில் யார் தந்தி வாங்கிப் பட்டுவாடா செய்வது?'' அவன் முகத்தைக் கடுமையாய் வைத்துக் கொண்டு கேட்டான்.

''யாராயிருந்தால் என்ன? நான்தான் தந்தி குமாஸ்தா.'' அவள் அதே தோரணையில் பதில் சொன்னாள்.

''சாவுக்கும் வாழ்வுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் எல்லாம் ஏன் உத்தியோகத்துக்கு வரவேண்டும்?''

'தபாலாபீஸ் பரீட்சை பாஸ் செய்தால் வேலை. இதுதான் தபால் இலாகாவின் இப்போதுள்ள நடைமுறை விதி. நீங்கள் ஒரு வேளை தபால் இலாகாவிலேயே உயரிய அதிகாரியாக வந்தால் தபாலாபீஸ் பரீட்சை பாஸானால் மட்டும் போதாது, வாழ்வுக்கும் சாவுக்கும் வித்தியாசம் தெரிந்தால்தான் உத்தியோகம் என்று விதி ஏற்படுத்துங்கள். பெரிதாய்ப் பேச வந்து விட்டார்'' என்று சுடச் சுடப் பொரிந்தாள்.

ரங்கனுக்கு வேர்த்து விட்டது.

''செய்கிற தப்பையும் செய்து விட்டுப் பேச்சு வேறயா?'' அவன் விடவில்லை.

''யாரய்யா தப்பு செய்தார்கள்? நீர் என்ன எங்கள் அதிகாரியா?'' என்று அவள் முறைத்தாள்.

''உங்கள் அதிகாரி இல்லை. உங்கள் அதிகாரிக்கும் அதிகாரியாகிய பொதுஜனத்தில் ஒருவன் நான்.'' ரங்கன் இதைச் சொல்லி விட்டுத் திரும்பிப் பார்த்துக் கொண்டான், யாராவது 'அப்ளாஸ்' கொடுக்க மாட்டார்களா என்று.

பொதுக் கூட்டத்திலேயே 'அப்ளாஸ்' கொடுப்பதற்காகக் கூலி கொடுத்து முன் வரிசையில் அமர்த்தும் இந்தக் காலத்தில் யார் அவனுக்கு, அதுவும் தபாலாபீஸில் அப்ளாஸ் கொடுக்கக் காத்திருக்கிறார்கள்?

''தபாலாபீஸில் கலாட்டா செய்ய வந்தீரா? போலீஸைக் கூப்பிடவா?''

''போலீஸைக் கூப்பிடுங்கள். எனக்கும் போன் கனெக்ஷன் கொடுங்கள். உங்கள் அதிகாரியையும் இவ்விடம் வரவழைப்போம்.''

''எதற்காக?''

''கலியாண வீட்டுக்கு எழவுத் தந்தியை அனுப்பிய செய்தியைச் சொல்லத்தான்.''

''என்ன பேத்துகிறீர்கள்?''

''இதோ, பாருங்கள். இந்தத் தந்தியையும் அதை அடக்கம் செய்திருந்த உறையையும்.'' அவள் வாங்கிப் பார்த்தாள்.

திடுக்கிட்டாள். விஷயம் புரிந்துவிட்டது.

அதே தெருவில் உள்ள மிஸ்டர் விசுவம் என்பவரின் மனைவி இறந்ததற்காக வந்த தந்தியை வாழ்த்துக்கள் கவரில் போட்டு விட்டு மாப்பிள்ளை விசுவத்துக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்தியைச் சாதாரணக் கவரில் போட்டு அதை அந்த மனைவியை இழந்த விசுவத்துக்கு அனுப்பி விட்டாள்.

பெயர் ஒன்றாக இருந்ததால் தந்திகளை வைக்கும் கவரில் அவசரத்தில் தவறு செய்து விட்டாள்.

அவள் தவறு அவளுக்குப் புரிந்து விட்டது. அன்று தந்திவேலையுடன் விசாரணை குமாஸ்தா லீவானதால் அந்த வேலையையும் அவள் பார்க்கும்படி இருந்தது.

அவளிடம் தன் நிலையைச் சொல்லி மன்னிப்புக் கேட்க நினைப்பதற்குள் ரங்கன், ''என்னம்மா! முகம் ஏன் பேய் அறைந்ததுபோல் இருக்கிறது? உத்தியோகத்துக்கு வர ஆசைப்பட்டுப் பலன் இல்லை. ஒழுங்காய் உத்தியோகம் பார்க்க வேண்டும்'' என்றான்.

அவளுக்கு ரோசம் உண்டாகிவிட்டது.

''ஏதோ தவறுதல் நடந்து விட்டது. நானே மன்னிப்புக் கோரலாம் என நினைத்தேன். தங்களால் என்ன செய்து கொள்ள முடியுமோ, அதைச் செய்து கொள்ளுங்கள். எந்தத் தண்டனையையும் அதிகாரிகள் அளிப்பதை ஏற்கத் தயார். உங்கள் காலில் விழுவதைவிட அதிகாரிகள் காலில் விழுவது மிகவும் நல்லது.''

அவன் வாயடைத்துப் போய் நின்றான்.

எந்தச் சம்பாஷணையிலும் அவள்தான் ஏற்றத்தில் இருந்தாள். தந்தியைத் தவறாக அனுப்பியது அவள்தான் என்று சொன்ன போதே, ''பரவாயில்லை. தவறுதல் எல்லாருக்கும் சகஜம்தான்'' என்று அவன் சொல்லியிருக்கலாம்.

அவன் பேசப் பேச அவள் சுடச் சுடக் கொடுத்தாள்.

ரங்கன் நாக்கைக் கடித்துக் கொண்டான். அவள் தன்னை அவமானப்படுத்தி விட்டதாக நினைத்தான்.

''சரி, சரி! எடுங்கள் புகார் புஸ்தகத்தை! எழுதி விட்டுப் போகிறேன்'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''புகார் செய்ய ஆசைப்படும் நாங்கள் எப்படிப் புகார் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் புகார் புஸ்தகம் கேட்கிறீர்களே. பொதுவான குறைபாடுகளையும், அபிவிருத்திக்கான யோசனைகளையும்தான் புகார் புஸ்தகத்தில் எழுத வேண்டும். உங்கள் புகார் காகிதத்தில் எழுதிக் கொடுக்க வேண்டிய அயிட்டம். இந்தாருங்கள், காகிதம்.''

''பெண்ணாக இருக்கிறீர்களே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் நடப்பதே வேறு'' என்றான் ரங்கன் ஆத்திரத்தோடு.

''மிரட்டாதீர்கள் மிஸ்டர். பெண்ணாவது ஆணாவது! தாராளமாய் ரிப்போர்ட் செய்யுங்கள். இதற்கெல்லாம் பயப்படுபவள் நானில்லை.''

அவன் அடிபட்ட வேங்கை போல் ஆனான். புகார் எழுதி அவளிடம் கொடுக்க வந்தான்.

''இந்தப் புகாரை போஸ்ட்மாஸ்டர் வந்ததும் அவரிடம் கொடுங்கள். நான் வாங்க அருகதை அற்றவள்.''

மறுபடியும் அவனுக்குப் படுதோல்வி.

அங்கேயே ஒரு பதினைந்து நயா பைசா கவரை வாங்கி அதை அதில் வைத்து போஸ்ட் மாஸ்டர் என விலாச மிட்டுத் தபால் பெட்டியில் போட்டு விட்டான்.

பிறகு அவன் கலியாண வீட்டை நோக்கி நடந்தான்.

''அழகான பெண்ணுக்கு இவ்வளவு வாய் கூடாது. கொஞ்சம் கடினமாய்த்தான் நடந்து கொண்டு விட்டோம். அதுவும் தவறுதான்'' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

ஃ ஃ ஃ

ஒரு வருடம் ஓடி விட்டது.

அன்று ஏதோ ஓர் உறவினர் கலியாணத்துக்குப் போய் விட்டு மாயவரம் சந்திப்பில் ரயில் ஏற வந்தாள் அஞ்சல் தந்திக் குமாஸ்தா மாலினி.

அவள் ஆனந்தா வாட்ஜ் விட்டே வரும் போது வண்டி புறப்பட மணி அடித்தாகி விட்டது.

அவசரம் அவசரமாக ஓடி வந்து கௌண்டரில் ''செங்கல்பட்டுக்கு ஓர் இரண்டாவது வகுப்பு'' என்றாள்.

அவசரம் அவசரமாய் டிக்கெட்டையும் மீதிச் சில்லறையையும் அப்படியே எண்ணிக் கூடப் பார்க்காமலே மணிபர்ஸில் போட்டுக் கொண்டு மேம்பாலம் ஏறி இறங்கினாள். வண்டி புறப்பட்டு விட்டது. நல்ல வேளை! இரண்டாவது வகுப்பு வண்டி அவள் எதிரில் இருந்தது. ஏறிவிட்டாள்.

முதல் நாள் இரவு வெகு நேரம் வரையில் கண் விழித்ததால் அவளுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது.

கடலூர் வந்ததும், ''அம்மா! உங்க டிக்கெட்'' என்று டிக்கெட் பரிசோதகர் கேட்டதும்தான் விழித்துக் கொண்டாள்.

அரைத் தூக்கத்தில் மணிபர்ஸிலிருந்து டிக்கெட்டை எடுத்து நீட்டினாள்.

பரிசோதகர் அதை வாங்கிப் பார்த்து விட்டு, ''என்னம்மா இது?'' என்றார்.

''என்ன சார்?''

''பிளாட்பாரம் டிக்கெட் அல்லவா இது?''

அவளுக்குத் தேள் கொட்டியது போல் இருந்தது. ''ஸார், மாயவரம் சந்திப்பில்தான் இரண்டாவது வகுப்பு டிக்கெட் வாங்கினேன். ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டு டிக்கெட்டும் பாக்கிச் சில்லறையும் பெற்றுக் கொண்டேன். அவசரத்தில் கவனிக்கவில்லை. என்னை நம்புங்கள். நான் இரண்டாவது வகுப்பு டிக்கெட்தான் வாங்கினேன். டிக்கெட் கொடுத்த புக்கிங் கிளார்க் பிளாட்பாரம் டிக்கெட்டை மாற்றிக் கொடுத்து விட்டிருக்கிறார். என்ன அநியாயம்!''

''நான் என்ன செய்ய முடியும் அம்மா? சட்டப்படி தாங்கள் இப்போது டிக்கெட் இல்லாப் பிரயாணி. கட்டணம் செலுத்தியாக வேண்டும்.''

''அப்படியானால் நான் ஏற்கனவே டிக்கெட் வாங்கியது....?''

''டிக்கெட் வாங்கியபோதே அதைத் தாங்கள் பார்த்திருக்க வேண்டும். வேண்டுமானால் அதிகாரிக்கு இது பற்றிப் புகார் மனு எழுதி அனுப்புங்கள்.''

''பின்னே என்ன? சும்மா விட்டு விடுவேனா என்ன? மனுக் கொடுத்து அந்தப் புக்கிங் குமாஸ்தாவைக் கடைசி வரை பார்த்துவிடாவிட்டால் என் பெயர் மாலினி இல்லை.''

ஃ ஃ ஃ

ஒரு மாதம் ஓடி விட்டது.

''தங்கள் புகார் பற்றிய விசாரணை விழுப்புரம் சந்திப்பில் வருகிற திங்கட்கிழமை நடைபெறும். அன்று தாங்கள் வந்து ஆஜராக வேண்டியது'' என்று ஒரு கடிதம் ரயில்வே அதிகாரிகளிடமிருந்து வந்தது மாலினிக்கு.

மாலினி புறப்பட்டாள்.

விழுப்புரம் சந்திப்பில் அவள் ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் போய் நின்றபோது அதிகாரி, ''நீங்கதானே மாலினி?'' என்றார்.

''ஆமாம்.''

''உட்காருங்கள்'' என்று சொல்லி விட்டு, ''அந்தப் புக்கிங் குமாஸ்தாவைக் கூப்பிடு'' என்று தம் பியூனிடம் உத்தரவிட்டார்.

அடுத்த நிமிடம் புக்கிங் குமாஸ்தா உள்ளே வந்து சேர்ந்தார்.

மாலினி அவர் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஒரு வருடத்துக்கு முன்பு வாழ்த்துத் தந்தியைத் தவறி அனுப்பியதற்காக வந்து சண்டை போட்டு அவள் பேரில் புகார் எழுதிக் கொடுத்து விட்டுப் போனவர்தான் அவர்.

அவனும் அவளைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவன் அவளை எதிர்பார்க்கவில்லை.



''என்ன இந்தப் பாகவதர் இப்படி அபஸ்வரமாகவும் அவலயமாகவும் கத்துகிறார்?''

''பாடும்போது சிஷ்யன் எட்டிப் பார்த்ததைக் கண்டு விட்டு அவன் கேட்டுச் சரியாகக் கத்துக் கொண்டு விடப்போகிறானே என்றுதான் மாற்றிப் பாடுகிறார்!''

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவிலிருந்து
குணமடைந்ததைப்பற்றிய
வியக்கத்தக்க செய்திகள்

தாமாகவே விரும்பி எழுதப்பட்ட அத்தாட்சிக் கடிதங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசையின் பிரத்தியேகமான மதிப்பை நிரூபிக்கின்றன.

"எனக்கு இப்போது 55 வயதாகிறது.

என்னுடைய எல்லாப் பற்களும் சீராகவே இருக்கின்றன ஆனால் 1943-ல் என்னுடைய இரண்டு பல்வரிசைகளிலும் உள்ள முன்புற, மற்றும் பக்கவாட்டிலுமுள்ள பற்கள் அசையத் தொடங்கின. அவை விழுந்துவிடுமென்றே நான் நினைத்தேன். 1943-ல் ஒரு நாள் போர்ஹான்ஸைப்பற்றிய குறிப்புகளைக் கண்டேன். நான் அதை உபயோகிக்கத் தொடங்கினேன். இப்போது போர்ஹான்ஸ் என் பற்களைக் காப்பதுடன் அவற்றை வலுவுள்ளதாகவும் செய்திருக்கிறதென்பதைக் கூற மகிழ்கிறேன்."

"நான் எப்பொழுதும் போர்ஹான்ஸையே குறிக்கிறேன்.

பற்கள் அல்லது ஈறுகளிலுள்ள கோளாறுகளுக்காக என்னிடம் சிகிச்சைபெறுபவர்களும் எப்பொழுதும் அதற்காக நன்றி கூறுகிறார்கள். சிகிச்சைபெறும் குழந்தைகளைக்கூட போர்ஹான்ஸ் உபயோகிக்கும்படி நான் சிபார்சு செய்கிறேன். மேலும் என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வருபவர்களில் பலர் அவர்களின் குழந்தைகளுக்குப் போர்ஹான்ஸையே உபயோகிக்கிறார்கள்"

"நான் மிகச் சிறந்த பலனை அடைந்திருக்கிறேன்.

போர்ஹான்ஸ் உபயோகிப்பதால், என் தகப்பனார்மூலம் நான், போர்ஹான்ஸ் ஈறுகளுக்குப் பலனளிக்கக் கூடியது என்று கேட்டிருக்கிறேன். ஆதலால், எனக்கு ஈறுகளில் உபாதை ஏற்பட்டவுடன், என் தந்தையின் புத்திமதிப்படி போர்ஹான்ஸ் உபயோகிக்கத் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை போர்ஹான்ஸையே உபயோகித்து வருகிறேன்."

போர்ஹான்ஸ்


ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.



GEOFFREY MANNERS & CO., LIMITED


வீட்டில்
கைவசம்
இருக்கட்டும்
சீதளம், ஜலதோஷம்
தலைவலி மற்றும்
ஜுரத்திற்கு
C.A.Q
REGD. TRADE MARK
8 காப்ஸ்யூல்கள் கொண்ட
எளிதாகத் திறக்கும்
பெட்டியில் கிடைக்கும்.
ஸ்பென்ஸர் & கோ. லிட்.
CQ-16-3A
சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, மற்றும் கிளைகள்.


Exide
ஸில்வர்
எக்ஸைட்
Silver
Exide
சென்னை, ஆந்திரா, கேரளம் மற்றும் மைசூர் ராஜ்யங்களுக்குப் பிரதம ஏஜெண்டுகள்
ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட், லிமிடெட், சென்னை-2
கிளைகள்: கோயமுத்தூர், பெங்களூர் மற்றும் செகந்திராபாத்



"உங்க இருமலே நேற்று கேட்டதற்கு இன்றைக்குக் கேட்பது ரொம்ப 'பெட்டரா' இருக்கு'"

"இல்லாமல் இருக்குமா? நேற்றிரவு பூராவும் அகர சாதகம் செய்திருக்கிறேனே!'

அவள் அவனைப் பார்த்த பார்வை, "என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே. நான் ஏழை. என்னை நம்பி வீட்டில் பத்துப் பேர் சாப்பிடுகிறார்கள்" என்று பேசியது போல இருந்தது.

அவன் ஒரு நிமிடம் யோசனை செய்தான்.

அந்த வயதான அதிகாரி, "ஏனம்மா! விசாரணையைத் தொடங்கலாமா?" என்று கேட்டார்.

"உங்களிடம் நான் தனியாய் ஒரு வார்த்தை பேச வேண்டும்" என்றாள் மாலினி.

"நீ சற்று வெளியே போய் இரு" என்றார் அதிகாரி குமாஸ்தாவிடம்.

"ஸார்! உங்களை என் தகப்பனார்போல் நினைத்துச் சொல்கிறேன். ஒரு மாதம் முன்பு இது நடந்தது. அப்போது இவர் மாயவரம் சந்திப்பில் இருந்திருக்கிறார். கௌண்டரில் அவசரம் அவசரமாய் டிக்கெட் வாங்கியதும் இவர் முகத்தைப் பார்க்கவில்லை. சென்ற பத்து நாட்களாய் எங்கள் இருவருக்கும் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன.

"மாயவரத்தில் டிக்கெட் கொடுத்தவர் இவர் என்பது இன்றுதான் தெரிகிறது இன்றுவரை மனுக் கொடுத்தது நான் என்று அவருக்குத் தெரியாது. மறு விசாரணை விழுப்புரத்தில் நடக்கும் என்றபோது சொப்பனத்தில் கூட அவர் என் வருங்காலக் கணவராய் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. பெரியவர்களுக்குத் தெரிந்தால் மிகவும் கோபிப்பார்கள். எங்கள் விவாகப் பேச்சும் முறிந்து விடும். ஆதலால் ஒருவரும் அறியாமல் இப்போதே மனுவை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்" என்றார் அவர். அவளும் விடை பெற்றுக் கொண்டாள்.

மறு நிமிடம் அந்தக் குமாஸ்தாவைக் கூப்பிட்டார். அவன் உள்ளே வந்தான்.

"ஏம்பா, ரங்கன்! நீகூட என்னிடம் சொல்லவில்லையே. உன் வருங்கால மனைவியாமே? வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டாளாம். கங்கிராசுலேஷன்ஸ்...உங்க கலியாணத்துக்கு எனக்கு அழைப்பு அனுப்ப மறந்து விடாதீங்க" என்றார் அதிகாரி. அடுத்த நிமிடம் அவர் டிராலியில் ஏறிச் சென்று விட்டார்.

மாலினி பிளாட்பாரத்தில் நிற்பதைக் கண்டு ரங்கனும் போனான்.

"நீங்க என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. அதிலும் நான் முன்பு உங்கள் பேரில் மனுக் கொடுத்தவள். அதிகாரிகள் உங்களை எச்சரிக்கை செய்து விட்டார்கள் இல்லையா?"

"எச்சரிக்கையா? ஒரு வருடத்துக்குச் சம்பள உயர்வை நிறுத்தி விட்டார்கள்!"

"அப்படியா? நான் ஏதோ விளையாட்டுப் போலச் செய்யப்போய் இப்படி ஆகிவிட்டதே. நீங்கள் சொன்ன பொய்யை உடனே நிஜமாக்கி விட வேண்டியது தான் என் முதல் வேலை!" என்றான் ரங்கன் தீர்மானமாக.

"எந்தப் பொய்யை நிஜமாக்கப் போகிறீர்கள்?"

"மனுவை வாபஸ் வாங்கும் போது உங்களுக்கும் எனக்கும் கலியாணம் நடக்க இருப்பதாய்ப் பொய் சொன்னீர்கள் இல்லையா?"

"உங்களை அந்த நிலையில் தப்புவிக்க அந்தப் பொய் சொன்னேன். ஆபத்துக்குத் தோஷம் இல்லை என்று நினைத்தேன். அதனால்தான் சொன்னேன்."

"என்னை விடுவிக்க ஏன் முயன்றீர்கள்?"

"சின்ன வயதில் என் ஹெட்மிஸ்ட்ரஸ் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்று சொல்லியிருக்கிறார். அதனால்தான் செய்தேன்."

"உங்கள் அப்பா விலாசம்?" என்று அவன் கேட்டான்.

"உங்களுக்கு ஏன் அது?"

"இன்றே ஒரு மாத லீவு போட்டு விட்டு உன் அப்பா காலிலாவது விழுந்து உன்னை என்னுடையவள் ஆக்கிக் கொள்ளத்தான்."

"தாங்கள் காலம் கடந்து வருகிறீர்கள்."

"என்ன சொல்கிறாய் மாலினி?"

அவள் அவன் கேள்விக்குப் பதில் பேசவில்லை. கைப் பையிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து நீட்டினாள்.

அதில் "என் குமாரத்தி சௌ மாலினிக்கும் கிருஷ்ணாபுரம் ராமநாதய்யர் குமாரன் வெங்கடேசனுக்கும் வருகிற ஆதிவாரம் திருமணம் செய்வதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு..." என்று மட்டுமே படித்தான் ரங்கன்.

அடுத்த நிமிடம் அவன் முகம் தொங்கிப் போய் விட்டது.

"எனக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்றான் அவன்.

அவன் முகம் பார்க்க மிகவும் பரிதாபமாய் இருந்தது.

அடுத்த நிமிடம் மாலினி, "பரவாயில்லை, உங்களை ரொம்பவும் சோதிக்கக் கூடாது. இது என் பெரியம்மா பெண் மாலினியின் கலியாணப் பத்திரிகை. அவள் பெயரும் மாலினிதான். உங்களை அழவிட்டு வேடிக்கை பார்த்தேன்" என்று சொல்லி விட்டு, "இந்தாருங்கள் என் அப்பா விலாசம்" என்று கொடுத்தாள்.

"இந்த நிமிடம் முதல் பொய்யை மெய்யாக்கும் வேலைதான்" என்று குதித்தான் அவன் மகிழ்ச்சியோடு.

பொய் மெய்யாகி அவர்களுக்குத் திருமணம் ஆகி விட்டது.

அவர்கள் கல்யாணத்துக்கு வந்தவர்களுக்குப் பிரயாண டிக்கெட், பிளாட்பாரம் டிக்கெட்டாய் மாறவும் இல்லை. வந்த வாழ்த்துச் செய்திகளில் வேறு எந்தச் செய்தியும் கலந்திருக்கவும் இல்லை.

மனப் பறவை




அந்தச் சிறிய வீட்டின் உத்திரத்து இடுக்கில் ஆணும், பெண்ணுமாக இரு குருவிகள் கூடு கட்டி வெகு காலமாக வசித்து வந்தன. மழைக்காலத்தில் கூட்டில் பதுங்கி வசித்துக் குளிர் காலத்தில் அவ்வீட்டுத் தென்னை மரத்தின் உச்சி இலைகளில் உட்கார்ந்து குளிர் காய்ந்தன. வசந்தத்தில் சிறகடித்துப் பறந்து இரை தேடிக் கூடி கட்டி இன விருத்தி செய்து மகிழ்ந்தன. காலதேவனின் தேர் சக்கரத்தில் சுழன்று சுழன்று அவை இரண்டும் பருவ மாறுதல்களுக்கேற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது போல் செல்லம்மாளும், சிதம்பரநாதனும் அந்த வீட்டில் தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்துப் பல வருஷங்கள் ஆயின. செல்லம்மாளுக்கு வயது ஐம்பதைத் தாண்டியிருந்தாலும் அவளிடம் மாறுதல் அதிகம் ஏற்படவில்லை. நல்ல சிவந்த நிறம். படிப்படியான கூந்தல். கொசுவம் கலையாத புடவை. அவள் புடவைத் தலைப்பை மடித்துக் கட்டி இழுத்துப் போர்த்திக் கொள்வதே நேர்த்தியாக இருந்தது. தலையை இழைய வாரி முடிந்து கொண்டால் சிதம்பரநாதன் சண்டைக்குப் போய் விடுவார் மனைவியிடம். இந்தக் கால 'பாஷன்'படி அவள் பிச்சோடா போட்டுக் கொள்ள வேண்டும். சிதம்பரநாதனுடைய உருவத்தில் பெருத்த மாறுதல் ஏற்பட்டிருந்தது. கட்டுக் குடுமியும், காதில் கடுக்கன்களுமாகச் சரிகை அங்கவஸ்திரத்துடன் மிடுக்காக அந்தக் கூடத்துச் சுவரில் தொங்கும் புகைப்படத்தில் அவர் காட்சியளிப்பது போலவா இன்று இருக்கிறார்? வற்றிய எலும்புக் கூடாக, மார்பு முன்தள்ளி, வயிறு பருத்து மிகவும் தளர்ந்து விட்டார் அவர். பாவம்! ஏதோ ஒரு பொல்லாத வியாதி வந்து அவரைப் பிடித்துக் கொண்டிருந்தது. வைத்தியர்கள் அதற்கு ஏதேதோ நாமகரணம் இட்டு அழைத்தனர். வியாதியைப் பற்றிய விஷயங்களை அவர்களுக்கே விட்டு விட்டு உத்திரத்துக் குருவிகளைப்போல் வாழும் இந்த 'மனித பட்சி'களைப் பார்ப்போம். குணதிசையில் உஷைக் கன்னி பொன்னும் மெழுகிக் கதிரவன் கிரணங்களால் கீற்றுக் கோலம் வரைய ஆரம்பித்து விட்டாள் என்பதற்கு அடையாளமாகச் செல்லம்மாள் கூந்தலில் நீர் சொட்டப் பிழிந்து முடிந்து கொண்டு 'ஸ்டவ்'வை 'உய்ய்'யென்று பற்ற வைத்துக் காப்பிக்கு ஜலம் வைத்து விடுவாள். சிதம்பரநாதனுக்கு விடியும்போதே காப்பி தயாராக இருக்க வேண்டும். இரவெல்லாம் வயிற்றில் வலியுடன் போராடிய அந்த ஜீவனுக்கு இந்தக் காப்பி கடக்கட வயிற்றுக்குள் போனவுடன் தெம்பு வந்து விடும். இல்லாவிடில், அவர் மனிதனாக இருக்க மாட்டார். ஆனால், இன்று வரை அவரை மனிதன் அல்லாத வேறாகச் செல்லம்மாள் மாற்றியதே இல்லை. ஏன் மாற்ற வேண்டும்? குழந்தை குட்டி என்று வேறு பிடுங்கல்கள் இருந்தால் ஒரு வேளை செல்லம்மாளும் மாறி யிருப்பாள். அந்த மனிதனும் மாறியிருப்பார். பிக்கு பிடுங்கல் இல்லாமல் போகவே செல்லம்மாளுக்கு அவள் கணவரே குழந்தையாக மாறியிருந்தார். வயிற்றில் பிறந்த குழந்தையானால் அதட்டலாம், மிஞ்சிப் போனால் ஓர் அடி வைக்கலாம். இந்தக் குழந்தையின் பிடிவாதங்களுக்கு, கோபதாபங்களுக் கேற்ப அவள் வளைந்து போக வேண்டியிருந்தது. டாக்டர் எது ஆகாது என்கிறாரோ அதுதான் அந்த மனிதருக்குத் தேவையாக இருந்தது.



நாக்கை அடக்க முடியாமல், வியாதியுடன் பலமாக அந்த மனிதர் போரிட்டுக் கொண்டிருந்தார்.

கணவர் அவருக்குப் பிற்காலம் தனக்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறார் என்பதைப் பற்றி அவள் சிறிதும் கவலைப் பட்டதேயில்லை. 'அவருக்குப் பிற்காலம் என்று ஒன்று வரவே வேண்டாமே!' என்றுதான் அவள் நினைத்தாள்.

''செல்லம்! நீ இப்படி அசடு மாதிரி இருக்கிற பணத்தை மருந்து மருந்து என்று கரைத்து வந்தாயானால் உனக்கென்று என்ன மிஞ்சப் போகிறது?'' என்று அவள் உறவினர்கள் அங்கலாய்த்தனர்.



"பணம் பணம் என்று அந்த மனுஷனுக்குச் சரியாக வைத்தியம் பார்க்கவேயில்லை. மனுஷனை விடப் பணமா உயர்வு?'' என்று சிதம்பரநாதனைச் சேர்ந்தவர்கள் அவளைத் துளைத்தெடுத்தனர்.

செல்லம்மாளின் இதயம் சொல்லம்புகளால் துளைக்கப்பட்டுப் புண்பட்டுக் கிடந்தது. இடையில் இருந்தவர்கள் சிதம்பரநாதன் வைத்திருந்த கொஞ்ச நஞ்ச சொத்து யாரைச் சேரப் போகிறது என்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். உத்திரத்தில் கூடு கட்டி வாழும் அந்த இரு பறவைகளிடமும் அதன் இனத்துக்கு இருந்த பாசம் பரிவு கூட இந்தப் பாழும் மனித இனத்துக்கு இல்லையே என்று செல்லம்மாள் மேலே அண்ணாந்து பார்த்தவாறு பெருமூச்செறிவாள்.

அந்த வீட்டில் முதன் முதலாக வந்த போது சிதம்பர நாதன் ஆரோக்கியமாகத் தான் இருந்து வந்தார். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர் தமக்கென்று வீடு வாசல் ஒன்றையும் தேடிக் கொள்ளவில்லை. வெளியூரிலிருந்து அவர் சகோதரிக்குச் சொந்தமாக இருந்த அந்தக் கிராமத்து வீட்டை அவர் வந்தடைந்த போது உற்றமும், சுற்றமும் அவரைப் பலவாறு ஏசின. "பணத்தாசை பிடித்தவர்கள். சகோதரியை மோசம் செய்யும் கருத்தோடுதான் அங்கே வந்திருக்கிறார்கள்'' என்றார்கள்.

'பிள்ளை குட்டி இல்லாதவர்களுக்கு வீடென்ன? வாசலென்ன? எங்கேயாவது பொழுதைக் கழித்தால் ஆயிற்று. அந்த வீட்டை வாடகைக்கு விட்டால் வாடகை வராதா? இவர்கள் ஏன் இருமாக இருக்க வேண்டும்?'

உறவினரின் கசப்புக்கு ஆளான சிதம்பரநாதன் அந்தப் பழைய வீட்டைக் கடுமான வரையில் சீராக்கினர். கொல்லைக் கிணற்றோரத்தில் வாழைகளும், தென்னைகளும் வளர்ந்து செழித்தன. கூரையெங்கும் ஓட்டடை படிந்து கிடந்தது போக, இப்போது பளிச்சென்று காணப்பட்டது. எங்கிருந்தோ இரண்டு குருவிகள் வந்து உத்திரத்தில் குடியேறின?

செல்லம்மாள் உயர அண்ணாந்து பார்த்துப் பெருமூச்செறிந்தாள்; வாழ்க்கையில் ஐம்பது வயதை அடைந்து விட்ட அவளும், அறுபதை நெருங்கும் அவரும் அந்தக் குருவிகளைப் போல் யாருமற்றவர்கள். அன்பாக, இனிமையாக அவர்களை வைத்து ஆதரிக்க உலகில் யாருமே இல்லை. சோர்ந்த மனைவியின் முகத்தைச் சிதம்பரநாதன் ஆதரவுடன் பார்த்தார்.


ஸரோஜா ராமமூர்த்தி

"செல்லம்! ஏன் இப்படி ஏங்கிச் சோர்ந்து சோர்ந்து உட்கார்ந்து விடுகிறாய்? வாழ்க்கையில் உனக்காக நானும், எனக்காக நீயும் என்று நிர்ணயிக்கப்பட்டவர்கள். மூன்றாவது ஜீவனுக்கு இடமில்லாமல் கடவுள் செய்து விட்டார்'' என்றார் சிதம்பரநாதன்.

"வஞ்சித்து விட்டார் என்று சொல்லுங்கள். ஒரு குழந்தை இருந்திருந்தால் இத்தனை பேர்கள் இவ்வளவு சொற்கள் சொல்வதற்கு இடம் இருக்குமா?''

முதன் முறையாக இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் மனைவி முத்து முத்தாகக் கண்ணீர் சிந்துவதைக் கண்டார் அவர். இத்தனை காலமாக அவன் மனத்தில் முளைக்காத ஆசை காலம் கடந்து தோன்றி வருத்துவதையும் அவரால் உணர முடிந்தது.

செல்லம்மாள் தன்னுடைய இளமையில் தனக்குக் குழந்தை இல்லையே என்று சிந்தித்





துப் பார்த்ததில்லை. அந்த எண்ணமே அவளுக்கு எழவில்லை. சிதம்பரநாதனே ஒரு குழந்தையைப் போல இருந்தார். குழந்தைக்குத் தோன்ற வேண்டிய விசித்திரமான எண்ணங்கள் அவருக்குத் தோன்றின. தெருப் பிள்ளைகளுடன் பலீன் சடுகுடுவிலிருந்து பட்டம்வரை அவர் கலந்து கொள்ளாத விளையாட்டுக்கள் இல்லை. வேளாவேளைக்குச் சாப்பிட வராமல் அவர் மனைவியைப் படுத்தி வைத்த பாடு! அப்பொழுதெல்லாம் செல்லம்மாள் தன் கணவனை ஓர் அடம் பிடிக்கும் குழந்தையாகவே பாவித்தாள். பொறுமையுடனும், திறமையுடனும் அவருடன் சமாளித்து வாழ்ந்தாள்.

இந்த வீட்டுக்கு வந்த சில வருஷங்களில் கணவன் படுக்கையில் விழுந்த பிறகுதான் செல்லம்மாளுக்குத் தன் நிலைமை புரிய ஆரம்பித்தது. அதுவும் பதினைந்து நாட்களாக அவர் உடல் நிலையில் படிப்படியாக மாறுதல்கள் தோன்றி, அவர் பிழைக்க மாட்டார் என்கிற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது.

உத்திரத்துக் குருவிகளில் ஒன்றாகிய ஆண் குருவி ஏனோ நான்கு நாட்களாக இரை தேடப் போகவில்லை. பெண் சிட்டு விர்ரென்று பறந்து சென்று என்னென்னவோ கொண்டு வந்தது. அதற்கு வாயில் ஊட்டிப் பாடுபட்டது. செல்லம்மாளும் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு டாக்டர் வீட்டுக்கு நடை நடையாக நடந்தாள். கோபுர வாயிலில் நின்று தனக்கு மாங்கல்யப் பிச்சை தருமாறு தெய்வத்தை இறைஞ்சினாள்.

''செல்லம்! செல்லம்! எனக்காக நீ இப்படி அலைகிறாயே!'' சிதம்பரநாதன் மிகுந்த வேதனையுடன் குளறிக் குளறிப் பேசினார்.

''உங்களுக்காக அலைகிறேனா? இல்லை. எனக்காகவே நான் அலைந்து கொள்கிறேன். நீங்கள் வேறு, நான் வேறு என்கிற எண்ணமே எனக்கு ஏற்பட்டதில்லை. அந்த எண்ணம் நமக்கு ஒருவேளை குழந்தைகள் இருந்திருந்தால் ஏற்பட்டிருக்கலாம். நானும், நீங்களும் ஒன்றுதான்....''

மேலே இருந்த குருவிகளுக்கு மனித பாஷை புரிந்திருக்க வேண்டும். இரண்டும் இமே தங்களைப் போல் தனிமையில் வாடும் இவர்களைப் பார்த்துப் பரிதாபமாகக் கத்தின. அந்தப் பெண் சிட்டின் ஓலத்தைக் காது கொண்டு கேட்க முடியவில்லை.

'இது வேறு தலைவேதனை....கண்ணறாவி'' என்று அலுத்துக் கொண்டார் அவர். ''அப்பொழுதே சொன்னேன், இதுகளை அடித்து விரட்டு என்று.... ஒன்றுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது.'' சிதம்பரநாதன் அண்ணாந்து பார்த்துச் சொல்லி விட்டுத் தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

செல்லம்மாளும் உயரப் பார்த்தாள். பெண் சிட்டின் புலம்பல் அவளுக்கு வரப் போகும் ஏதோ ஒன்றை உணர்த்தியது.

''செல்லம்! நீ தனியாக என்னை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறாயே. என் தம்பியை வரச் சொல்லி எழுதிப் போடேன்.'' கணவர் கூறி முடிப்பதற்குள் செல்லம்மாள் மைத்துனருக்குக் கடிதம் எழுதி விட்டாள்.

ஊரின் நியதிக்குக் கட்டுப்பட்டோ அல்லது பாசத்தினாலோ செல்லம்மாளின் மைத்துனர் வந்து சேர்ந்தார்.

தம்பியும், தமையனும் ஒருவரையொருவர் அணைத்துப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். தன் தோளிலும் மார்பிலும் அணைத்து வளர்த்தவன் தன் இறுதிக் காலத்தில் தன்னைக் காக்க வந்து விட்டான் என்று தான் இறுமாந்தார் சிதம்பரநாதன்.

தம்பியின் பாசத்தையும் மீறிக் கொண்டு ஆசை என்கிற விஷம் அந்த வீட்டில் பரவிச் சூழ்ந்தது.

தமையனின் பாத்திரங்கள், பண்டங்கள், மன்னியின் உடம்பில் இருக்கும் நகைகளின் மதிப்பு இவற்றை எடை போட்டது.

'அண்ணா என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்? வந்ததிலிருந்து அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே.....அவர்தான் நோயில் அவஸ்தைப்படுகிறார். மன்னி சொல்லக் கூடாதா? எல்லாவற்றையும் கணக்குப்போட்டுப் பார்த்தால் ஏழெட்டாயிரம் தேறும் போல் இருக்கிறதே! இவ்வளவும் யாருக்கு?''

தமக்குத் தானே விடை காண முயன்று அந்த முயற்சியில் தோற்றுப் போனார் தம்பி.

செல்லம்மாள் ஏற்கனவே யந்திரமாகி விட்டிருந்தாள். கணவருக்கு ஆகாரம் கொடுப்பது, படுக்கை மாற்றுவது, டாக்டர் வீட்டுக்கு ஓடுவது. எப்படியும் அவர் பிழைத்து விட வேண்டும் என்கிற நம்பிக்கையின் அஸ்திவாரத்தில் அவள் தன் மனத்துக்குத்தானே உறுதி கூறித் தன்னையே அவருக்குப் பதிலாக அர்ப்பணிக்கத் தயாராகி விட்டாள்.

மன்னி காப்பி கொடுக்கும்போது கேட்கலாம் என்று மைத்துனர் இருந்தார். பிறகு சாப்பிடும்போது கேட்டு விடுவது என்று தீர்மானித்திருந்தார். ஏனோ, சில விஷயங்கள்

அது எத்தனை முக்கியமாக இருந்தாலும் மனத்திலிருந்து வெளிவரத் தயங்குகிறது.

அண்ணாவுக்கு ஒரு குழந்தை இருந்தால் இத்தனை சொத்தும் யாருக்கு என்று தம்பி யோசித்திருப்பாரோ என்னவோ? நாற்பது வருஷங்களாக அவர் நிழல் போல் இருந்த மன்னியின் அன்பை, தியாகத்தை, கடமையை அவர் தூக்குச் சமானமாக்கி விட்டார். "இத்தனை சொத்தும் அவளைச் சேரப் போகிறது. அவர் கண்ணை மூடிவிட்டால் அவள் இதை யெல்லாம் சுருட்டிக் கொண்டு தன் அண்ணன் வீட்டுக்குப் போய் விடுவாள்...."

அண்டை அயலில் இவ்விதம் பேசித் தனக்கு ஆதாவு தேடிக் கொள்ள முயன்றார் தம்பி.

அன்று விடிந்ததிலிருந்து செல்லம்மாளுக்கு வேலையே ஓடவில்லை.

குருவிக் கூட்டிலிருந்து ஆண் குருவி போய் விட்டது போதும். பெண் சிட்டின் கதறல் அவள் வயிற்றைக் கலக்கியது. பிரிவின் துன்பத்தின் சாயலை அதன் வேதனையில் கண்டாள் செல்லம்மாள்.

நேற்று வரை பேசி வந்த சிதம்பரநாதன் மௌனமாகி விட்டார். உலக விஷயங்களுக்கு அப்பால் அவர் உள்ளம் உறவு பூண்டிருந்தது.

"என்னை இப்படி என்னுடன் பேச மாட்டேன் என்கிறீர்களே...." — உள்ளுணர்வு சிறிது உலகத்தின் மீது திரும்பியது. சிதம்பரநாதன் மனைவியின் வேதனைக் குரலை உணர்ந்திருக்க வேண்டும். கீழே கிடந்த தம் கையைத் தூக்கிக் கோபுரம் இருந்த திசையின் பக்கம் சுட்டிக் காட்டினார்.

'கடவுள் உன்னைக் காப்பார்' என்று கூறுவதாகச் செல்லம்மாள் புரிந்து கொண்டாள்.

அவருக்காக அவளும், அவளுக்காக அவருமாக உலகத்துடன் ஒட்டி உறவு பூண்டு வாழ்ந்த மனிதப் பட்சிகளில் ஒன்றை ஆண்டவன் தன்னிடம் அழைத்துக் கொண்டபோது உத்திரத்துக் குருவியின் கதறல் செல்லம்மாள் வேதனையில் கரைந்து போயிற்று.

அப்புறம் மைத்துனரின் ஆயிரம் ஏச்சுப் பேச்சுக்கள், கேள்விகள் இவற்றைச் சமாளித்துச் செல்லம்மாள் கணவரின் கிரியைகளைச் செய்து முடித்தாள்.

அவள் தனி. அந்தப் பெண் சிட்டு அந்தக் கூட்டைக் காலி செய்து விட்டுக் கட்டுப்பாடற்ற வானவெளியில் ஜிவ்வென்று பறந்து செல்வதைக் கவனித்த செல்லம்மாள், வானத்தின் கீழ் குடியிருக்கும் இந்த உலகத்தை வெறித்துப் பார்த்தாள்.

ஆசைகள், விருப்புக்கள், வெறுப்புக்கள் முதலிய பல கட்டுப்பாடுகள் கொண்ட சமூகத்தில் அவள் தனியாக வாழ்ந்தாக வேண்டும். அப்படி வாழ, ஒவ்வொரு விநாடியையும் கழிக்க அவளுக்குப் பணம் தேவையாகத்தான் இருந்தது. குருவியைப் போல அல்ல அவள் வாழ்க்கை.

மைத்துனரின் கோபத்துக்கும், வெறுப்புக்கும் ஆளான செல்லம்மாள் தன் உடைமைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு பிறந்த வீடு செல்ல வண்டியேறிய போது, அதை ஒரு பெரிய துரோகமாக அவள் மைத்துனர் கருதியிருந்தால், மனித இனத்தைவிடப் பறவை இனமே மேலென்று அந்தப் பேதை கருதலாம் அல்லவா?

மின்னல் வெட்டும் நேரத்தில் நடந்து விட்ட நிகழ்ச்சி அது. ஆனால், அந்தக் கண நேரத்துக்குள் வேதாசலத்தின் கண்டு விரலேயல்லவா போய் விட்டது. நினைக்க நினைக்க நெஞ்சு ஆறவில்லை இராமலிங்கத்துக்கு. வேதாசலம் கவனக் குறைவுள்ள ஒரு தொழிலாளி அல்ல. இருந்தும் ஏன்...? ஏதோ நிகழ வேண்டிய வேளை நிகழ்ந்து விட்டது.

திருகாணி முதல் பம்பு செட்டுக்கள் வரையில் பலவிதமான இயந்திரங்களை ஆக்கும் அந்தப் பெரிய தொழிற்சாலையில் நூற்றுக் கணக்கான பேர் வேலை பார்த்து வந்தார்கள். அன்று அத்தனை பேரும் வீட்டில் அந்த விபத்தைப் பற்றி விவரிக்காமல் இல்லை. 'நல்ல வேலை ஆள். போதாத காலம் அப்படி நிகழ்ந்து விட்டது. ஒரு விரலையே சீவித் தள்ளி விட்டது இயந்திரம்.'

இராமலிங்கம் செங்கமலத்திடம் விஷயத்தைக் கூறியதும் அவள் பார்வதிக்காக மிகவும் வருத்தப்பட்டாள். 'பாவம் அக்கா என்னமா வருத்தப்படறாங்களோ? நம்மாலே என்ன முடியுது? கிட்டத்திலே இருந்தாலும் போய் வரலாம்'' என்று கூறி முடிக்கு முன் இருமல் தொண்டையை அடைத்துக் கொண்டது. இராமலிங்கம் விரைந்து சென்று வெந்நீர் கொண்டு வந்தான்.

''செங்கமலம்: நீ ஒவ்வொரு வாட்டியும் இருமும்போது என்னை உலுக்குது. என்னவோ போம்மா இதெல்லாம் நமக்கு வர வேண்டிய வியாதி இல்லே. உன்னை ஆசுபத்திரியிலேயே உடனும்னு நானும் ஆன மட்டும் பார்க்கறேன். எங்கே போ....'' என்று துயரம்தோய்ந்த குரலில்கூறினான்.

இருமல் சற்று நின்றதும், 'என்னவோ போங்க, என்னாலே உங்களுக்கு நிம்மதியே இல்லே'' என்று கூறும்பொழுதே அவளுக்கு அழுகை வந்து விட்டது.

''இதோ பாரு செங்கமலம்! இதோ இந்த வார்த்தை தான் என் நிம்மதியைக் குலைக்குது. உனக்கு உடம்பு நல்லாவணும்னு நான் எவ்வளவு நெனச்சிக்கிட்டிருக்கேன். நீயாறு இப்படிப் பேசறே. என் கையிலே பணமிருந்தால் நீ இத்தனை பேசறது வரை சும்மா இருக்க மாட்டேன். அந்த டாக்டர் சொன்ன அன்னிலேருந்து, என் மனசு என்னமா அடிச்சிக்கிட்டிருக்குது தெரியுமா?''

உண்மைதான். செங்கமலத்தை ஆஸ்பத்திரியில் சேர்த்தால் அவளுடைய காச நோய் வெகு விரைவில் பறந்து போகும். ஆனால் அதற்குப் பணம்? இராமலிங்கத்துக்குச் செங்கமலத்தின் மேல் கொள்ளை ஆசை இருந்தது. அதில் நூற்றில் ஒரு பங்கு பணமிருந்தாலும் போதும், அவளை ஆசுபத்திரியில் சேர்த்து விடுவான். அந்த விஷயத்தில் அவனுக்குத் தன் மீதே மிகவும் எரிச்சல்.

வேதாசலம் திரும்பி வர ஒரு வாரம் ஆயிற்று. விரல் போனது போனதுதான்; உயிராவது தங்கிற்றே என்பதில்தான் மகிழ்ச்சி. வேலை செய்யத் தகுதி இல்லாமலொன்றும் ஆகி விடவில்லை. எல்லாவற்றிலும் ஆச்சரியப்பட வேண்டிய விஷயமாக இராமலிங்கத்துக்குத் தோன்றியது வேதாசலத்துக்கு நானூறு ரூபாய் நஷ்ட ஈடு கிடைத்தது தான்.

வேதாசலத்தின் விரல் போனதற்காகத் தொழிலாளர் இன்சூரன்ஸிலிருந்து அவனுக்கு



சுட்டு விரல்

நா. அனந்தகிருஷ்ணன்

நாநூறு ரூபாய் கிடைத்தது பலருக்கும் வியப்பளிக்காமல் இல்லை. விபத்துக்கூட நன்மைக்கே என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

வீட்டுக்கு வந்ததும் செங்கமலத்திடம் செய்தியைக் கூறினன் இராமலிங்கம். அவளால் நம்பவே முடியவில்லை. ''தேவலையே! எல்லாம் நல்லதுக்குத்தான் என்பாங்களே, அதுமாதிரி இருக்குதே!'' என்றுள் அவள்.

அன்று இரவு இராமலிங்கத்தால் உறங்க முடியவில்லை. வேதாசலத்துக்குக் கிடைத்த நாநூறு ரூபாயைப் பற்றியே மீண்டும் மீண்டும் எண்ணியது அவன் மனம். விபத்து நேர்ந்த சமயம் இதை நினைத்துப் பார்த்திருப்பாளு வேதாசலம்? இதைத்தான் அதிருஷ்டம் என்கிறார்கள். தனக்கு அந்த நாநூறு ரூபாய் கிடைத்திருந்தால்?... கிடைத்திருந்தால் என்னென்ன செய்வான். முதல் வேலை செங்கமலத்தை ஆசுபத்திரியில் கொண்டு சேர்ப்பான். அவளுக்குப் பாலும் பழமும் வேண்டிய அளவு வாங்கிக் கொடுப்பான். ஆமாம்! செங்கமலம் நன்றாக இருக்க வேண்டும். அவள் எத்தனை ஆசைப்பட்டுத் தன்னை மணந்து கொண்டாள். கல்யாணம் ஆன புதிதில் அவள் எத்தனை ஆரோக்கியத்துடன் இருந்தாள். இராமலிங்கத்துக்குத் தன்மீதே எரிச்சலாக வந்தது. தம்பதிகள் ஒருவர் இரத்தம் மற்றவருடையதுடன் கலக்கும் என்பார்களே. தன் கெட்ட இரத்தம் சேர்ந்ததால் செங்கமலத்துக்கு உடம்புக்கு வந்து விட்டதோ என்னவோ... கற்பனையை நிறுத்தினன். ஆ! மறுபடியும் அந்த நாநூறு ரூபாயைப் பற்றிய சிந்தனை எழுந்தது. ஆமாம். அது தனக்குக் கிடைத்தால் தேவலை. அதற்கு என்ன செய்வது? கையைக் காலை முறித்துக் கொள்வதா? தன்முயிருக்கிறதே. ஏன்? முறித்துக் கொண்டால் என்ன? கையையும் காலையும் முறித்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை. ஒரு விரலை மட்டும் வேதாசலம் மாதிரி... இழந்தால் போதும். கிடைக்கிற பணத்தில் செங்கமலத்தை ஆசுபத்திரிக்கு அனுப்பலாம். ஆ! அது நல்ல யோசனை..விரலை இழப்பதால் அதிக நஷ்டமில்லை. இதைச் செங்கமலத்திடம் கூறிவைக்கலாம். அவள் என்ன சொல்கிறுள், பார்க்கலாம்.

''செங்கமலம்!''

''என்ன?''

இராமலிங்கம் தயங்கினன். செங்கமலம் இந்தத் திட்டத்தை ஏற்காவிட்டால்?...ஏற்க மாட்டாள். செங்கமலத்துக்கு மட்டும் அவனிடம் ஆசை குறைவா? அவன் விரலை இழப்பதற்கு அவள் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டாள். வேண்டாம், செங்கமலத்திடம் இதைச் சொல்லவேண்டாம்.

இராமலிங்கம் தயங்கிய அந்த ஒரு கணத்தில் சமாளித்துக் கொண்டு விட்டான்.

''ஒன்றுமில்லை. சும்மாத்தான் உன்னைக் கூப்பிட்டேன்'' என்றுன் அவன்.

செங்கமலம் உள்ளே போய்விட்டாள். போகும் போது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். வியாதி அவளை எப்படி உருக்கி விட்டது? அவன் தனக்குள் உறுதி செய்துகொண்டான். எப்படியும் பழைய செங்கமலத்தைப் பார்க்க வேண்டும். அவளை ஆசுபத்திரிக்கு அனுப்பினால்தான் அது நிறைவேற முடியும்.



மறுநாள் காலை தொழிற்சாலையில் இருந்தபொழுது இராமலிங்கத்தின் இதயம் 'படக்படக்' என்று அடித்துக்கொண்டது. ஒவ்வொரு கணமும் தனக்கு ஏதோ விபத்து நிகழப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வேலையில் மனம் ஓடவில்லை. சகதொழிலாளி முத்துசாமி ''என்ன அண்ணே! எங்கேயோ கவனமா இருக்கீங்க! வேதாசலம் கதை ஆயிடப் போவுது. அவனுக்கு விரலோட போச்சு. நமக்கெல்லாம் வந்தா ஆளையே அடிச்சிடும்'' என்று கூறிய பொழுது 'கருக்'கென்று தைத்தது இராமலிங்கத்துக்கு! தன் எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல் முத்துசாமி பேசியதைக் கேட்டு அவன் நடுக்கிட்டான்.

மனம் இப்படியும் எண்ணியது. முத்துசாமி சொல்வது போல் ஆகிவிட்டால் வட்டிக்கு ஆசைப்பட்டு முதலையே இழந்து விட்டால்,?... அப்புறம் செங்கமலத்துக்கு யார் கதி? அவன் அண்ணனும் தம்பியுமா அவளைக் கவனிக்கப் போகிறார்கள்? அது ஒருநாளும் இல்லை.

மாலை வீடு திரும்பிய பொழுது இராமலிங்கம் மிகவும் சோர்ந்து காணப்பட்டான். அவன் மனத்தில் ஏற்பட்ட பெரிய போராட்டம் அவனுக்குச் சரியான தலைவலியை உண்டு பண்ணி விட்டிருந்தது.

''என்னமோ போல் இருக்கீங்களே ஏன்?'' என்று செங்கமலம் கேட்டபொழுது மடமடவென்று எல்லாவற்றையும் கொட்டி விடலாமா என்று எண்ணினான் அவன். அவள் சொல்லும் முடிவை ஏற்றுக் கொள்வது என்றும் கருதியது அவன் மனம். ஆனால் அவன்



''சுந்தர் நூறு ரூபாய் கடனுகக் கேட்கிறான். நம்பிக் கொடுக்கலாமா?''

''தாராளமாய் நம்பலாம். உடனே கொடுத்துவிடுங்கள்?''

''இல்லா விட்டால்....'

''அவன் என்னை வந்து கடன் கேட்பானே!''


தன் உயிரைப் பணயம் வைப்பதை அவள் ஒருநாளும் ஏற்க மாட்டாள் என்ற நினைப்பு அவனுக்கு வாய்ப்பூட்டுப் போட்டது.

நாட்கள் செல்லச் செல்லச் செங்கமலத்தின் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. தன் முன்னாலேயே அவள் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு குமுறியது இராமலிங்கத்தின் உள்ளம். விபத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டுமென்று துணிவோடு எண்ணிய மனம் தொழிற்சாலை சென்று வேலை தொடங்கியதும் ஏனோ தளர்ந்து விட்டது. இயல்பாக எல்லோரிடமும் உள்ள உயிராசையா? அல்லது எதிர்பாராத விதமாகத் தான் உயிர் இழந்தால் செங்கமலம் நிர்க்கதியாகி விடுவாள் என்ற நினைப்பா? அல்லது ஏமாற்றிப் பணம் தேடக் கூடாது என்ற நினைப்பா? இதில் எது தன்னைப் பின்னுக்கு இழுத்தது என்று புரியவில்லை அவனுக்கு. தன் மீது அளவு கடந்த வெறுப்பு ஒன்றுதான் மிஞ்சியது.

அன்று காலை வேலைக்குக் கிளம்பியபொழுது என்ன தோன்றியதோ இராமலிங்கத்துக்கு. தெரு முனையிலே உள்ள பிள்ளையார் கோவிலைக் கடக்கும் பொழுது ஒரு கணம் நின்றான். காலிலுள்ள செருப்பைக் கழற்றி விட்டு அங்கேயே நின்று கொண்டு கோவிலுக்குள்ளே தன் பார்வையைச் செலுத்தினான். 'பிள்ளையாரப்பா, இன்று துணிந்து விட்டேன். எனக்குத் தெரியும் இது ஏமாற்று என்று. ஆனாலும் வேறு வழியில்லை. உயிர் போகாமல் காப்பாற்று' என்று மனத்துக்குள் பிரார்த்தித்தான். மீண்டும் செருப்பை மாட்டிக்கொண்டு விடுவிடுவென்று நடந்தான்.

ரெக்ஸ்

ஜெல்லி



இன்பமான காட்சி...மிகுந்தசுவை...மிகவும்நல்லது!

இது சுவை மிகுந்தது. பழங்களின் மணம் கொண்டது. எளிதில் தயாரிக்கக்கூடிய ஒரு பண்டம். ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்களை வெந்நீரில் கலந்தால் போதும். பிறகு போதுமான அளவு குளிர்ந்த ஜலம் அதோடு சேர்த்து அந்தக் கலவையை ஒரு பைண்டுக்கு, (அதாவது 20 அவுன்ஸ்) சமமாக ஆக்கிக்கொள்ளுங்கள். அதை அச்சியில் ஊற்றி, ஐஸின் மேல் ஜெல்லியை உறைய வையுங்கள்.

அது குடும்பத்தார் விரும்பும் போஷகமளிக்கும் லேசான பண்டம். வியாதியிலிருந்து சுகமடைந்தவருக்கும் கூட நல்லது.

ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்கள் 6 சுவைகளில் கிடைக்கின்றன. ராஸ்பெரி, ஸ்ட்ராபெரி, லெமன், பைனபிள், ஆரஞ்சு, செர்ரீ.



கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

தென் இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்: பூரி & கம்பெனி லிமிடெட்

இராமலிங்கம் காத்திருந்த வேளை வந்தது. அக்கம் பக்கத்தில் யாருமில்லை. சுழலும் அந்தச் சக்கரத்தின் அருகே சென்றான். அவன் கண் முன் 'லொக் லொக்' என்று இருமும் செங்கமலத்தின் உரு தெளிவாகத் தெரிந்தது. சக்கரத்தின் அருகே கையைக் கொண்டு போனான்.

'ஐயோ!' என்று கத்தியபடி இரத்தம் வழியும் இடத்தை அழுத்திக் கொண்டு அங்கேயே உட்கார்ந்தான். அவனுடைய வலது கையில் சுட்டுவிரலில் உள்ள இடம் மொட்டையாக இருந்தது. 'குபுகுபு' என்று இரத்தம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

'ஐயோ' என்ற ஒலி கேட்டு அந்த செக்ஷனில் உள்ள இயந்திரங்களின் ஸ்விட்சை யாரோ தட்டி விட்டார்கள். இயந்திரங்களின் பெருத்த ஓசை மங்கி மங்கி நின்றது. ஆனால் அங்கு வந்து கூடிய பலரின் பேச்சுக் குரல் வரவரப் பெரிதாயிற்று. இதற்குள் 'ஒர்க்ஸ் மானேஜரின்' அதிகாரக் குரல் கேட்டது! "என்னப்பா ஒரே அமர்க்களம். என்ன ஆக்ஸிடெண்டா? யாரு. அடே இராமலிங்கமா? இவனுக்கு எப்படிப்பா ஏற்பட்டது?"

'அந்த வீலுக்கு ஆயில் போடப் போனானுங்க ஸார். அதுலே கைபட்டு விரல் போயிடுச்சு!" என்று யாரோ கூறினார்கள்.

'இதோ பாருப்பா வெரலு. அதோ அங்கே கிடந்தது. தெறிச்சுப் போய் விழுந்திருக்குது" என்று கூறியபடி அந்தச் சுட்டு விரலை, இருபதடி தாண்டிப் போய் விழுந்த அந்த விரலைக் கொண்டு வந்தான் ஒருவன். எல்லோரும் அதிசயப் பொருளைப் பார்ப்பது போல் வாங்கி வாங்கிப் பார்த்தார்கள்.

இதற்குள் இராமலிங்கத்துக்கு மயக்கம் போட்டு விட்டது.

இராமலிங்கத்துக்கும் நஷ்டஈடு வந்தது. வேதாசலத்தை விட அதிகமாகவே வந்தது. வேதாசலத்தைவிட அவனுக்குச் சம்பளம் அதிகமானதால் அதற்கேற்றபடி நஷ்டஈடும் அதிகம் கிடைத்தது.

இராமலிங்கம் கொஞ்சமும் தாமதிக்கவில்லை. செங்கமலத்தை ஆசுபத்திரியில் சேர்த்தான். செங்கமலம் வாய் விட்டே கேட்டு விட்டாள். "ஏங்க, பணம் வேணுமின்னறதுக்கா நீங்களே இப்படிச் செஞ்சீங்களா?" இராமலிங்கம் சிரித்தபடி "சுத்த அசடா இருக்கியே. அதுக்காவ யாரும் இப்படிச் செய்வாங்களா?" என்று கேட்டுப் பேச்சை மாற்றினான்.

செங்கமலத்துக்கு மெல்ல மெல்லக் குணமாகிக் கொண்டு வந்தது. இராமலிங்கத்துக்கு உள்ளூற மகிழ்ச்சிதான். விரலை இழந்தது வீண் போகவில்லை.

அந்த விபத்தை நினைத்துப் பார்க்கப் பார்க்க இராமலிங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் அந்த விபத்தை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டானா அல்லது தற்செயலா? தான் அந்த இயந்திரத்தின் பக்கம் போனது எண்ணெய் போடத்தான். ஆனால் அப்பொழுது மனத்தில் என்னென்னவோ எண்ணங்கள் தோன்றின. அதுவும் உண்மை. வேண்டுமென்று கையைக் கொடுத்தானா? அல்லது தற்செயலாக நிகழ்ந்ததா? மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.


தன்னிடமிருந்து விடுபட்டுப் போன அந்தச் சுட்டு விரல் எங்கோ இருந்து கொண்டு இவன் ஏமாற்றிப் பணம் பெற்றான் என்று இவனைச் சுட்டிக்காட்டிக் கூறுவது போல் பிரமை தட்டியது அவனுக்கு.

அவனால் நிர்மாணிக்க முடியவில்லை. அந்த விபத்து தற்செயலானதா, வரவழைத்துக் கொண்டதா? அவனுக்கு நிச்சயமில்லை.

செங்கமலம் பூரண குணம் அடைந்து பழைய மெருகோடு விளங்கினாள். இப்பொழுது அவளை அடையாளம் கண்டு கொள்வது எளிதாயில்லை. அவ்வளவு ஆரோக்கியத்தோடு இருந்தாள்.

உண்மை இதுதான். விபத்தை வரவழைத்துக் கொள்ள அவன் எண்ணியது நிஜம். அந்த எண்ணம் அவன் மனத்தில் ஆழத்தில் வேரூன்றியிருந்ததும் உண்டு. ஆனால் விபத்து நடந்த கணம் அவன் வெளிப்படையாக அவ்வாறு எண்ணிக்கொண்டு யந்திரத்தின் அருகே செல்லாவிடினும், யந்திரத்தில் எண்ணெய் போடத் தொடங்கியதும் அவனையறியாமலே அவன் மனம் செயல்பட்டு விட்டது. ஆகவே விபத்து தற்செயலானது தான். ஆனால் இராமலிங்கத்திடம் இதை யார் எடுத்துச் சொல்வார்கள்?

அந்த விரல் தன்னையே சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதாகத்தான் அவன் இன்னும் எண்ணிக் கொண்டிருக்கிறான்.


மதுரை அருகில் வைகை நதியின்
மேலுள்ள கான்கிரீட் பாலம்
ஏ சி சி & சங்கர் பிராண்டு சிமிண்டுகள் சுபிட்சமான இந்தியாவை
உருவாக்க உதவுகின்றன
மணிமுத்தாறு அணை, கல்லிடைக்குறிச்சி
ACC
Symbols of top quality cement
தண்ணீர் டவர்
ஆல்வேயின் அருகில்
தி சிமிண்ட் மார்க்கெடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிட்.,
தி அஸோஸியேடெட் சிமிண்ட்
கம்பெனீஸ் லிட்.,
தி இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட்
ACC-698 A TAM

பிரெஞ்சு காபியில்
தலை சிறந்தது





ருசிக்கச் சிறந்த வகையில் கலவை செய்த ப்ரூக் பாண்ட் கபே பிராண்டு பிரெஞ்சு காபி இப்பொழுது எங்கும் கிடைக்கும். நறுமணத்தையும் சுவையையும் காக்க இவை ஸெலபோன் பைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. பிரெஞ்சு காபியில் நல்ல மணம், சுவை இவற்றைப் பெற ப்ரூக் பாண்ட் காபியையே விரும்பிக் கேளுங்கள். இதுவே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குச் சிறந்தது.

ப்ரூக் பாண்ட்
கபே பிராண்டு பிரெஞ்சு காபி

JWTBB 404

புதுவெள்ளம்

அத்தியாயம் இரண்டு

சுரங்கத்தினுள்ளே...

சுரங்கத்துக்குள்ளே இறங்கிச் சென்ற இயந்திரப் பெட்டி அதன் அடித்தளத்துக்கு வந்து சேர்ந்தவுடன் பலமான ஓசையுடன் நின்றது. பெட்டிக்குள்ளிருந்த தொழிலாளர்கள் இடித்துப் புடைத்துக் கொண்டு வெளியில் வந்தனர். அவர்களுடைய வேகத்தால் வெளியில் தள்ளப்பட்ட முருகையன், தனக்கு உதவியாக வந்த பயிற்சியாளனைச் சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தான்.

இருளில் முதலில் மனித உருவங்களே தென்படவில்லை. மின்மினிப் பூச்சிகளைப் போல் விளக்கொளிச் சுடர்கள் மட்டிலும் காற்றில் மிதந்து செல்வது தெரிந்தது. அந்தத் திசையில் ஓடிச் சென்று, தன்னுடைய கைவிளக்கை உயர்த்திப் பிடித்து, தென்பட்டவர்களின் முகங்களை உற்று நோக்கினான். எல்லா முகங்களுமே ஒன்று போல் தெரிந்தன. இரும்புத் தொப்பி, அதற்குக் கீழே கரி படிந்த முகம், பளிச்சென்று தெரியும் இரு கண்கள்....மனிதனுக்கு மனிதன் வித்தியாசத்தையே காணோம்.

அதற்குள் மற்றவர்கள் அனைவருமே இருளுக்குள் கரைந்து போய் விட்டார்கள். மின்மினிப் பூச்சிகளின் கூட்டம் ஏதோ ஒரு திசையில் திரும்பி விட்டது. அந்த இருள் நிறைந்த உலகில் ஒரே ஒரு சின்னஞ் சிறு விளக்கு, முருகையனின் கை விளக்கு — 'மினுக் மினுக்'கென்று கண் சிமிட்டியது.

எந்தப் பக்கம் போவது? எப்படிப் போவது? தனக்குத் துணையாக வந்தவனைக் கூவி அழைக்கத் துடித்தான் முருகையன். ஆனால் முன்பே அவனுடைய பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளாதது எவ்வளவு தவறு என்பது இப்போதுதான் விளங்கியது.

கீழே அவனை இறக்கி வந்த பெட்டி, அதில் ஏறிக் கொள்ளுவதற்கு வேறு ஆட்கள் இல்லாததால், மீண்டும் பயங்கரமான ஓசையுடன் மேலே கிளம்பியது. ஓடிப் போய் அதில் ஏறிக் கொள்வதற்கும் வழியில்லை.

ஏதும் புரியாமல் சில விநாடிகள் அதே இடத்தில் நின்றான். இயல்பாகவே நெஞ்சில் உறுதி உள்ளவன் முருகையன். ஆனால் ஏனோ காரணமில்லாத ஒரு பயம் அவனைச் சிறிது சிறிதாகச் சூழத் தொடங்கியது. கணப்பொழுது யோசனை செய்து விட்டு, மற்றவர்கள் சென்ற திசையில் மெதுவாக அடி யெடுத்து வைத்தான்.

பத்தடி எடுத்து வைப்பதற்குள் ஓரிடத்தில் அவனுடைய வலது கால் 'சதக்' கென்று சேற்றில் பதிந்தது. விளக்கினால் தரையைப் பார்த்தான். கருஞ்சேற்றுக்குள்ளிருந்து அந்தக் காலை இழுத்து உதறி விட்டு மேலே நடக்க வேண்டியிருந்தது. சுரங்கத்துக்குள்ளே நீரோடைகளும் சதுப்பு நிலப் பகுதிகளும்கூட இருந்தன போலும்.

மேலும் சிறிது தூரம் நடந்தவுடன், இடது காலின் மேல் ஏதோ வழவழவென்று ஊர்ந்து செல்வது போல் இருந்தது. 'பாம்பு! பாம்பு!' என்று அலறி விட்டது அவன் மனம். துள்ளி ஓடிச் சென்றவன் எங்கோ தலையை மோதிக்



கொண்டு, மெல்லத் திரும்பிப் பார்த்தான். இதற்குள் கண்களும் ஓரளவு இருளுக்குப் பழக்கப்பட்டு விட்டன.— பயந்து கொண்டே அவன் உற்றுப் பார்த்தான்.

கருநாகப் பாம்புதான்! சந்தேகமே இல்லே! எண்ணெய் தடவிய உளுந்தின் நிறத்தில் மின்னியபடியே அது ஊர்ந்து சென்றது. ஒரு கையால் விளக்கை இறுகப் பற்றிக் கொண்டு, மறு கையில் இருந்த கழியால் ஓங்கித் தன் பலம் கொண்ட மட்டும் அடித்தான் முருகையன். அதற்காகத்தான் அவன் கையில் கழியைக் கொடுத்திருக்கிறார்களோ என்னவோ !

'ணங்!' என்ற ஓசையுடன் கழி அவன் பக்கமே திருப்பிக் கொண்டு வந்தது. ... என்ன? நீண்ட இரும்புக் கயிறு அது! தண்ணீர் இறைக்கும் தாம்புக் கயிறு போன்ற இரும்புக்கம்பி, இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையிலும், தன்பாட்டில் எங்கோ நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. இப்போது தனக்குள் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டான் முருகையன்.

''தம்பி! நீங்க இங்கேயா இருக்கிறீங்க...?''

குரல் வந்த திக்கில் ஒளியும் தெரிந்தது. முருகையன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டு அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். தனக்குப் பயிற்சியளிக்க வந்தவனாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

''உங்கள் பெயரென்ன? தெரிந்திருந்தால் முன்பே கூவி அழைத்திருப்பேன்!''

''நானும் உங்களைத் தேடிப் பார்த்திட்டுத்தான் வர்றேன்'' என்றான் அவன். ''என் பெயர் கருப்பையா.''

இடத்துக்கும் தொழிலுக்கும் ஏற்ற பெயர்தான் என்று நினைத்துக் கொண்டு அவனைப் பின்பற்றி நடந்தான் முருகையன். இருவரும் வெகு நேரம் வரையில் பல இடங்களில் திரும்பித் திரும்பி நடந்தார்கள். வழி தெரியாமல் ஒரே இடத்துக்குத் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருப்பது போல் பிரமை ஏற்பட்டது முருகையனுக்கு. ஆனால் திடீர் திடீரென்று மாறி வந்த வெப்ப தட்ப சூழ்நிலைகளைக் கொண்டு அவன் ஒருவாறு மனம் தேறினான். சில இடங்களில் ஒரே கதகதப்பாக இருந்தது; சில இடங்களில் சில்லென்று காற்று வீசியது; இன்னும் சில இடங்களில் சொட்டுச் சொட்டாக மேலிருந்து தண்ணீர் வடிந்து உடலை நனைத்தது.

'புதிய அநுபவம்..... மிக மிகப் புதிய அநுபவம்!' என்று எண்ணிப் பரவசம் அடைந்தான் அவன். ஆனால் வெகு தொலைவு நடந்தபிறகும் அவர்கள் நிலக்கரியை வெட்டி எடுக்கும் இடத்துக்கு வந்து சேரவில்லை. முருகையனுக்குச் சந்தேகம் வந்து விட்டது.

''ஆமாம், இப்படியே நாம் போய்க் கொண்டிருக்கிறோமே, நிலக்கரி எங்கே தான் இருக்கிறது?'' என்று கேட்டு வைத்தான் முருகையன்.

கருப்பையா பதில் அளிக்கவில்லை. கலகலவென்று சிரித்தான்.

''தம்பி! இவ்வளவு நேரமும் நம்ப நிலக்கரி மேலேதான் நடந்துக்கிட்டு வருகிறோம். நம்ப இப்போ நிலக்கரிக்கு உள்ளே, நிலக்கரிக்கு வெளியிலே, நிலக்கரிக்கு மேலே, நிலக்கரிக்குப் பக்கத்திலே, நிலக்கரியோட ஒண்ணாத்தான் இருக்கிறோம். திரும்பின பக்கமெல்லாம் நம்மைச் சுற்றி அதுதான் இருக்குது. நீங்க விடுகிற மூச்சுக் காத்தோட கலந்து இதுக்குள்ளே அது உங்க ரத்தத்துக்குப் போயிருக்கும் தம்பி!''


கருப்பையாவின் சொற்கள் முருகையனை மெய் சிலிர்க்க வைத்தன. இவ்வளவு நேரமும் அவன் நிலக்கரியோடுதான் உறவாடியிருக்கிறான் என்பதோடு கருப்பையாவின் உள்ளம் எந்த அளவுக்கு நிலக்கரியுடன் ஒன்றியுள்ளது என்பதும் அவனை வியக்கச் செய்தது. மண்ணில் பயிர் வளர்த்துப் பலன் கண்டவர்கள் அந்த மண்ணோடு தங்களையும் பிணைத்துக் கொள்வது போல் இந்த நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியும் தன் நினைவோடு அதனைப் பிணைத்துக் கொண்டதை உணர்ந்தான்.

சுரங்கத்துக்குள் ஓர் ஒழுங்



கோடு, கட்டுப்பாட்டோடு, கவனத்தோடு நடந்து செல்ல வேண்டி யிருந்தது. நகரும் கம்பியில் கால்களைக் கொடுத்து விடாமல், சதுப்பு நிலப்பகுதியில் சறுக்கி விழாமல், பக்கத்துப் பாறைகளில் மோதிக் கொள்ளாமல், வழியில் கிடந்த துணுக்குகளின் மேல் இடறி விழாமல் எதிலும் நிதானம் தேவை என்று தோன்றியது.

ஒரு வகையில் பார்த்தால் அது போர்க்களம்தான். மனிதன் இயற்கையை வென்று தனக்கு அடிமையாக்கிக் கொள்வதற்காகத் தொடங்கியுள்ள போர்க்களம். ஆனால் இயற்



வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும்

நிவாரணம் பெற

ஸாரிடான் 'ரோஷ்'

சாப்பிடுங்கள் !





ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும், ஸாரிடான் அதி விரைவில் நிவாரணம் அளிக்கிறது. அதன் மும்முனை சக்தி வலியைப் போக்குகிறது, ஆசுவாசப்படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது. தலைவலி, உடல்வலி, பல்வலி, ஜுரம் வரும் போலிருப்பது, சாதாரண உடல் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். அது துரிதமாக, நிச்சயமாக, கெடுதல் எதுவுமின்றி, வேலை செய்கிறது. பெரியவர்களுக்கு ஒரு வில்லை ஸாரிடான் ஒரு பூர்த்தியான டோஸ். குழந்தைகளுக்கு ½ லிருந்து ¾ வில்லை வரை கொடுக்கலாம்.

'ரோஷ்' தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிபூட்டர்கள் : வால்டாஸ் லிமிடெட்

IWT/VT-3522

கையும் அவ்வளவு எளிதாக மனிதனுக்குப் பணிய மறுக்கிறது. திரும்பிய பக்கமெங்கும், மேலும் கீழும் அவனுக்கு ஆபத்துக்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு அவனைப் பயமுறுத்தப் பார்க்கிறது. சமயங்களில் அவனைச் சாடித் தள்ளவும் தவறுவதில்லை.

இத்தகைய நினைவுகளுடன் நடந்து சென்ற முருகையனின் செவிகளில் இடியோசையைக் காட்டிலும் பயங்கரமான ஒலி கேட்டது. மறுகணமே பாறைகள் கடகடவென்று சிதறி விழுந்தன. அத்துடன் மூச்சை அடைக்கும் ஒரு வகைப் புகை மண்டலமும் எழும்பியது.

அத்தியாயம் மூன்று

முதல் நாள் அனுபவம்

கருப்பையாவை இறுகப் பற்றிக்கொண்ட முருகையன் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தான். அதற்குள் என்னவெல்லாமோ நினைவுகள் அவனிடம் தோன்றி மறைந்து விட்டன. திடீரென்று அவனுக்கு மூச்சுத் திணறியது; கண்கள் தெரியவில்லை: வேர்த்துக் கொட்டியது. ஆனால் இவ்வளவிலும் அவன் தன் விளக்கையும் கழியையும் மட்டிலும் பிடியிலிருந்து நழுவ விட்டு விடவில்லை.

கருப்பையாவோ எதுவுமே நடைபெறாதது போல் தன்னுடைய வழக்கமான சிரிப்பொலியை உதிர்த்துக்கொண்டிருந்தான்.

''என்ன இது!''

''இப்பத்தான் நம்ப கரி வெட்டுகிற இடத்துக்குப் பக்கத்திலே வந்திருக்கோம். வெடிமருந்து வைச்சு நிலக்கரிப் பாளத்தைப் பிளந்து தள்ளுறாங்க.''

''வெடிமருந்தா?''

''வாங்க தம்பி! வந்து நேரிலே பாருங்க; பார்த்தால்தான் உங்களுக்கு விஷயம் புரியும்'' என்று வேலை நடைபெறும் இடத்துக்கே அழைத்துச் சென்றான் கருப்பையா. வெடித்துச் சிதறிய பாளங்களைச் சில தொழிலாளர்கள் அருகில் நின்ற இரும்பு வண்டிக்குள் தூக்கிப் போட்டு நிரப்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் கூரான சிற்றுளியால் நிலக்கரிப் பாறையில் செதுக்கிக்கொண்டிருந்தார்கள். நீண்டதொரு கோடு போல் பாறையில் பள்ளம் தோண்டுவதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன. சிற்றுளிகள் ஓயாமல் ஒழியாமல் பாறைகளைத் தாக்கிப் பள்ளம் விழச் செய்துகொண்டிருந்தன.

''அப்படி அப்படியே வெட்டி எடுப்பதில்லையா?''

''அது நடக்கக் கூடிய காரியம் இல்லை தம்பி!'' என்றான் கருப்பையா. ''பாறைகளிலே பள்ளம் தோண்டி வெடிமருந்து வைக்க உடைக்கிறப்பிலேதான் இங்கேயும் நடக்குது. நாலா பக்கத்திலேயும் உளியாலே தோண்டி எடுத்து விட்டு, பிறகு மத்தியிலேயும் துளைகளைப் போடுவாங்க. அந்தத் துளைகளிலே வெடிமருந்து வச்சு, நெருப்பும் பத்த விட்டு, எல்லாரும் தொலைவிலே ஒதுங்கிப் போயிடுவாங்க. பிறகு பாறை சிதறி விழுந்தப்புறம் வண்டியிலே நிரப்பி மேலே அனுப்பிவிட வேண்டியதுதான்.''

''சிரமமான வேலைதான்'' என்றான் முருகையன்.


''ஆரம்பத்திலே எதுவும் அப்படித்தான் இருக்கும். பிறகு எல்லாம் போகப் போகச் சரியாகப் போயிடும். நானும் பத்து வருஷங்கள் இப்படிக் கரி உடைச்சிப்பிட்டுத்தான் இப்போ மேல் ஆள் வேலைக்கு வந்திருக்கிறேன். நீங்க கொஞ்சம் படிச்சிருக்கிங்க போல இருக்குது. அதனாலேதான் எடுத்தவுடனே உங்களுக்கு இந்த வேலை கொடுத்திருக்காங்க. சீக்கிரம் நீங்க இன்னும் மேலே போயிடுவீங்க, பாருங்க!''

முருகையன் சிரித்துக் கொண்டான்.

''ஆமாம், தம்பி! படிச்சவங்க இந்த வேலைக்கு வர்றதுக்குப் பயந்துக்கிட்டுத் தொடை நடுங்கிறப்ப, நீங்க துணிஞ்சு வந்திருக்கிங்களே!''

முருகையன் அவனிடம் தான் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டான். நிலக்கரி உடைப்பவர்கள், வண்டியில் அள்ளி நிரப்புகிறவர்கள், வண்டியிழுப்பவர்கள் — இப்படிப் பலதரப்பட்ட தொழிலாளர்களை மேற்பார்வை செய்ய வேண்டிய பொறுப்பு அவனுக்கு. சுரங்கத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் அவன் சுற்றி வந்து வேலைகளைக் கண்காணிக்க வேண்டும்.

கருப்பையா அவனைத் தனது பகுதியிலுள்ள மற்றச் சுரங்கக் குகைகளுக்கு அழைத்துச் சென்றான். தரைக்குக் கீழே, நிலக்கரியையே வானமாகவும் பூமியாகவும் மதிற்சுவர்களாகவும் கொண்ட சிறியதொரு நகரமே உருவாகியிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. தேன் கூட்டின் உட்பகுதி போன்ற நூற்றுக் கணக்கான அறைக் கூடங்கள் சுரங்கத்



மானேஜர்: நாளை ஒருநாள் மட்டும் நீங்கள் மானேஜராகவும் நான் ஹெட் கிளார்க்காகவும் இருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். மானேஜர் ஆனவுடன் நீங்கள் முதலில் என்ன காரியம் செய்வீர்கள்?

ஹெட் கிளார்க்: உடனே ஹெட் கிளார்க்கை டிஸ்மிஸ் செய்து விட்டு மறு காரியம் பார்ப்பேன்!

துக்குள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நெடுஞ்சாலைகளைப் போலவும், சிறு சிறு பாதைகளைப்போலவும் குறுக்கும் நெடுக்கும் பல பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மனிதர்கள் கைகளில் விளக்குகளுடன் தனித் தனியாகச் சிறு பகுதிகளாகப் பிரிந்து வேலை செய்த காட்சி அற்புதக் காட்சியாக இருந்தது.

பார்ப்பதற்கு இனிய காட்சியாக அது இருந்தாலும் உழைத்தவர்களுக்கு அது எப்படி இருந்தது என்பதை அவனால் உணர முடிந்தது. ஒரு முறை சில குகைகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வருவதற்குள்ளாகவே ஓய்ந்து போய் விட்டான் முருகையன். கருப்பையா கையோடு கொண்டுவந்திருந்த உணவை இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். பிறகு மறுபடியும் கால் ஓயும் வரை சுற்ற வேண்டியதிருந்தது.

மாலை நேரத்தில் வேலை முடிந்த தற்கான மணியோசை கேட்டது. தொழிலாளர்கள் அனைவரும் அதுவரை வேலை செய்த களைப்பை யெல்லாம் மறந்துவிட்டு உற்சாகத்துடன் திரும்பத் தொடங்கினார்கள். சுரங்கத்துக்குள்ளாகவே வெகு தூரம் நடந்து வந்து, இயந்திரப் பெட்டிக்காகக் காத்து நின்றார்கள்.

கருப்பையாவுடன் முருகையன் சுரங்கத்துக்கு வெளியில் வந்தான். இரண்டு உலகங்களும் முற்றிலும் வெவ்வேறு உலகங்களாகத் தோற்றம் அளித்தன. காற்று, கதிரொளி, பசுமை நிறைந்த செடிகொடிகள் இவை யனைத்தையும் புதிய கண்கொண்டு பார்த்தான் முருகையன். இனம் புரியாத ஓர் இன்ப ஊற்று அவன் உள்ளத்தில் விருந்து பொங்கியது. மேலே விரிந்து கிடந்த பரந்த உலகத்தில் வாழ்வதற்காக, கீழே ஆழ்ந்திருந்த பாதாள உலகத்தில் உழைத்துத்தான் ஆக வேண்டும் என்றால், அதை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்கலாமே!

கருப்பையா தொழிலாளர்களுக்காக இருந்த குளிக்கும் அறைகள் ஒன்றுக்குள் புகுந்தான். வெளியில் குளிப்பதற்காக இன்னும் பலர் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே வேடிக்கையாயிருந்தது முருகையனுக்கு. தன்னுடைய உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தால் அது எப்படி யிருக்கும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்று அங்கே குளித்துக் கொள்ளலாம் என்று முகத்தை மட்டும் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு வேகமாகக் கிளம்பினான்.

குறுக்கே இருந்த சிறிய தேக்கு மரச் சோலையைக் கடந்து சென்று விட்டால் பிறகு வீட்டை எட்டிப் பிடித்து விடலாம். சோலைக்குள் புகுந்த முருகையன் அதன் அழகில் ஒருகணம் மனத்தைப் பறிகொடுத்து விட்டு நிதானமாக நடந்தான். வெள்ளை நிறத் தேக்கு மலர்கள் வழி நெடுகிலும் உதிர்ந்திருந்தன. மாலைக் காற்றை மணம் கொண்ட மட்டும் இழுத்து நெஞ்சில் நிரப்பிக் கொண்டான் அவன்.


சோலையில் குறுக்கிட்ட மற்றொரு ஒற்றையடிப் பாதை வழியே அங்கு வந்து கொண்டிருந்தாள் சாந்தா. முருகையன் அவளைத் தெரிந்து கொண்டான். ஆனால் அவள் அவனைப் பார்த்தாளே தவிர, இனம் கண்டு கொள்ளவில்லை. முருகையன் சிரித்தான். நெற்றியைச் சுருக்கி அவனைப் பார்த்து விட்டுத் திகைப்படைந்து நின்றாள் சாந்தா.


"யார், நீங்களா!"

"ஏன், தெரியவில்லையா?"

சாந்தாவின் கண்கள் இமைப்பை மறந்தன. அவளது விழிகளில் பனித் திரை படர்ந்தது. கண்ணீர்த் துளியொன்று அவளையறியாது நழுவிக் கன்னத்தில் உருண்டது.

செல்வச் சீமானின் பங்களாவி லிருந்து கொண்டு, புத்தம் புதிய காரில், சென்னையில் குதூகலத்தோடு உலவி வந்த அதே முருகையன்தானா இந்தச் சுரங்கத் தொழிலாளி? (தொடரும்)





CF-STH-

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

படித்துப்  பாருங்கள்

I Meet Rajaji

ஒரு சித்திர வடிவை வரைவதும், மனத்தத்துவ ஆராய்ச்சியில் இறங்குவதும் எழுத்தாளர்களுக்குப் பிடித்தமான செயல்கள். முக்கியமாக மேற்கூறிய இரண்டிற்கும் தகுதியாயுள்ள பொருள் கிடைத்து விட்டாலோ கேட்க வேண்டியதில்லை; எழுத்தாளர்களுக்குத் தங்கள் புத்தி சாதுரியத்தையும், எழுத்து வன்மையையும் காட்ட நல்ல சந்தர்ப்பம் வாய்த்து விடுகிறது.

நல்ல ரசிகருள்ளங்கள் நோக்க ராஜாஜி ஓர் அருமையான பாத்திரம். சீலம், பண்பு, நுட்பமான புத்தி, தைரியம், ஆத்ம பலம் இவ்வளவும் கொண்ட ஒரு மனிதர் கிடைத்தால், எழுத்தாளர்களின் திறமைக்குச் சோதனைதான் மூளுமே தவிர நல்ல பொருள் கிடைத்து விட்டதெனத் திருப்தி ஏற்பட வழி இல்லை. ராஜாஜியைப் பொருத்த வரையில் அவரைப் படமாக வரைவதென்பது சுலபமல்ல. கவனித்தால், பயிற்சி பெற்றவர்களும் சறுக்கி விழுந்துவிடக் கூடிய சில நுண்ணிய முரண்பாடுகள் கலந்த மனப்போக்கு அவரிடம் இருப்பது மட்டும்தான் முதலில் புலனாகும். முழுவதும் அவரை அறிந்துகொள்ளவோ, அல்லது அவரிடம் அறிந்ததைப் பிறர் மனத்தில் பதிய வைக்கவோ உண்மையில் எழுதுபவனுக்கும் தனிச் சக்தி இருக்கத்தான் வேண்டும்.

ராஜாஜியைப் பற்றி எழுத முற்படுவோருக்கு, அவரால் சகாய மேற்படுவதற்குப் பதிலாக, சில தடைகளும் உண்டாகும் என்பதை உணருகையில் அவரை மையமாக வைத்து ஏன் எழுதத் தொடங்கினோம் என்றுதான் எந்த எழுத்தாளனுக்கும் தோன்றும்.

தைரியம் புருஷ லட்சணம் என்பார்கள். தைரியம் ஸ்திரீ லட்சணமாயும் இக்காலத்தில் அமைவதைப் பார்க்கிறோம். அதிலும் மேல் நாட்டில் ஆணும் பெண்ணும் எதையாவது மேற்கொண்டால் பிற்பாடு தளராத ஊக்கத்துடன் வேலை செய்வதை நாம் கவனித்துத்தான் வருகிறோம். அம்மாதிரிப் பெண்மணிகளில் ஒருவரே மோனிக்கா ஃபெல்டன் என்னும் ஆங்கில மாது. எந்த ஒரு குறிப்பிட்ட நோக்கமும் இன்றி இந்த நாட்டுக்கு 1956-ம் ஆண்டில் வந்தார். ராஜாஜியைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும், அவைகளைக் கோவைப்படுத்தி ஒரு நல்ல வாழ்க்கை வரலாறு எழுதவும் முயன்று பிறகு அதையே தமது முக்கிய நோக்கமாகக் கொண்டவர். ஆனால் ராஜாஜி இவ்விஷயத்தில் எவருக்கும் சகாயம் செய்ய முன்வர மறுப்பது தெரிந்த தாயிற்றே! ஆகையால் படுதோல்வியே ஏற்படும் என நினைக்க இடம் உண்டாயிற்று. முதல் பேட்டியிலேயே ராஜாஜி அவரை மன ஆயாசத்துக்கு உட்படுத்தி விட்டார். "என் சரித்திரம் எழுதும் விஷயத்தில் என்னால் உங்களுக்கு உபகாரம் கிடைக்காது. உங்களால் இயலாததைச் செய்ய முனைகிறீர்கள். மேலும், உலகமிருக்கும் தற்கால நிலையில் தனி நபர்களின் வாழ்க்கை வரலாறுகளால் ஏதும் பிரயோசனமிருக்காது" என்று கூறிக் கதவை அழுத்திச் சாத்தி விட்டார். ஆனாலும் மோனிக்கா துளியும் அதைரியப்படவில்லை என்பதற்கு அவர் எழுதியுள்ள 193 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகமே சான்று.

ராஜாஜியை நேரில் சந்தித்து அவரிடம் பேச்சுக் கொடுத்து, வேண்டிய பல விஷயங்களுக்கு அவர் கூறும் பதில்களை நுட்பமாயும், ஆராயும் ஆற்றலுடனும் எடுத்துரைக்கும் வன்மை இப் பெண்மணிக்கு நிறைய இருப்பதே இவர் தொடங்கிய முயற்சிக்கு வெற்றிக்குறியாகியது. அரசியலில் முக்கியமாய் அவருக்குள்ள சில சொந்த திடமான கருத்துக்கள் துழாவி ஆராயப்பட்டிருக்கின்றன இப்புத்தகத்தில். பலமான எதிர்க் கட்சியொன்று சட்டசபைகளில் இருக்க வேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தும் முறையை இங்கு காணலாம். உலகம் இன்று சிரமப்படும் தறுவாயில் முக்கியமாய் ருஷியா தேசம் செய்யக்கூடிய உபகாரத்தை அவர் விடாமல் அங்குள்ள தலைவர்களுக்கு எவ்விதம் எச்சரிக்கிறார் என்பதையும் இங்கு அறியலாம். மேலும், ராஜாஜியின் சிரிப்பு, பரிகாசம், தன்னம்பிக்கை, எங்கோ உள்ளதொன்றை ஆழமாய்க் காணும் அவருடைய ஆற்றல், கடவுள், சமயம், பக்தி, இவைகளில் அவருடைய நாட்டம், சந்தோஷம், துக்கம், இவைகள் இரண்டையுமே விலக்கப் பாடுபடும் அவருடைய ஸ்திதப் பிரக்ஞை — இன்னும் — என்னவெல்லாம் அவரிடம் இருக்கின்றன என்பதை அவரே எடுத்துக் காண்பிக்காத நிலையில் மோனிக்கா கவனமாய்க் கண்டு பிடித்து அவற்றைப் புடமிட்டு எடை போட்டு நமக்குக் காட்டியிருக்கிறார் இங்கு.



ஸ்ரீமதி மோனிக்கா ஃபெல்டன்

இடை இடையே டில்லி, சென்னை, கல்கத்தா, ஹைதராபாத், மதுரை, மாயூரம் — போன்ற பல இடங்களுக்கு இவர் ராஜாஜியுடன் சென்று, ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள், முக்கியமாய்ச் சாமான்ய மக்கள் ராஜாஜியைப் பற்றிக் கூறுபவைகளையும் நமக்கு அளித்துள்ளார். ராஜாஜியின் நெருங்கிய சில நண்பர்களான, ஏ. வி. ராமன், காளா கப்பாராவ், ஆர். வி. கிருஷ்ணய்யர் இவர்களைப் பற்றியும் நமக்கு இவர் தரும் சிற்சில தகவல்கள் ருசியாயுள்ளன.

சென்னையைப் பார்த்ததும் தோன்றக்கூடிய சில எண்ணங்களையும், கோவில்களின் கோபுரங்கள் இன்று பெற்றுள்ள வண்ணப் பூச்சுக்களைப் பற்றிய அபிப்பிராயங்களையும் நம் மனமும் ஆமோதிக்கும் வகையில் இங்கு எழுதி யிருப்பதைக் கவனிக்கலாம்.

புத்தகத்தைக் கையில் எடுத்தால் கீழே வைக்கத் தோன்றாத முறையில் உருவாக்கியிருப்பதை முதலில் மெச்ச வேண்டும். அடுத்தது, ராஜாஜியின் உருவம், மனம், பாவனை எல்லாம் சம்பாஷணை வடிவிலேயே விளக்கம் பெறுகின்றன. மிகச் சுலபமாய் எழுதியிருப்பதுபோல் தோன்றுவதே மிகப் பிரயாசையின் பிறகு எழுதப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. ஞாபகசக்தி அதிகமிருந்தால்தான் இவ்விதம் நடந்த சம்பாஷணைகளை உள்ளது உள்ளபடியே பிற்பாடு எழுத்தில் வடிக்க இயலும். ஸ்ரீமதி மோனிக்கா கீபெல்டன் ராஜாஜியைச் சந்தித்தது வீண் போகவில்லை. மோனிக்காவுக்கு ஏற்பட்ட பயனை விடவும், பொது மக்களுக்குப் பயன் ஏற்பட இடமிருக்கிறது.

புத்தகம் அழகான அச்சும், அட்டையும் பெற்றிருப்பதையும் பாராட்டுகிறோம்.

பிரசுரம்: MacMillan & Co., Madras - 2. விலை ரூ. 15/- — கி. சந்திரசேகரன்

ஐசுவரியம்

ஒரு காலத்தில் தமிழ் நாட்டுத் தவிடு, வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகி அழகான டின்களில் அதிக விலையில் பிஸ்கட்டுகளாக இறக்குமதியாகிக் கொண்டு வந்தது. இங்கே விளையும் பஞ்சு கடல் கடந்து போய் விலை உயர்ந்த துணிகளாகத் திரும்பி வந்தது. சுய தேவைக்குப் பொருளை நாமே தயாரித்துக் கொள்ள முடியாத அவலநிலையில் இருந்தோம். பித்தான் முதல் கார் வரை பெப்பர்மிட் முதல் குழந்தை உணவு வரை அந்நியர் கையை எதிர்பார்த்தோம்.

இன்று சுதந்திரம் அடைந்து விட்டோம். நமக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களைச் செய்து கொள்ளலாம். மத்தியதரக் குடும்பங்கள் இன்றும் அந்தரத்தில்தான் இருக்கின்றன. அவர்கள் வருவாயை அதிகப்படுத்திக் கொள்ளக் குடிசைத் தொழில் இன்றியமையாதது. 'ஐசுவரியம்' என்ற புத்தகத்தில் இருநூறு கைத்தொழில் முறைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. முதலீடு அதிகமின்றித் தைலம், பற்பொடி, இனிய பானங்கள், ஊதுபத்தி போன்ற வாசனைச் சாமான்கள், எழுதும் மை, சில மருந்துகள் எல்லாம் சுலபமாகத் தயார் செய்யும் முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. வியாபாரத்தில் போலிச் சரக்குகளைக் கொடுத்து ஏமாற்றும் சமூகப் புல்லுருவிகள் மலிந்த இந்நாட்களில் சின்னஞ் சிறு பொருள்களைச் செலவின்றித் தயாரித்து நாம் உபயோகிக்கவும், நியாயமான முறையில் விற்று, நாணயமான வியாபாரம் செய்து பொருள் சம்பாதிக்கவும் இந்தப் புத்தகம் மிகவும் உபயோகமானது.

ஆசிரியர்: கே. ஜி. ராஜு. வெளியீடு: வாணி பதிப்பகம் சென்னை-1, விலை: ரூ. 4 0.

கன்னையனுக்குக் கடைசி 'டிரிப்' அது. முடிந்ததும் ஆபீஸுக்குப் போய்க் கணக்கு வழக்குகளை வசூலான தொகையுடன் தீர்த்து விட்டுக் கணக்கை முடிக்க வேண்டும். பிறகு கடைசியாக இரவில் வெளியூர் போகும் பஸ்ஸில் ஏறிப் பல்லாவரத்திலுள்ள தன் வீட்டுக்குச் செல்ல வேண்டும் கன்னையன்.

கன்னையனுக்கு உடனே வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்கிற துடிப்பு அதிகமாக இருந்தது. அன்று அவன் தங்கை சுசீலா மவுண்ட் ரோடிலுள்ள ஒரு கம்பெனியில் மாலை ஐந்து மணி அளவில் 'இண்டர்வியூ'வுக்காக அழைக்கப்பட்டிருந்தாள். அந்த 'இண்டர்வியூ'வின் முடிவு என்னவாயிற்று என்றறியும் ஆவல் கன்னையனுக்கு அதிகமாகி விட்டது. அவளுக்கு வேலை கிடைத்து விட்டால் அதில் கிடைக்கும் ஊதியத்தை அப்படியே சேமித்து வந்தால் அது ஒரு கணிசமான தொகையாகி அவளுடைய திருமணத்துக்குப் பெரிதும் பயன்படுமல்லவா?



கன்னையனின் சிந்தனையைப் போல பஸ்ஸும் ஓடிக்கொண்டிருந்தது. பஸ்ஸில் அதிகக் கூட்டமில்லை. பத்துப் பன்னிரண்டு பேர்கள் தானிருந்தார்கள். அதனால் டிக்கட் கொடுக்கும் வேலைகூடச் சுலபமாகத்தானிருந்தது. எல்லோருக்கும் டிக்கட் வழங்கி விட்டதனால் இருக்கையில் வந்து அமர்ந்து கைக் கடிகாரத்தைப் பார்த்தான் கன்னையன்.

மணி ஒன்பதே முக்கால் என்பதைக் காட்டியது அது. எல்லாத் தியேட்டர்களிலும் சினிமாக் காட்சிகள் முடிந்திருக்கும். மவுண்ட் ரோடு ஸ்டாப்பிங்குகளில் என் போட இடமில்லாதபடி கூட்டமிருக்குமே! அந்தக் கூட்டம் எல்லாம் எப்பொழுது பஸ்ஸில் ஏறி, எப்போது டிக்கட் கொடுத்து முடித்து, எப்போது ஆபீசுக்குப் போய்க் கணக்கு வழக்குகளைத் தீர்த்து, எப்போது வீட்டுக்குப்போவது?

ஒரு ஜாமத்துக்கா?

சட்டைப் பையிலிருந்து பிகிலை எடுத்து இரண்டு முறை ஊதினான் கன்னையன்.

கண்ணனின் குழலோசையைக் கேட்டுக் கோபியர்களுக்குக் குஷி பிறந்து விடும் என்பது உண்மையோ பொய்யோ, கண்டக்டரின் இரட்டைப் பிகிலின் ஒலியைக் கேட்டதும் சென்னை நகரப் பஸ் டிரைவர்களுக்கு மட்டும் குஷி பிறந்து விடுகிறது என்பது என்னவோ உண்மைதான்!

படுவேகமாகப் பறந்தது பஸ்!

ஆர்ட்ஸ் காலேஜ் ஆயிரம்விளக்கு ஸ்டாப்புகள் அரை நொடியில் மறைந்தன. அங்கு குழுமியிருந்த மக்கள் கைகளை ஆட்டியும் கூச்சலிட்டும் ஓடும் பஸ்ஸை நிறுத்த முயன்றனர். அவை கண்டக்டர் கன்னையனின் பிகிலின் இரட்டை ஒலியைவிட அதிக சக்தி வாய்ந்தவை யல்லவே

ஜெமினி திருப்பத்தில் இருளோடு இருளாய்ப் பஸ் ஸ்டாப்பிங் கம்பத்தின் மீது சாய்ந்து கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண் ஒருத்தி. திருப்பத்தில் கண்ணைப் பறிக்கும் ஒளி விளக்குடன் வந்து கொண்டிருக்கும் பஸ்ஸைக் கண்டு அதில் ஏறத் தயாரானாள்.

''ஜெமினி! ஜெமினி!'' என்று கத்தினான் கன்னையன்.

பஸ்ஸிலிருந்து எவரும் 'ஹோல்டான்' என்று கத்தவில்லை.

கன்னையன் தன் பிகிலே எடுத்து இரு முறை ஊதினான். இருளைக் கிழித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தது பஸ்!

''ஐயா! ஐயா! நிறுத்தய்யா!''

பாதையோரத்திலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. பிரயாணிகள் ஒன்றிரண்டு பேர்கள் வெளியே எட்டிப் பார்த்தனர்.

''கண்டக்டர்! பஸ்ஸை நிறுத்து!'' என்று கத்தினார் அவர்களில் ஒருவர்.

''நீ இறங்கப் போறியா?'' என்று கேட்டான் கன்னையன்.

''இல்லே!''

''பின்னே ஏன் பஸ்ஸை நிறுத்த வேணும்?''

பஸ் கிருஷ்ணமாச்சாரி ஸ்டாப்பிங்குக்கு 'டாடா' கூறி விட்டு ஓடிக் கொண்டிருந்தது.

''பொம்பளை ஒருத்தி தன்னந்தனியா நிக்கறதை நீ பார்க்கல்லே?'' என்றார் பிரயாணி.

''பார்த்தா?''

''ஏத்திக்கிடறது தானே?''

''இடமில்லே!'' என்றான் கன்னையன். எவ்வளவு பெரிய பொய் எதிராளிகளையெல்லாம் முட்டாளாக்கும் பச்சைப் பொய். சொல்லும் பொழுது கன்னையனுக்குக் குரல் நடுங்கியது. உடம்பெல்லாம் 'குப்'பென்று வியர்த்துக் கொட்டியது. பொய் பேசினால் இவ்வளவு அவஸ்தையா?

''இடம் பஸ்ஸிலே இருக்கு! உன் மனசிலே தான் இடமில்லே!'' என்றார் பிரயாணி.

கன்னையன் அவரை ஒருதடவை முறைத்துப் பார்த்தான்.

''மவுண்ட் ரோடு ஸ்டாப்பிங் ஒண்ணுலேகூட நீ பஸ்ஸை நிறுத்தலே. ஒவ்வொரு ஸ்டாப்பிங்கிலேயும் ஏகப்பட்ட சனம். அவங்களை ஏத்திக்கிட்டா என்ன? டிக்கெட் கொடுக்கிற வேலை அதிகம்னுதானே நீ ஒருத்தரையுமே ஏத்தாம 'டபுள்' விசிலு அடிச்சிகிட்டுப் பஸ்ஸை ஓட்டறே! உங்களையெல்லாம் கேட்க ஆளில்லே! கம்பெனி பஸ்ஸா?''

பஸ் போய்க் கொண்டிருந்தது.

''அதிகம் பேசாதேய்யா!'' என்று மடக்கினான் கன்னையன்.

''அக்கா, தங்கச்சி என்றுகூடப் பிறந்தவர்கள் இருந்திருந்தால் நீ அவளை பஸ்ஸிலே ஏத்திக் கிட்டிருப்பே. இருபது நிமிசத்துக்கு ஒரு பஸ்னு பேப்பரிலே போட்டுட்டான்! சேர்ந்தாற்போல் நாலு பஸ் ஒண்ணாப் போகுது. ஒண்ணு வருது! நடுச் சாமம் ஆகப் போவுது. அந்தப் பொம்பிளை என்னய்யா செய்வா? பின்னைத்தாச்சி! நிற்கக்கூடச் சக்தியில்லாமல் அவள் நின்னுக்கிட்டிருந்தது உன் கண்ணிலே படலே?''

தனக்குப் பின்னேயுள்ள ஜன்னலில் பதித்துள்ள கண்ணாடி வழியாகப் பின்னாடி இருளில் மூழ்கிக் கிடக்கும் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையைப் பார்த்தான் கன்னையன். ஜெமினி ஸ்டாப்பிங் பார்வையிலிருந்து மறைந்து விட்டது. ஸ்டர்லிங் ரோடு நெருங்கிக் கொண்டிருந்தது. ஒரு விநாடி நேரம் பார்வையில் பட்ட அந்தப் பெண்ணின் மங்கலான உருவம் கன்னையனின் மனத்தைக் குடைந்தது.

'பின்னைத்தாச்சியா அந்தப் பெண்?'

நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் ஸ்டாப்பிங்கில் அந்தப் பிரயாணி கண்டக்டர் கன்னையனைத் திட்டிக் கொண்டே இறங்கினார்.

''உன் மாதிரியான இரக்கமில்லாத பாவிகளை இன்னிக்கி இல்லாவிட்டாலும் என்னிக்காவது கேட்காமல் போகாது!''

''கேட்கட்டும். அதுக்கும் 'டபுள்' விசில் அடிக்க எனக்குத் தெரியும்!'' என்று ஓடுகிற பஸ்ஸிலிருந்தே பதிலுக்கு இரைந்தான்.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. ஜனசஞ்சாரமும், போக்குவரத்தும் குறைந்து கலியாணம் கழிந்த வீட்டைப் போல் 'சோ'வென்று கிடந்தது சாலை.

கன்னையனின் நினைவெல்லாம் தங்கை கமலாவின் மீதேயிருந்தது.



இடம் இருந்தும்..

கே. வேங்கடராமன்

பாழாய்ப்போன கம்பெனிக்காரன் 'இண்டர்வியூ'வை ஏன்தான் மாலையில் ஐந்து மணிக்கு மேலே வைத்துத் தொலைத்தானோ? ஒருபெண், கல்யாணமாகாதவள் அந்த நேரத்தில் எப்படித் தன்னந் தனியே வந்துபோக முடியும்?

தன் தங்கையின் கெட்டிக்காரத்தனம் நினைவுக்கு வந்தது கன்னையனுக்கு. அவள் தங்கை சுசீலா படிப்பில் சூட்டிகை. ஸ்கூல் பைனல் பரீட்சையில் கலை கலையாக மார்க் வாங்கித் தேறியிருந்தாள். கையெழுத்தை இன்று முழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். மணி மணியாக இருக்கும். போதாததற்கு டைப்ரைட்டிங் ஹையரும், ஷார்ட்ஹாண்ட் லோயரும் பாஸ் பண்ணியிருந்தாள். ஹிந்திப் பரீட்சை ஒன்றையும் விட்டு வைக்கவில்லை அவள். சுசீலாவுக்குக் கண்டிப்பாக வேலை கிடைக்கும் என்று நம்பினான் கன்னையன். இத்தனை தகுதியும் யோக்கியதாம்சமும் உள்ள பெண்ணுக்கு வேலை கிடைக்காதிருக்குமா?

பஸ்ஸைப் போலவே தன் சிந்தனையும் ஓட, 'டபுள்' விசில் கொடுத்தான் கன்னையன்.

சுசீலா அவனுக்கு ஒரே தங்கை. அவனுடைய சம்பளம் தாயையும் தங்கையையும் தன்னையும் பராமரித்துக் கொள்ளவே போதும் போதாமலும் இருந்தது கன்னையனுக்கு. சுசீலாவைப் படிக்க வைத்ததன் நோக்கமே அவள் எங்கேயாவது வேலை பார்த்துச் சம்பாதிக்கட்டும், சம்பாத்தியத்தை மீத்து அவள் கல்யாணத்தை 'ஜாம் ஜாம்' என்று ஒரு குறையும் இல்லாது நடத்திவிடத்தான். அவன் போட்டிருக்கும் திட்டப்படி நடக்க வேண்டுமானால் சுசீலாவுக்கு வேலை கிடைத்தாக வேண்டும். இன்று அவள் 'இண்டர்வியூ'வுக்குப் போயிருக்கும் வேலை கிடைத்தால் மாதம் நூற்று நாற்பது முள்ளங்கிப் பத்தையைப் போல் கிடைக்கும். அந்த 'இண்டர்வியூ'வின் முடிவு என்ன என்று அறியக் கன்னையனின் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

தினசரி நூற்றுக்கணக்கான மனிதர்களைப் பஸ்ஸில் ஏற்றிக் கொள்ளுகிறான் கன்னையன். தினசரி நூற்றுக்கணக்கான மனிதர்களைக் கீழே இறக்கி விடுகிறான் கன்னையன். அவன் யாரை நினைவில் வைத்துக் கொள்வான்?

ஜெமினி ஸ்டாப்பிங்கில் கம்பத்தோடு கம்பமாய்க் கண்ணைப் பறிக்கும் ஒளி விளக்குடன் அவனுடைய பஸ்ஸில் ஏற வந்த அந்தப் பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணைக் கன்னையன் மறந்தே போனான்.

பஸ்ஸை 'ஷெட்டி'ல் கொண்டு போய்த் தள்ளி விட்டு ஆபீஸில் பணத்தைக் கட்டிக் கணக்கை முடித்துக் கடைசியாகத் தாம்பரம் போகிற பஸ்ஸில் கன்னையன் ஏறும்பொழுது இரவு மணி பதினொன்றாகி விட்டது.

பஸ்ஸைவிட வேகமாக வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது கன்னையனின் மனம். வீட்டின் வாசலில் அவன் தங்கை சுசீலா அகமும், முகமும் மலர அவனை மகிழ்விக்கும் செய்தியைச் சொல்லக் காத்திருப்பாளே!



மானேஜர்: டேய் கவர்களை யெல்லாம் நீ ஒட்டி விட்டாய். கடைசியில் இந்த ஸ்டாம்புகளை நானேதான் ஒட்டிக்கொள்ளவேண்டுமா?

பியூன்: வேண்டாங்க! நீங்களை ஏன் ஒட்டிக் கொள்ளவேண்டும்? கவர்கள் மேலே ஒட்டி விடுங்கள்.

பல்லாவரம் சாலையில் பஸ் நுழைந்ததுமே அதிலிருந்து குதித்து விட்டான் கன்னையன். ஓட்டமும் நடையுமாக மாங்காளியம்மன் கோவில் தெருவில் இருக்கும் தன் வீட்டை நோக்கி ஓடுகிறான் கன்னையன்.

வீட்டின் வாசலில் அவனை வரவேற்க அவன் தங்கை மட்டும் காத்திருக்கவில்லை. அக்கம் பக்கத்து மனிதர்கள் அனைவருமே வீட்டு வாயிலில் திரளாகக் கூடியிருந்தனர்.

"என்ன? என்ன நடந்திச்சு?" என்று பதறிக் கேட்டபடி ஓடுகிறான் கன்னையன்.

"கேட்டியாடா, மகனே! உன் தங்கச்சியை எவனோ வழிமறிச்சுக் கொள்ளையடிச்சான்டா!" என்று ஓலமிட்டாள் கன்னையனின் தாயார்.

கன்னையன் தன் தங்கையைப் பார்த்தான். அவன் கஷ்டப்பட்டு வாயையும் வயிற்றையும் கட்டிச் செய்து போட்டிருந்த நகைகள் எல்லாம் இருக்கின்றனவா என்று பார்த்தான். காதில், கழுத்தில், கையில், மூக்கிலெல்லாம் நகைகள் அப்படி அப்படியே இருந்தன. தன் தாயார் ஏன் இப்படி அலறுகிறாள் என்பது கன்னையனுக்குப் புரியவில்லை.

"சுசீலா! என்ன நடந்திச்சு? முகத்திலே என்ன நகக் காயம்?"

விம்மலும் வெடிப்புமாகச் சொன்னாள் சுசீலா. "இண்டர்வியூ முடிய இரவு ஏழரை மணியாகி விட்டது அண்ணா! ஊருக்கு வரப் பஸ்ஸே கிடைக்கல்லே! ஒண்ணு ரெண்டு பஸ் வந்திச்சு. அதுகளிலே இடம் இருந்தும் பாவி கண்டக்டரு என்னை ஏத்திக்கலே. பஸ்ஸை அடிச்சுக்கிட்டுப் போயிட்டான். ஆயிரம்விளக்கு வரை ஒரு பஸ்ஸிலே வந்தேன். அப்புறம்வர பஸ்ஸேகிடைக்கலே! டாக்ஸியிலே வரப்பணமுமில்லே. என்னசெய்வேன் அண்ணா? நடந்தே மாம்பலம் ரயிலடிக்குப் போய் விடலாம் என்று நடந்தேன். ஒரு ஸ்டாப்பிங்கிலேயிருந்து இன்னொரு ஸ்டாப்பிங் போறதுக்குள்ளே சோதனை மாதிரி ரெண்டு மூணு பஸ்கள் ஸ்கூல் விட்டு ஓடுகிற பிள்ளைங்க மாதிரி ஓடிப் போயிடும்! நான் நடந்து கோபதி நாராயணச் செட்டி ரோட்டிலே நடந்து வர்றப்போ யாரோ ரெண்டு பேர் என்னை வழி மறிச்சாங்க! ஒருத்தன் என் தலையிலே பட்டுன்னு அடிச்சான்......!"

கன்னையனுக்குத் தன் நெஞ்சில் யாரோ ஓங்கி அடிப்பது போலிருந்தது. ஜெமினி ஸ்டாப்பிங் கம்பத்தில் சாய்ந்து, கண்ணைப் பறிக்கும் ஒளி விளக்குடன் வந்த அவனுடைய பஸ்ஸில் ஏற வந்த பூரண கர்ப்பிணியான அந்தப் பெண்ணின் வலிய கரங்களே அவன் நெஞ்சில் ஓங்கி அடித்த கரங்கள்!

"ஒருத்தன் என் வாயைப் பொத்தினான்; திமிறினேன். கை நகத்தாலே முகத்திலே பிராண்டி என் வாயைக் கைக்குட்டையாலே

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம்பெற்ற தயாரிப்பாளர்கள் :

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் மான்புபாக்சரிங் பிரைவேட் லிமிடெட்



''டேய்! உன் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லே. மாம்பலத்திலே போய் ஒரு பொய் சொல்லிவிட்டு உடனே திருவல்லிக்கேணியில் போய் மற்ெருரு பொய் சொல்லிவிட்டு மறுபடியும் டவுனுக்குப் போய் இன்னொரு பொய் சொல்லுறியாம். இதுமாதிரி மேலே மேலே எப்படியடா உன்னுல் பொய் சொல்லிக் கொண்டே அங்குமிங்கும் போக முடிகிறது.''

டேய்! தெரியாதாடா! நான் 'ஸ்கூட்டர்' ஒண்ணு வாங்கியிருக் கேண்டா!''

முடிவிட்டான். இன்னொருத்தன் கத்தியைக் காட்டி என்னுடைய கழுத்துச் சங்கிலியைக் கழற்றப்போ.........''

''கழற்றுகிறப்போ.......?''

''ஆண்டவனே வந்த மாதிரி ஒரு பஸ்ஸு வந்து என்கிட்டே நின்னுச்சி. அதிலேயிருந்து குதிச்ச கண்டக்டரைக் கண்டதும் திருட்டுப் பசங்க ஓடியே போயிட்டாங்க! அந்தக் கண்டக்டர் மட்டும் சமயத்திலே வந்து என்னைக் காப்பாத்தாட்டி என் பொருளும் போயிருக்கும். அந்தப் பொறுக்கிப்பசங்க என்ன வெல்லாம் செஞ்சிருப்பாங்களோ!'' என்றுள் கஜிளா அழுதபடியே.

''அந்தக் கண்டக்டர் பெயர் என்னம்மா?'' என்று கேட்டான் கண்ணேயன்.

''முத்தய்யாவாம்! உனக்குத் தெரியுமாமே! பஸ்ஸிலே, 'புட்போர்'லே நிற்கக்கூட இடமில்லே. அது ஸ்டாப்பிங்கூட இல்லே. ஆனுலும் அவரு என்னேப் பஸ்ஸிலே ஏத்திக்கிட்டாரு. மாம்பலம் ரயிலடி வரை வந்து தக்க துணேயோட என்னே வழி அனுப்பி வைச்சாரு அண்ணு அவரு!'' என்றுள் கஜிலா.

முத்தய்யாவின் பெயரைக் கேட்டதும் கண்ணேயனின் நெஞ்சம் பாகாய் உருகியது. இரக்கமும் கருணேயும்தான் அவன் இரு கண்கள். பிறர் துயரைத் துடைப்பதில் சிறிதும் தயங்காதவன். தியாக வாழ்வு வாழ்பவன். வருடம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் அவனுக்கு மரியாதை வாரம்தான். கனிவான பேச்சும் கண்ணியமான போக்கும் அவனுக்கு நல்ல மதிப்பை அனேவரிடமும் தேடித் தந்திருந்தன. பிரயாணிகள் அவன் வரும் பஸ் என்ருல் சந்தோஷமடைவதோடு அந்தப் பஸ்ஸில் நிச்சயம் இடம் கிடைக்கும் என்றும் நம்புவார்கள். அத்தகைய தெய்வத்துக்குச் சமமான மனிதன் தன் தங்கையைக் காப்பாற்றியதை எண்ணி மகிழ்ச்சியடைந்தான் கண்ணேயன். உடனே அவனிடம் நன்றிப் பெருக்கெடுத்தது. தன் தங்கையின் பொன் ஆபரணங்களையும், பொன்னுபரணங்களைவிடப் பெரிதும் மதிக்கத் தக்க அவளுடைய கற்பையும் காப்பாற்றியவனே நேரில் கண்டு நன்றிதெரிவிக்க வேண்டியது அவன் கடமை அல்லவா?

விடிந்ததும் விடியாததுமாய் முத்தய்யாவின் வீட்டை நோக்கிச் சென்றுன் கண்ணேயன். அப்போது முத்தய்யா வீட்டைப் பூட்டிக் கொண்டு எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய ஒரு கையில் பிளாஸ்கும் மற்ெருரு கையில் ஒரு பையும் இருந்தன.

அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான் கண்ணேயன். தன் தங்கையைத் தக்க சமயத்தில் அவன் காப்பாற்றியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முத்தய்யாவின் முகத்தைப் பார்த்தான்..

அருள் சுரக்கும் அவன் விழிகள் அழுது கொண்டிருந்தன.

''முத்தய்யா! நீ ஏன் அழுறே?''

''நான் உன் தங்கையைக் காப்பாற்றினேன் கண்ணேயா. வாஸ்தவம்தான். ஆனுல் என் மனேவியை யார் காப்பாற்றுவாங்க! தெய்வத்துக்கு அடுத்தபடியான டாக்டர்கள் கையை விரிச்சிட்டாங்களே!'' என்று கூறி அழுதான் முத்தய்யா.

''முத்தையா! நீ சொல்வது ஒண்ணும் எனக்குப் புரியலேயே! மனுஷங்களுக்குத் தெய்வமா நீ உதவி செய்யறப்போ, தெய்வம் உனக்குக் கண்டிப்பா உதவி செய்யும்! உனக்கு என்ன கஷ்டம் முத்தையா? உன் பெண்சாதிக்கு என்ன கேடு?'' என்று முத்தையாவின் கண்களைத் துடைத்தபடி கேட்டான் கண்ணேயன்.

''என் மனேவிக்கு இது எட்டாவது மாதம். நேத்திக்குத் தேனும்பேட்டையிலுள்ள அவ அம்மா வீட்டுக்குப் போயிட்டுத் திரும்பிவர ஜெமினி ஸ்டாப்பிங்கிலே மணிக் கணக்கா நின்னுக்கிட்டிருந்திருக்கா. நிறைய இடம் உள்ள பஸ் ஒண்ணு காலியா வந்தும் அவளே ஏத்திக்கிடலேயாம்! இரவு மணி பத்துக்கு மேலே ஆகிவிட்டலே, இனி பஸ்ஸுக்குக் காத்திருந்து பயனில்லே யென்று ஸ்டார்லிங் ரோடு வரை நடந்தே வந்திருக்கா. அதுக்கப்புறம் அவளாலே ஒரு அடிகூட நகர முடியலேயாம். வயத்திலே நோவு கண்டுடிச்சாம். பிளாட்பாரத்திலே மரம் கணக்கா சாஞ்சிட்டாளாம். காரிலே போன பெரிய மனுஷரு ஒருத்தரு இரக்கப்பட்டு அவளேத் தன் காரிலே எடுத்துக்கிட்டுப் போய்த் திருவல்லிக்கேணி ஆஸ்பத்திரியிலே 'அட்மிட்' செய்துப்பிட்டு எனக்குத் தகவல் கொடுத்தாரு. இராத்திரியே குறைப் பிரசவம் ஆயிடுச்சு. அவளுக்குச் சுரம் வந்திருக்கு. ஜன்னி கண்டிருக்கு! டாக்டர்கள் எல்லாம் படாதபாடு படுறுங்க!.... என்னேத் தெய்வம் மோசம் செய்யாமல் இருக்கணுமே கண்ணேயா '' என்று புலம்பிப் புலம்பி அழுதான் முத்தையா.

கண்ணேயன் அப்படியே கதிகலங்கிப் போய் நின்றுன். அவனுல் என்ன ஆறுதல் சொல்ல முடியும்? அவன் கண்களெதிரே ஜெமினி பஸ் ஸ்டாப்பில் நின்ற பின்னேத்தாய்ச்சிப் பெண் தோன்றி, உள்ளத்தைப் பிழிந்தெடுத்தாள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



'சிந்தைகவரும்
வண்ணங்களுடன்
சொந்தங்கொள்ளும்
சோப்பு!'

எங்கிருர் அழகுநட்சத்திரம்
ராகினி.



சினிமா நட்சத்திரங்களின் தூய, மெல்லிளம் அழகுசாதன சோப்

LTS. 116-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.